திருமண வயதெல்லை
நிர்ணயம் இஸ்லாமிய
ஷரீஆவுக்கு முரண்பட்டதா?

மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 416 • 29 மார்ச் 2019 வெள்ளிக்கிழமை • ரஜப் 1440 • விலை 40.00

மொஹமட் பயாஸ்

திகன முஸ்லிம்கள் மீதான வன்முறை

மனித உரிமை அறிக்கை இதுவரை வெளிவரவில்லை

கண்டி, திகன பிரதேசங்களில் முஸ்லிம்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள்மீது இதுவரைநீதி நிலைநாட்டப்படாமை குறித்து பல்வேறு தரப் பினரும் குற்றம் சாட்டி வருகின்றனர்.

(பக். 11)

இலங்கை - இந்திய இராணுவம் கூட்டாகப் பயிற்சி

இலங்கை இராணுவத்தினரும் இந்திய இராணுவத்தினரும் கூட்டாகப் பயிற்சி எடுக்கின்ற மித்ரசக்தி VI இராணுவப் பயிற்சிகள் இம்மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகி, ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. தியத்தலாவையில் நடக்கும் இந்தப் பயிற்சிகளுக்கென 11 அதிகாரிகள் உள்ளிட்ட 120 இந்திய இராணுவ வீரர்கள் இலங்கை வந்துள்ளனர். (பக். 11)

மக்களின் பங்களிப்புடனான யாப்பு உருவாக்கத்துக்கு ஏற்பாடு

புதிய அரசியல் யாப்பொன்று உருவாக்குவது தொடர் பில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் சிவில் சமூக அமைப்புக்கள் பலவும் இதற்குப் புறம்பாக யாப்பு தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

மக்கள் மைய யாப்பொன்றே இலங்கையின் நீண்ட காலப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக அமையும் என்ற கருத்தைப் பேசி வருகின்ற பல சிவில் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து மக்கள் மைய யாப்புருவாக்கத்துக்கான இயக்கம் (Movement for Making People's Constitution) என்ற (பக். 11)

பொத்துவில் கல்வி வலயம் மே 03 இல் ஆரம்பம்

நீண்ட காலமாகக் கோரப்பட்டு வந்த பொத்துவில்லுக்கான தனியான கல்வி வலயம் மே மாதம் 03 ஆம் திகதி காலை 09.00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் திறைசேரியுடனும் கல்வி அமைச்சுடனும் உரையாடியதன் பின்னர், அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு கிழக்கு மாகாணத்தில் இரண்டு புதிய கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டதன் அடிப்படையிலேயே பொத்துவிலுக்கான கல்வி வலயம் வழங்கப்பட்டுள்ளது.

(பக். 11)

ஹஜ் சட்ட மூலத்துக்கு மேலும் கால அவகாசம்

ஹஜ் உம்ரா ஏற்பாடுகள் கடந்த காலங்களில் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் நிலையில் ஹஜ் உம்ரா ஏற்பாடுகளுக் கான சட்டமொன்றை வகுப்பதற்கு முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு பொது அபிப்பிராயங்களைக் கேட்டு விடுத்திருந்த வேண்டுகோளுக்கான காலக்கெடு இம்மாதம் 06 ஆம் திகதி நிறைவுற்றிருந்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை (26) இது தொடர்பில் இறுதி முடிவொன்றை எடுப்பதற்கான கூட்டம் முஸ்லிம் சமய விவகார மற்றும் தபால் சேவைகள் அமைச்சில் நடைபெற்றது. இதன்போது (பக். 11)

ஐநா மனித உரிமை அறிக்கைக்கு இலங்கையில் தவறான விளக்கம்

கடந்த மார்ச் 20 ம் திகதி ஜெனீவா வில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் பங்கேற்க வந்திருந்த இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவொன்றுடன் தான் அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அலுவலக அறிக்கை ஒன்று தொடர்பாக மேற்கொண்ட சம்பாஷனையை இலங்கை அரசின் ஒரு முக்கிய அதிகாரி செவ்வாய்க் கிழமையன்று பத்திரிகை ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில் தவறான விதத்தில் (பக். 14)

பிறை ஆலோசனைக் குழுவின் பணிகள் மந்த கதியில்

கடந்த வருடம் நோன்புப் பெருநாள் தினத்தை தீர்மானிப்பதில் ஏற்பட்ட குளறுபடிகளைத் தொடர்ந்து முஸ்லிம் சமய விவகார அமைச்சினால் நியமிக்கப்பட்ட பிறை ஆலோசனைக் குழு தனது பணியைத் தொடர்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிகிறது.

கடந்த வருடம் நோன்புப் பெரு நாளைத் தொடர்ந்து பிறை விவகாரத்தில் ஆலோசனை வழங்குவதற்காக 07 பேர் கொண்ட உயர்பீடமொன்று (பக். 11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

எமது பெண்கள் மீது கை வைத்தும் கண்டிக்க திராணியற்ற அரசியல் தலைமைகள்!

'பெண்கள் மீது கை வைத்தால், வெட்ட வேண்டியது விரல்களையல்ல, தலையை 'என்ற திரைப்பட வசனமொன்று ஞாபகம் வருகின்றது. அவ்வசனத்தை முதலில் நினைவுபடுத்திக் கொள்வது இக்கட்டுரைக்கு மிகவும் பொருத்தமாக அமையும்.

கடந்த வெள்ளிக்கிழமை (22) ஜனாதிபதி மைத்திரி புத்தளத்துக்கு விஜயம் செய்வதையறிந்த புத்தள மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றுக்கு தயாராகியிருந்தனர். புத்தள சந்ததிகளின் எதிர்கால இருப்பை பல்வகையில் கேள்விக் குட்படுத்தும் குப்பை கொட்டும் விவகாரத்தில் ஜனாதிபதிக்கும் கணிசமான பங்கு இருப்பதால், அவரின் புத்தள வருகை யாராலுமே ஜீரணிக்க முடியாததொன்று. அவரது வருகைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவது புத்தள மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையென்றாலும் தவறாகாது. அவர் எதற்காக வந்திருப்பினும் சரியே!

முக்காட்டால் வேலி போட்ட முஸ்லிம் பெண்கள் வீதியிலிறங்கி போராடுகிறார்கள் என்றால், அது சிறிதேனும் பொறுமை காக்க முடியாத ஒரு மிலேச்சத்தனமான செயலாக இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமிராது. அந்த பெண்கள் மீது கைவைத்து, தனது வீரத்தை வெளிப்படுத்தி, தன் காரியத்தைச் சாதிக்க விளைகிறாரென்றால், அவர் எதற்கும் துணிந்துவிட்டார் என்பதே பொருள். இன்னும் நாம் பராமுகமாக இருக்க முடியாது.

அரசியல்வாதிகளிடமிருந்து ஒரு விடயத்தை சாதித்துகொள்ள எதிர்ப்பை வெளிக்காட்டுதலும் ஒரு வழிமுறையே. அன்று புத்தளம் வருகை தந்த ஜனாதிபதி மாப்பிள்ளை போன்று அலங்காரங்களோடு வரவேற்கப்பட்டிருந்தால், 'நான் புத்தளம் போனேன், அங்கே எந்த பிரச்சினையுமில்லை. இவனுகள் நாலு பேரு கொழப்புறானுகள்' என்ற சிந்தனை அவரது உள்ளத்தில் உதித்திருக்கும். இப்போது அவர் இவ்வாறு சிந்தனை கொள்வாரா.? இப்போது அவரது உள்ளத்து பதிவு எவ்வாறிருக்கும் தெரியுமா? 'புத்தளம் போனேன். 70 வயது மூதாட்டியும் வீதியிலிறங்கி போராடுகிறார். இவ்விடயத்தை சற்று சிரத்தையோடு கையாள வேண்டும்' என்பதாக பதிவாகியிருக்கும் என்ப தில் ஐயமேதுமில்லை.

இப்படி புத்தள மூதாட்டியும் வீதியிலிறங்கி போராடுகையில் புத்தள நகர பிதா பாயிஸ் ஜனாதிபதி மைத்திரியோடு கைகோர்த்து திரிந்தார். அவரது தலைவர் அமைச்சர் ஹக்கீமும் இவ்விடயத்தில் சிறிதும் கவனம் செலுத்தாமலுள்ளார் என்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்க விடயம். இந்நிகழ்வை புத்தள நகர பிதா பாயிஸும் புறக்கணித்திருந்தால் ஜனாதிபதி மிகப் பெரும் அவமானத்தைச் சேர்த்திருக்கும். ஜனாதிபதி மைத்திரி மஹிந்தைக்கு எதிராக இருந்தால் ஏசுவார். மஹிந்தையோடு இருந்தால் கொஞ்சுவார். இது அவரு டைய அரசியல் பண்பு. நான் இங்கே மு.காவை இகழ்வதனூடாக, ஏனைய கட்சிகள் களத்தில் நின்று வீரியத்தோடு போராடுகின்றது என கூற வரவில்லை.

தனது சந்ததியை பாதுகாக்கும் போராட்டத்தில் எமது பெண்கள், இளைஞர்கள் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்கள். இதனை இன்றுள்ள முஸ்லிம் தாய் அரசியல்வாதியிலிருந்து குட்டி அரசியல்வாதி வரை, யாராவது ஒருவர்

கண்டித்துள்ளார்களா? யாராவது ஒரு கவிஞர் மரணித்தால் அனுதாப அறிக்கை வெளியிடத்தான் இவர்கள் லாயக்கு. கண்டன அறிக்கைக்கெல்லாம் திராணியற்றவர்கள். இவர்கள் கண்டன அறிக்கைக்கு கூட தயங்குவதானது, மிகப் பெரும் சந்தேக பார்வையையும், இதன் பின்னால் உள்ள அரசியல் மாபியாவின் பலத்தையும் ஊகிக்கச் செய்கிறது.

எமது பெண்கள் மீது கை வைத்தும், சிறிதும் கணக்கெடுக்காமல் உள்ள அரசியல் தலைமைகள் எமக்கு இன்னும் வேண்டுமா? இவர்களால் இனியேது பயன்? சிந்திப்போம்.. செயல்படுவோம்.

துறையூர் ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்.

ஐ.நா அறிக்கையாளரிடம் முறைப்பாடு

புத்தளம்-அருவக்காட்டில் குப்பைகளை கொட்டுவது தொடர்பாக ஐ.நா. விலுள்ள சூழல் சம்பந்தமான அறிக்கையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை சமூகத்திற்கான ஐரோப்பிய நிலையத்தின் பொதுச்செயலாளர் எம். வாஹாப்தீன் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா.வில் வைத்து இலங்கை ஊடகமொன்றுக்கு தகவல் தெரிவிக்கையில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது, "கொழும்பிலுள்ள குப்பைகளை புத்தளத்தில் கொட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த செயற்பாட்டிற்கு புத்தளம் மக் கள் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இந்த விடயம் தொடர்பாக பல போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.

எனினும் அவர்களின் எதிர்ப்பிற்கு செவி சாய்க்காத அரசு இந்த நடவடிக்கையினை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. இது வன்மையாக கண்டிக்க வேண்டியதொரு விடயமாகும்" என மேலும் தெரிவித்துள்ளார்.

ஒரு முஸ்லிம் நபர் நியூஸிலாந்து பிரதமரின் மனிதாபிமான செயற்பாட்டை பார்த்து அவரை இஸ்லாத்திற்கு அழைக்கும் காணொளி வைரலாகின்றது.

(குறித்த நபரின் அழைப்புக்கு பதிலளித்த நியூஸிலாந்து பிரதமர், இஸ்லாம் மனிதாபிமானத்தை போதிக்கின்றது. அது என்னிடம் இருக்கின்றது என கூறியுள்ளார்)

நியூஸீலாந்து பள்ளிவாசல் மீதான கொலைத் தாக்குதலை அடுத்து அந்நாட்டுப் பிரதமரின் முஸ்லிம் சார்பு நடவடிக்கைகளை பார்த்து முஸ்லிம்கள் அவருக்கு 'ஹிதாயத்' (நேர்வழி. அதாவது இஸ்லாத்தை நோக்கிய வழிகாட்டல்) கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை புரிகிறார்கள். ஆனால், எனக்கு இது புரியவில்லை. முஸ்லிம்கள் மீது 'கருணை' காட்டும் ஒருவர் அதன் தொடராக இஸ்லாத்திற்குள் நுழைய வேண்டும் என்றிருப்பின் இதன் மறுதலையான அர்த்தம் முஸ்லிம் அல்லாத ஒருவருக்கு முஸ்லிம்கள் மீது கருணை வரவே முடியாது என்பது தானே?

எனில் முஸ்லிம் அல்லாதவர்களிடம் நாமும் அடிப்படையில் நீதி, கருணை போன்றவற்றை எதிர்பார்க்க முடியாது என்றல்லவா அர்த்தம் வரும்? இதன் தொடராக எப்படி நாம் முஸ்லிம் அல்லாதவர்கள் எமக்காக பேச வேண்டும் என்று எதிர்பார்க்க முடியும்? (ஹிதாயத் தர்க்கத்தின் படி தான் இதனைக் கூறுகிறேன்).

அ. மார்க்ஸ் 'நான் புரிந்து கொண்ட நபிகள்' என்றொரு நூலை எழுதினார். உடனே சில முஸ்லிம்கள் 'ஏன் நீங்கள் இன்னும் முஸ்லிம் ஆகவில்லை' என்று அவரைப் பார்த்து கேட்டார்களாம். என்னவொரு சிந்தனைச் சிக்கல் பாருங்கள்!

நபிகளாரை ஒரு வரலாற்று நாயகராக கண்டு அவர் எப்படி வரலாற்றை உருவாக்கினார் என்று எழுதிட ஒருவர் முஸ்லிமாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. அ. மார்க்ஸ் செய்தது அதனைத்தான். ஆனால் இதன் காரணமாக அ. மார்க்ஸ் இஸ்லாத்திற்கு வர வேண்டும் என்று எதிர்பார்ப்பது அவரின் மகத்தான அறிவியல் பணியையே கொச்சைப்படுத்தும் செயல்.

நியூஸீலாந்து பிரதமர் ஜெஸிந்தாவின் செயலுக்கு பின்னணியில் இருப்பது மனித நேயமோ, முஸ்லிம்கள் மீதான கருணையோ அல்ல. மாறாக நீதி. சிறுபான்மை சமூகங்கள் பற்றிய அணுகுமுறை. ஒப்பிடும் வகையில் கூறவில்லை. அடிப்படையில் ஒரு கடவுள் மறுப்பாளரான பெரியார் சிறுபான்மையினரை எந்த வகையில் அணுகினார் என்பதை புரிந்து கொண்டால் இதனை நாம் புரிந்து கொள்ளலாம்.

நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை மானிட குலத்திற்கு பொதுவான விழுமியங்கள். இவற்றை கைக் கொள்ள ஒருவர் முஸ்லிமாகத்தான் இருக்க வேண்டும் என்பது தவறான பார்வை.

முதலில் குஃப்ர் (இறை நிராகரிப்பு) பற்றிய எமது பார்வை மாற வேண்டும். 'விளங்கி' இஸ்லாத்தினை ஏற்றுக் கொள்பவன் /கொள்பவள் தான் 'முஸ்லிம்'. அது போலவே 'விளங்கி' இஸ்லாத்தினை மறுப்பவன் /மறுப்பவள் தான் 'காஃபிர்'. பிறப்பால் ஒருவர் முஸ்லிம் ஆவதும் இல்லை. காஃபிர் ஆவதும் இல்லை.

நியூஸீலாந்து பிரதமரின் செயல்பாடுகளை உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அணுகும் முஸ்லிம்களின் மனவமைப்பை புரிந்து கொள்ள முடிகிறது. ஆனாலும் ஹிதாயத் பற்றிய பார்வை என்பது இஸ்லாம் பற்றிய தவறான புரிதலின் வெளிப்பாடே

இமாம் முஹம்மத் அப்துஹு கூறுவது போல மார்க்கம் பற்றிய புரிதலை சீர்திருத்தல் தான் எமது முதன்மையான வேலைத் திட்டமாக இருக்க வேண்டும் என்பதைத்தான் சமகால முஸ்லிம்களின் சிந்தனா நெருக்கடி எமக்கு அடிக்கடி உணர்த்துகிறது!

- லபீஸ் ஷஹீட்

பலஸ்தீன் நிலம் தின நிகழ்வுகள் கிழக்கில்

ஒவ்வொரு வருடமும் மார்ச் 30 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற பலஸ்தீன் நிலம் தின நிகழ்வுகளையொட்டி இம்முறை கிழக்கு மாகாணத்தில் பல நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதன் முதலாவது நிகழ்வு இன்று (29) மாலை 4.00 மணிக்கு கிண்ணியாவின் அன்ட் ஸூட்ஸ் திறந்த வெளியரங்கில் நடைபெறும். 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு மட்டக்களப்பு கல்லடி கிரீன் கார்டன் ஹோட்டலிலும், 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு நாவற்குடா விம்பிள்டன் அரங்கிலும், ஏப்ரல் 01 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் பீடத்திலும் நிகழ்வுகள் நடைபெறும். சகல இனங்களையும் சேர்ந்தவர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பலஸ்தீன் நட்புறவு சங்கங்கள் தாபித்தல், புகைப்படக் கண்காட்சிகள் எனப் பல விடயங்களுக்கூடாக பலஸ்தீனின் நில தினம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. நிகழ்வுகளின் போது பிரதேசத்தின் முக்கிய பிரமுகர்களை இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவர் கௌரவ ஸுஹைர் ஹமதல்லாஹ் சந்திப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

1976 மார்ச் 30 ஆம் திகதி பலஸ்தீன் நிலத்தை ஆக்கிரமிக்கின்ற சட்டவிரோத இஸ்ரேலிய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதற்கு எதிராக பலஸ்தீன மக்கள் கிளர்ந்தெழுந்த வேளையில் நூற்றுக்கணக்கான தியாகிகள் கொல்லப்பட்ட முன்வைத்து இந்த நில தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

Public Utilities Commission of Sri Lanka

மின்சாரத் தடை பாதிப்பு குறித்த முறையீடுகள் ஏற்பு

மார்ச் 18 ஆம் திகதி முதல் நாட்டில் முன்னறிவித்தலின்றி மின்சாரம் துண்டிக்கப்பட்டமை தொடர்பில் முறையீடுகளை பொது வசதிகள் ஆணைக்குழு ஏற்கவுள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிவித்தலில், பாவனையாளர்களுக்கு தொடரறாத மின்சாரத்தை வழங்குவது இலங்கை மின்சார சபையினதும், லங்கா இலெக்ட்ரிசிட்டி கம்பனி (LECO) யினதும் பொறுப்பாகும். இந்த நிறுவனங்கள் தமது பொறுப்பினை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவது பொது வசதிகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் எனக் குறிப்பிட்டுள்ளது.

மார்ச் 18 முதல் நாட்டில் முன்னறிவித்தலின்றி மின்சாரம் துண்டிக்கப்படுவதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் இனிமேலும் ஏற்படாதிருக்கும் வகையிலும், இதனாலுண்டாகும் பாதிப்புக்களைக் குறைக்கும் வகையிலும் நடவடிக்கை எடுப்பது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்ததாகும். அந்த வகையில் குறித்த காலப் பிரிவில் முன்னறிவித்தலின்றி மின்சாரம் துண்டிக்கப்பட்டமை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொதுச் சேவைகள் ஆணைக்குழு மின்சாரப் பாவனையாளர்களிடம் தகவல்களைத் திரட்டி வருகிறது.

தமது பிரதேசம், மின் துண்டிக்கப்பட்ட திகதி, கால அளவு, பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) ஆகிய தகவல்களை தமது கையொப்பத்துடன், தலைவர், இலங்கை பொதுச் சேவைகள் ஆணைக்குழு, 06 ஆம் மாடி, BOC மேர்ச்சன்ட் டவர், 28, சென்ட் மைக்கல்ஸ் ரோட், கொழும்பு 03 என்ற முகவரிக்கு அல்லது info@pucsl.gov.lk என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மின்சாரப் பாவனையாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

ஆதில் பாக்கிர் மாக்கர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் மர்ஹூம் ஆதில் பாக்கிர் மாக்கார் ஞாபகார்த்தமாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது. அணிக்கு 07 பேர் கொண்ட இந்த உதைபந்தாட்டப் போட்டித் தொடர் இம்மாதம் 30,31 ஆம் திகதிகளில் பேருவளை கோல்டன் கேட் சர்வதேச பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

களுத்துறை மாவட்டத்திலுள்ள 32 உதைபந்தாட்ட அணிகளுக்கே இந்தச் சுற்றுத் தொடரில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்[illegible] இத்தச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் களுத்துறை மாவட்ட உதைபந்தாட்ட அணிகள் இம்மாதம் 29 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என ஏற்பாட்டுக் குழு சார்பில் முஹம்மத் பஸான் தெரிவித்தார்.

போட்டியில் வெற்றி பெற்று சம்பியனாகும் அணிக்கு ஆதில் பாக்கிர் மாக்கார் வெற்றிக் கிண்ணமும் 50,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது. ரன்னர்ஸ் அப் அணிக்கு 30,000 ரூபா பரிசாக வழங்கப்படும். இறுதிப் போட்டிகள் 31 ஆம் திகதி பி.ப. 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பரிசளிப்பு நிகழ்வுகளில் விளையாட்டுத்துறை [illegible] கலந்து கொள்ளவுள்ளதுடன், பிரதம அதிதிகளாக முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜமீல், பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத், உபதலைவர் முனவ்வர் ரபாய்தீன், எதிர்க்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எம். அம்ஜாத், முன்னாள் நகர பிதா மர்ஜான் பளீல், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் தலைவர் இக்பால் சம்சுதீன் உட்பட பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டு தர்பாரில் வில்பத்து வனமும் அருவாக்காடும்

• பியாஸ் முஹம்மத்

வில்பத்து பகுதிகளில் காடுகளை அழிப்பதாகச் சொல்லப்படும் குற்றச் சாட்டுகள் தொடர்பில் ஆராய விஷேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இதன் பணிகளை 02, 03 மாதங்களில் முடிக்க முடியும் என்று கூறும் அவர், இதனூடாக பொய்யான வதந்திகள் மற்றும் குற்றச் சாட்டுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும் எனவும் பாராளுமன்றத்தில் நடைபெற்ற வெளிவிவகாரம், சுற்றுலா, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சுக்கள் தொடர் பில் நடைபெற்ற விவாதத்தின் போது கூறியுள்ளார்.

விமானப் படையை அனுப்பி காட ழிக்கப்பட்டதா என்பதைக் கண்டுபிடிக்க முடியும். யாராவது காடழித்திருந்தால் அதனைத் தடுக்க முடியும். ஆணைக்குழு அமைப்பதினூடாக உண்மை நிலையைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கை களை ஜனாதிபதியினால் மேற்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

இவர் சொல்வதில் உண்மை இருக்கி றது. ஒவ்வொரு தேர்தல் காலங்களின் போதும் தேர்தல் பிரச்சாரத்துக்காக பலரும் பயன்படுத்தும் ஒரு சாதனமாக தொடர்ந்தும் வில்பத்து முஸ்லிம்களின் மீள்குடியேற்ற விவகாரம் இருக்க வேண்டுமா? இப்பொழுதெல்லாம் வில்பத்து விவகாரம் மேலெழும் பொழுதே மக்களுக்குத் தேர்தல்தான் ஞாபகம் வருகிறது. இனவாத அரசியல் வாதிகள் தமது வாக்குகளைப் பெறுவ தற்கு இனவாதத்தைத் தூண்டுவதற்காக இந்த விவகாரத்தைப் பயன்படுத்துகின்ற னர். மறுபுறத்தில் முஸ்லிம் அரசியல் வாதிகளும் தமக்கான ஆதரவுத் தளத் தைத் தக்க வைப்பதற்கான அரசியலாக வில்பத்து விவகாரத்தை தீராத பிரச்சினை யாக வைத்திருக்க முயல்வதாகவே தெரிகிறது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஜனாதி பதி சிரிசேன வில்பத்து விவகாரத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறார். தனது பதவிக் காலத்தில் வில்பத்து வனப்

பிரதேசத்தில் எந்தக் காடழிப்பு நிகழ்வு களும் நடைபெறவில்லை என அவர் தெரிவித்திருக்கிறார். ஆனால் முஸ்லிம் கள் பூர்வீகமாக வாழ்ந்த வில்பத்து பிரதேசத்தை அண்டிய பிரதேசங்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் காடு களாகப் பிரகடனப்படுத்தப்பட்டது ஜனாதிபதி மைத்திரியின் கைகளினால் தான் என்பதை யாரும் இன்னும் மறந்து விடவில்லை.

அதற்கும் மேலதிகமாக இந்த மக்க ளுக்கான மீள்குடியேற்றத்துக்கு எந்த மாற்றீடுகளையும் அவர் வழங்கவில்லை. இவர்கள் மீள்குடியேறுவதில் தடையாக இருப்பது ஜனாதிபதி சிறிசேனவுடைய வர்த்தமானி அறிவித்தல் தான் என்பதி னால், புலமைப் பரிசில் மாணவர்களுக் குச் சொல்வது போல வெறும் அறிக்கை விடுவதை விட்டு விட்டு, குறித்த வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்வ தற்கு ஜனாதிபதி முன்வந்திருக்க வேண் டும். இது தான் வில்பத்து விவகாரத்தை பேசுபொருளாக்குவதை நிறுத்துவதற் கான பிரதான வழியாகும்.

அடுத்ததாக வில்பத்து விவகாரம் இனவாத சூழலியலாளர்களால் பூதாகர மாக்கப்பட்டு நாட்டில் இனவாத வித்தாக ஊன்றப்படுவதற்கு இது தொடர்பான தெளிவான விளக்கங்கள் உரிய தரப்பிலிருந்து மக்களுக்குச் சென்றடையாததே காரணமாகும். இது தொடர்பில் ஜனாதிபதி விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டு இந்த விவகா ரத்தை தீர ஆராய்ந்து தெளிவான அறிக் கையை மக்கள் முன்வைப்பது நாட்டின் சகல சமூகங்களினதும் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியின் பொறுப்பாகும்.

முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விவகா ரம் எனும் போது ஜனாதிபதி முனிவராக மாறுவது ஒன்றும் புதிய விடயமல்ல. முஸ்லிம்கள் மீது சிங்கள இனவாதிகள் நடத்திய திகன தாக்குதல் தொடர்பில் எந்த விசாரணைக் கமிஷனையும் ஒரு வருடமாகியும் ஜனாதிபதி நியமிக்க வில்லை. இதில் அரசாங்கம் தான் தவறிழைத்திருக்கிறது என்று மக்கள் வைத்திருக்கும் ஆதாரபூர்வமான நம்பிக் கையை மாற்றுவதில் அரசாங்கம் இழுத் தடித்து வருகிறது.

அதேபோல மாவனல்லை சிலை உடைப்பு விவகாரத்திலும் அரசாங்கம் இதுவரை எந்த அறிக்கையும் விட வில்லை. இது இனவாதிகள் பரப்புகின்ற கருத்துக்களுக்கு அரசாங்கம் சாமரம் வீசும் நிலையாகவே தெரிகிறது. அரசாங் கம் இந்த விடயங்களில் உண்மையாக நடக்குமாக இருந்தால் துணிவுடன் முன்வந்து இவை தொடர்பிலான விசார ணைகளை நடத்தி உண்மையை வெளிச் சத்துக்குக் கொண்டு வர வேண்டும். எமது நாட்டின் ஜனாதிபதி ஒரு ஜெசிந்தா ஆர்டனாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது கனவாக அமைந்தாலும் கௌதம புத்தர் சொல்லுகின்ற மைத்திரி உணர்வுள்ளவராக இருக்க வேண்டும் என்ற மக்கள் எதிர்பார்ப்பை அவர் வீணாக்கி விடக் கூடாது.

வில்பத்து விவகாரத்தை ஊதிப் பெருப்பிப்பதில் சில சிங்கள ஊடகங்கள் மும்முரமாகத் தொழிற்படுகின்றன. இந்த ஊடகங்களுக்குப் பின்னால் சில பண முதலைகளும் அரசியல்வாதிகளும் இருப்பதனை நாடே அறியும். எங்கோ இருக்கின்ற போதைப் பொருள் கடத்தல் காரர்களையெல்லாம் பிடித்துத் தூக்கில் போட முயற்சிப்பவர்களுக்கு இந்தப் பிணம் தின்னிக் கழுகுகளைப் பிடித்துத் தண்டனை வழங்குவது முடியாத காரிய மல்ல. அப்படியானால் இவர்களைச் சுதந்திரமாக விட்டு வைத்திருப்பது இவர்களுக்கு வழங்கும் ஆதரவாக எடுத்துக் கொள்ளலாமா?

வில்பத்துவில் காடழிப்பதாகக் கூப்பாடு போடும் எவருக்குமே சூழல் தொடர்பில் உண்மையான அக்கறை இல்லை என்பது வெட்ட வெளிச்ச மானது. அருவாக்காட்டில் குப்பை கொட்டுவது சூழலைப் பாதிக்கும் என தெளிவான ஆதாரங்களுடன், முறையான அறிக்கைகளுடன் முன்வைக்கும் போது அதற்கெல்லாம் இந்த ஊடகங்கள் ஆதரவு தெரிவிக்கவில்லை. அதனைத் தமது ஊடகங்களில் பகிரங்கப்படுத்துவ தற்கு முன்வரவுமில்லை. சேரக்குழியில் குப்பை கொட்டுவதற்காக பல ஏக்கர் களில் மரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கிறார்கள். இவைகள் எல்லாம் இந்த ஊடகங்களுக் குத் தெரியவில்லை என்பது அவை இனவாத லென்ஸ் மூலமே விவகாரங் களைப் பார்ப்பதன் விளைவாகத்தான் இருக்க முடியுமேயன்றி வேறில்லை.

இவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைப்பதற்கு ஜனாதிபதியால் முடியும். ஆனால் அவர் இதனைச் செய்வதற்குக் காலம் தாழ்த்தும் காலமெல்லாம் இன வாதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கிய தாகவே அமையும். பயங்கரவாதப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டதில் இருந்து வளர்ந்து வந்த அடர்ந்த காட்டில் அவர்களை எப்படி வசிக்க வைக்க முடியும் என்ற கேள்வியே மேலெழும் போது அவர்களது மீள்குடியேற்றம் தொடர்பில் அரசாங்கம் இதனை விட விரிவாகச் சிந்தித்திருக்க வேண்டும்.

போதைப் பொருளுக்கெதிராக போதுமான நடவடிக்கை எடுத்திருக்கிறோமா ?

• மாஸ் எல். யூஸுப்

நீதியை நடைமுறைப்படுத்துபவர்கள் அண்மைக் காலங்களில் நடத்திய சுற்றி வளைப்புக்களின் போது கைப்பற்றப் பட்ட போதைப் பொருட்கள் பற்றிய தகவல்கள் மனதை உறைய வைக்கின் றன. இந்தப் போதைப் பொருட்களினால் முழு மொத்த சமூகத்துக்கும் ஏற்படப் போகும் அழிவுகளைப் பற்றிச் சிந்திப்ப வர்கள் எவரும் இந்தச் சுற்றிவளைப்புக் கள் நடந்திருக்கக் கூடாது என்று கனவி லும் கருதமாட்டார்கள்.

எவ்வளவு இளைஞர்கள் இதற்கு அடிமையாகி இருப்பார்கள்? இன்னும் எவ்வளவு போதைப் பொருள் சார்ந்த வன்முறைகள், குற்றங்கள், மரணங்கள் சம்பவிக்கப் போகின்றன? எத்தனை திருமணங்கள் விவாகரத்தில் முடியப் போகின்றன? எத்தனைக் குடும்பங்கள் சீரழியப் போகின்றன? எத்தனை வள ரும் சிறுவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக் கப்படப் போகின்றனர்? எத்தனை சகோ தரிகளும் புதல்விகளும் சட்டவிரோத பாலியல் செயற்பாடுகளுக்குத் தள்ளப் படப் போகின்றார்கள்? தீமைகளின் பட்டியல் முடிவின்றித் தொடரத்தான் போகின்றது.

வழங்குபவர்கள், விநியோகிப்பவர் கள், காவிச் செல்பவர்கள் எவருமே இதனால் நாட்டுக்கும் சமூகத்துக்கும் நேரிடும் தாங்க முடியாத இழப்பைப் பற்றித் தெரியாமலா இருப்பார்கள்? சமூகத்தின் இருப்பையே இது ஆட்டங் காணச் செய்கின்ற நிலையில், இந்த நிலையை சமூகம் எப்படி எதிர்கொள்ளப் போகிறது? போதைப் பொருட்களுக்கு எதிராக எடுக்கப்படும் கடும் நடவடிக்கை

களைப் பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டு மட்டும் இருப்பதா அல்லது உங்களது பிள்ளைகள், துணைகள், சகோ தரர்கள் அனைவரையும் இதிலிருந்து காப்பாற்ற முயற்சி எடுப்பதா என்பதை நீங்களே உங்களிடம் கேட்டுப் பாருங்கள்.

போதைக்கும் குற்றங்களுக்குமான ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNODC) வெளியிட்டுள்ள தகவல்களின்படி, உலக கொக்கைன் உற்பத்தி மட்டும் 1410 டொன்களாக 2016 இல் அதன் உச்ச நிலையை அடைந்திருந்தது. சில்லறை விலையின் அடிப்படையில் உலக போதைப் பொருள் வர்த்தகத்தின் பெறு மதி அண்ணளவாக 320 பில்லியன் அமெ ரிக்க டொலர்களாகும். (48 இலட்சம் கோடி இலங்கை ரூபா). (UK Drug Policy Commission & Policy Report July 2018)

இந்தப் போதைப் பொருட்களில் ஹெரோயின், கொக்கைன், கஞ்சா உள் ளிட்ட பல ரகங்கள் அடங்குகின்றன. அறிக்கையிலுள்ள தகவல்களின் படி போதைப் பொருள் சந்தை மூன்று தரங் களாக வகைப்படுத்தப்படுகிறது.

1. சர்வதேசக் கடத்தல்
2. உள்ளூர் சில்லறை விற்பனை
3. தேசிய மற்றும் பிராந்திய அளவில் நடைபெறும் நடுத்தரச் சந்தை

இந்த மட்டங்களுக்கான பிரிகோடு கள் தெளிவாக இல்லாவிட்டாலும், சந்தையில் இவை ஒத்திசைவற்று, துண்டு துண்டாகப் பிரிந்தே செயற்படுகின்றன. பிரித்தானியாவின் போதைப்பொருள் வர்த்தகம் இறந்த இலாபத்துடன் இயங்கு கிறது. 2003-4 தரவுகளின்படி இதன் பெறுமதி அண்ணளவாக 5.3 பில்லியன் பவுன்களாகும். இலங்கையின் போதைப் பொருள் வர்த்தகத்தின் அண்ணளவுப் பெறுமானம் பொதுவெளியில் பகிரப்பட வில்லை.

சமூகத்தின் ஜாம்பவான்கள்

சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரம் உலகில் எங்கு நடந்தாலும் அது அந்த நாட்டை அரசியல், பொரு ளாதார, கலாச்சார வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும். இலங்கையும் இதற்கு விதி விலக்கல்ல. அரசியல்வாதிகளும் பொலி சாரும் நீதித் துறையினரும் இந்தப் போதைப் பொருள் மாபியாக்களின் வலையில் வீழ்ந்து விட்டால் அவர்களால் இந்தக் கும்பலை வெல்ல முடியாது. திட்டமிட்ட குற்றங்கள், கொலைகள், கடத்தல்கள், சித்திரவதைகள், அச்சுறுத் தல்கள், மிரட்டல்கள் போன்றவற்றின் வடிவமைப்பாளர்களாக அவர்களே மாறி விடுவார்கள்.

இந்த வழிமுறைகளைப் பின்பற்றும் தமது எதிரிகள் விடயத்தில் அவர்கள் மௌனித்துப் போகிறார்கள். அவர்களைக் கைது செய்வதிலும் தண்டிப்பதிலும் சட்டமும் நீதியும் காட்டும் தயக்கம் அவர்களை சமூகத்தின் ஜாம்பவான் களாக்குகிறது. மொத்தத்தில் முழுச் சமூ கமுமே இதற்கு நஷ்டஈடு செலுத்த வேண்டி வருகிறது. அரசாங்கமும் அரச அதிகாரிகளும் கையறு நிலைக்கு மாறு கிறது. சில நாடுகளில் இந்த நிலை மையே நிலவுகிறது. இலங்கை வெளிப் படையாக இந்த நிலைமைக்கு முதிரா விட்டாலும், கண்டும் காணாமலிருக்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

பிணம் தின்னிக் கழுகுகள்

இலங்கையின் இனவாதிகளின் செயற்பாடுகளும் அதற்குத் தூபமிடும் ஊடகங்களின் அட்டகாசமும் மற்றுமொரு இரத்தக் களரியை நாட்டிலே ஏற்படுத்தி விடுமோ என்கின்ற நியாயமான அச்சம் பலரிடமும் துளிர்க்கத் துவங்கியிருக்கிறது.

தேர்தல் என்றாலே மேலெழும் வில்பத்து விவகாரம் இனவாதத்தைத் தூண்டும் விடயமாக தொடர்ந்தும் கையாளப்பட்டு வருகிறது. சூழலியலாளர்கள் என்ற பெயரில் மக்களிடையே தவறான கருத்துக்களைப் பரப்பி மக்களை உசுப்பேற்றுவதற்கு இவர்கள் முயற்சித்து வருகின்றனர். புத்தளம் அருவாக்காடு பகுதியில் குப்பை கொட்டுவதனால் ஏற்படும் சூழல் தாக்கங்களையும் மனித அவலங்களையும் முன்னிறுத்தி நடத்தப்படும் போராட்டத்தில் எந்த ஒத்துழைப்பும் வழங்காமல் வில்பத்துவில் சூழல் தாக்கம் பற்றி மட்டும் பேசுவது சூழல் தொடர்பிலான இந்தச் சூழலியலாளர்களின் போலி ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது. பாரிய சூழல் தாக்கத்தை ஏற்படுத்தியதனால் இடையில் கைவிடப்பட்டுள்ள உமாஓயா திட்டம் பற்றியும் இவர்கள் எதனையும் பேசவில்லை. எதனையும் இனவாதமாக மாற்றி அதனூடே இரத்தக் களரியை ஏற்படுத்த விளையும் இந்தக் காட்டேரிகளை தோலுரித்துக் காட்டுவதற்கு நடுநிலையாகச் சிந்திப்பவர்கள் முன்வர வேண்டும்.

அதேபோல இந்த இனவாதிகளின் தாளத்துக்கு ஏற்ப ஆடுகின்ற ஊடகங்கள் பற்றி அரசாங்கம் கவனத்தைச் செலுத்த வேண்டும். அரசாங்கம் அனுமதிப்பதினாலேயே இந்த ஊடகங்கள் இனவாதத்தைக் கக்கி வருகின்றன. வில்பத்து விவகாரத்தை இனவாதமாக மாற்றியதில் ஒரு சில சிங்கள ஊடகங்களுக்குப் பெரும் பங்கிருக்கிறது. சிங்கள மக்களிடையே தவறான பீதியையும் புரளியையும் கிளப்பி சிங்கள மக்களை திசை திருப்புவதில் இந்த ஊடகங்கள் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றன. கிறிஸ்ட்சேர்ச் பள்ளிவாசலில் நிராயுதபாணிகளாக வணக்கத்தில் ஈடுபட்டிருந்தவர்களை சுட்டுக் கொன்ற பயங்கரவாதத் தாக்குதலை இலங்கையின் சில சிங்கள ஊடகங்கள் கையாண்ட விதம் அவர்கள் தமது பிழைப்புக்காக இனவாதத்தையே மூலதனமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இந்தத் தொடரில் வாக்குக் கேட்டுப் பிழைப்பு நடத்தும் அரசியல்வாதிகளும் ஒன்றும் குறைந்தவர்கள் அல்லர். தேர்தலில் தமது வாக்கு வங்கியைக் குறியாக வைத்தே செயற்படும் இவர்கள் பேரின மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகளில் இறங்குகின்றனர். தேர்தல் நெருங்கும் காலங்களில் இனவாதச் செயற்பாடுகளை முடுக்கி விடுவது இவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது. எத்தனை பேரின் உயிரைப் போக்கியாவது எத்தனை உடைமை களைச் சேதப்படுத்தியாவது எத்தனை வாழ்வாதாரங்களை தீக்கிரையாக்கியாவது தனது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதே இந்த அரசியல்வாதிகளின் தேர்தல் பிரச்சாரமாக அமைகிறது.

அதேபோல வியாபாரத்தில் ஏற்படும் போட்டியையும் சில வர்த்தகர்கள் இனவாதத்துக்குப் பயன்படுத்துகின்றனர். கடந்த வருடம் கண்டி, திகன பிரதேசங்களில் நடைபெற்ற முஸ்லிம்கள் மீதான காட்டுமிராண்டித் தாக்குதல்களில் பல வர்த்தகர்கள் குளிர்காய்ந்தமை மறைக்கக் கூடிய விடயமல்ல. சித்திரைப் புத்தாண்டுக்காக முஸ்லிம் வர்த்தகர்களால் கொண்டு வந்த சேமிக்கப்பட்டவைகளை இலக்காக வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கடந்த காலங்களில் பல ஆடைக் காட்சியறைகள் தீவைத்து கருக்கப்பட்டமைக்கும் இந்த வர்த்தகப் போட்டி காரணமாக அமைந்தது.

இனவாதிகளதும் இனவாத ஊடகங்களதும் அரசியல்வாதிகளதும் வர்த்தகர்களதும் இத்தகைய செயற்பாடுகளினால் ஏமாற்றப்பட்ட சில பொதுஜனங்கள் எதற்கெடுத்தாலும் அதனை இனவாதக் கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கும் அணுகுவதற்கும் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பாணந்துறையில் அண்மையில் நடந்த சம்பவம் இதற்கு நல்லதோர் உதாரணமாகும். இனவாத உணர்வுகள் கொதிநிலையில் இருக்கும் சூழலில் இனி எந்த அசைவும் தீப்பற்றக் கூடியதாகவே இருப்பதை இது காட்டுகிறது. ஒன்றாக இருக்கையில் சாதாரண விடயங்களாக இருந்தவைகள் எல்லாம், உறவுகள் தூரமாக்கப்பட்ட நிலையில் துவேஷச் செயற்பாடுகளாகப் பார்க்கப்படுகின்றன. கட்டுகஸ்தோட்டை சம்பவமும் இதற்கு வலுச் சேர்ப்பதாக அமைந்திருக்கிறது.

இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது நீதியை விரும்பும் அனைத்து மக்களதும் கடமையாகும். அரசாங்கமும் இந்த இனவாதச் சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் நீதியை நிலைநாட்டுவதில் தனக்குள்ள அக்கறையை வெளிப்படுத்த வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

அருவைக்காடு குப்பை விவகாரம்: சீர்கேடுகளைத் தோற்றுவிக்கும் அரசின் குப்பைத் திட்டம்

• கலாநிதி பரீனா ருஸைக்
சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியல் துறை- கொழும்பு பல்கலைக்கழகம்

குப்பை கொட்டப்படும் அருவைக்காடு என்னும் இடத்திற்கு 200 மீற்றர் தூரத்தில் மீன் பிடிக்கும் இடம் காணப்படுகின்றது. மனிதர்கள் வாழும் இடத்திற்கும் குப்பை கொட்டப்படும் இடத்திற்கும் இடையில் 18 மீற்றர் தூரம் காணப்படுகின்றது. வில்பத்து வனப்பகுதிக்கும் குப்பை கொட்டப்படும் இடத்திற்கும் இடையில் சுமார் 4 - 5 கிலோமீற்றர் தூரமும் கால ஓயா என்னும் நதிக்கும் இவ்விடத்திற்கும் இடையில் 5 கிலோ மீற்றர் தூரமும் புத்தளம் ஏரிக்கும் குப்பை கொட்டப்படும் இடத்திற்கும் இடையில் சுமார் 250 மீற்றர் தூரமும் உள்ளது.

இவ்வாறு தூர அடிப்படையில் குப்பை கொட்டப்படும் இடத்தைச் சூழ பல்வேறு முக்கிய விடயங்கள் காணப்படுகின்றன. குப்பை கொட்டப்படும் இடத்தைச் சூழவுள்ள பகுதி நீரேந்து பிரதேசமாக உள்ளது. குறிப்பாகச் சொல்லப்போனால் இப்பிரதேசம் இலங்கையில் தூய நீரேந்து பிரதேசத்தின் பொக்கிஷமாகத் திகழ்கின்றது.

சேரக்குளிய (அருவைக்காடு எல்லை) பிரதேசத்தில் பாரிய குழியொன்றை நிரப்புவதற்காக குப்பை கொட்டப்படுகிறது என்று கூறப்பட்டாலும், இதிலிருந்து மிகவும் சுலபமாக கழிவு நீர் (Leachate) சுண்ணக்கற் பிரதேசத்தை ஊடறுத்துக் கொண்டு நீர்ப் படுக்கைகளையும், நீரேந்து பிரதேசங்களையும் மாசுபடுத்தக்கூடிய ஆபத்து காணப்படுகின்றது.

இப்படி பல முக்கியமான சீரழிவுகள் கொண்ட, குப்பை கொட்டத் தீர்மானித்திருக்கும் அருவைக்காடு என்னும் இடம் சமூக, பொருளாதார, சூழலியல் ரீதியாக பாரிய அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்கவுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட EIA என்னும் சூழல் தாக்க மதிப்பீட்டில் இப்பகுதி சூழல் உணர்ச்சி மிகு பிரதேசம் எனத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது அங்கு மிகவும் பெறுமதிவாய்ந்த உயிர்ப்பல்வகை இனங்கள் காணப்படுகின்றன. நீர் வளமான சுற்றுப்புறச் சூழலில் "Mangrove species" என்கின்ற கடற்கரையோர சதுப்புநில வளரிகளும், மயோசீன் காலத்து சுண்ணாம்புக் கல் படிவுகளும் மருந்து மூலிகைகளும் மற்றும் குறிப்பிட்ட பிரதேசத்துக்கே உரித்தான தாவர (Endemic Species) இனங்களும் உள்ளன. இத்திட்டத்திற்காக சேரக்குளிய பிரதேசத்தில் சுமார் 64 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

மேலும், கொழும்பிலிருந்து குப்பைகள் கொண்டு செல்லும் போது பறவைகள் சரணாலயம் (Anawilundawa Birds sanctuary) ஊடாகவே செல்ல வேண்டியுள்ளது. எனவே மிக உணர்ச்சிபூர்வமான சுற்றுச் சூழல் அம்சங்களை பின்னணியாகக் கொண்ட பகுதியாக அருவைக்காடும், அண்டிய பிரதேசங்களும் காணப்படுகின்றது.

அதேநேரம் அருவைக்காட்டுக்குப் பக்கத்திலுள்ள சேரக்குளிய, குப்பை கொட்டுதலுக்கு மிகக் கிட்டிய தூரத்திலுள்ள கிராமமாகும். இது சுமார் 600 மீனவக் குடும்பங்களைக் கொண்டுள்ளது. இக்கிராமம் முழுமையான கத்தோலிக்க மீன்பிடிக் கிராமமாகும். இம்மக்களின் வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிப்படையக் கூடிய ஆபத்து நிலை காணப்படுகின்றது.

புத்தளம் ஏரியின் வடபகுதியில் சுமார் 2500 இற்கும் மேற்பட்ட மீனவர்களும் பாதகமான தாக்கத்திற்கு உட்பட வேண்டியுள்ளனர். மொத்தமாக பார்த்தால் சுமார் 3000 இற்கும் மேற்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் நிகழ்வாக [illegible] காணப்படுகின்றது.

இதுதவிர ஏரியின் [illegible]

கொண்டுள்ள கடற்கரை காணப்படுவதால் உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் இடமாக அப்பகுதி காணப்படுகின்றது. அருவைக்காட்டில் குப்பை கொட்டப்படும் பட்சத்தில் உல்லாசப் பயணிகளின் வருகையிலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் பெறக்கூடிய வருமானத்தில் வீழ்ச்சியைத் தோற்றுவிக்கும்.

மறுபுறத்தில் இப்பிரதேசத்தை அண்டியதாக உப்பளங்கள் காணப்படுகின்றன. உப்புக் கைத்தொழிலிலும் இவ்விவகாரம் பாரிய தாக்கத்தை உண்டுபண்ணும். இத்திட்டத்தினால் பொருளாதாரத்திற்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் ஏற்படுகின்ற தாக்கங்கள் போன்று சமூகச் சீர்கேடான மானிட ஆரோக்கியத்தைக் கூடுதலாகப் பாதிக்கவும் வாய்ப்புள்ளது. குப்பை கொட்டப்படும் வேளையில் உருப்பெறும் துர்நாற்றம் தூசுகள், ஒலி மாசுபடல், குப்பை எச்சங்கள், நுண்ணங்கிகளின் பெருக்கம் என்பன மனிதன் உள்ளிட்ட உயிரினங்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். சுவாசம் தொடர்பான நோய்கள், தோல் நோய்கள் அதிகம் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

நுரைச்சோலை அனல் மின்நிலையம் உருவாக்கப்பட்ட போது மக்கள் அதனை எதிர்த்தார்கள். அது தொடர்பில் முன்வைக்கப்பட்ட சூழல் தாக்க மதிப்பீடுகளை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படியான நிலையிலேயே வலுக்கட்டாயமான முறையில் அனல் மின் நிலையம் உருவாக்கப்பட்டது. தற்போது அனல் மின்சார நிலையத்தினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களுள் மிக முக்கியமாக அப்பகுதியை சூழ வாழும் மக்களின் உடலில் மெர்கரி எனப்படும் பாதரசத்தின் நச்சுத்தன்மை அதிகம் காணப்படுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

2 ஆம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து யப்பானில் ஏற்பட்ட மிக வேகமான கைத்தொழில் புரட்சியின் விளைவாக பெரும்பாலான மக்களுக்கு மின்னமாட்டா என்னும் நோய் ஏற்பட்டது. கடல் மற்றும் ஏரிகளில் உள்ள மீன்களில் பாதரசம் (Mercury Pollution) கலப்பு ஏற்பட்டமையினால் அம்மீன்களை சாப்பிட்ட மக்களுக்கு அந்நோய் ஏற்பட்டது. இன்றும் கூட ஜப்பானில் அந்நோய் தொடர்புடைய எச்சங்கள் காணப்படுகின்றது.

அனல் மின்சார நிலையத்தின் தூசு துகள்கள் (சாம்பல்) காற்றோடு கலந்து மலைநாட்டின் நாவலப்பிட்டிய போன்ற பிரதேசம் வரை அதன் தாக்கம் காணப்படுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. இவ்வாறான நிலைப்பாடுகள் சுவாச நோய்களை மக்களுக்கு ஏற்படுத்துகிறது.

எனவே கொழும்பு குப்பைகளை அருவைக் காட்டில் கொட்டும்போது இப்பகுதியிலும் எதிர்காலத்தில் ஆரோக்கியச் சீர்கேடுகள் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. கடந்த மார்ச் 22ஆம் திகதி உலக நீர் தினம் கொண்டாடப்பட்டது. உலக நீர் தினத்தில் மக்கள் நீரை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது தொடர்பாக நாட்டு மக்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். மாறாக அத்தினத்திலேனும் குப்பைக்கு எதிராக சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்ட மக்களுக்கு எவ்வித தீர்வுகளும் கொடுக்கப்படவில்லை.

இன்று இலங்கை உட்பட உலக நாடுகள் குடிநீர் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றன. உலகில் சுமார் 2.2 பில்லியன் மக்கள் குடிநீருக்காக அல்லலுற்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் நீர்வளத்தைக் கொண்டிருக்கும் அருவைக்காடு போன்ற பிரதேசங்கள் சேதப்படுத்தப்படுவது கண்டனத்திற்குரிய விடயமாக காணப்படுகின்றது. இருக்கும் நீர்வளங்களை பாதுகாக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் இப்படியான நிகழ்ச்சித் திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தப் போகின்றது என்பது கவலைக்குரிய விடயமாக உள்ளது. இது அருவைக் காட்டைச் சூழவுள்ள மக்களுக்கு மாத்திரம் பாதிப்பைக் கொடுக்கப் போகும் விடயம் அல்ல. மாறாக இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் பாதிப்பைக் கொடுக்கும் விடயமாகவே இது காணப்படுகின்றது.

இதுதவிர இப்பகுதி வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகக் காணப்படுகின்றது. இப்படியான பிரதேசங்கள் ஏனைய உலக நாடுகளில் காணப்படுமாக இருந்தால் அந்நாடுகளின் அரசாங்கம் அப்பகுதிகளை பாதுகாப்பதற்கு பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கும். ஆனால் இலங்கையில் சூழல் உணர்ச்சி மிகு பிரதேசங்கள் இவ்வாறு கண் முன்னே அழிக்கப்படுவது உண்மையில் கவலையான விடயமாகவே உள்ளது.

இத்திட்டத்திற்கு பல மில்லியன் ரூபாய்கள் செலவு செய்யப்படவுள்ளன. இதுவொரு நிலையான குப்பை முகாமைத்துவத்திற்கு இட்டுச் செல்லும் திட்டம் என்று சொல்லப்படுகின்றது. உண்மையில் ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருக்கும் குப்பைகளை இன்னோரு சூழல் உணர்ச்சிமிகு பிரதேசத்தில் நிரப்புவது நிலையான குப்பை முகாமைத்துவம் அல்ல. மாறாக நிலையான குப்பை முகாமைத்துவம் என்பது முகாமைத்துவத்தில் தொடர்புடைய பங்குதாரர்களையும் இணைத்துக் கொண்டு ஒரு சிறந்த முறையில் பிரிவுகளாக வேறுபட்ட விதத்தில் பிரிக்கப்பட்ட குப்பைகள் சேகரிக்கப்பட்டு அவை மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு, உக்கிப்போகக் கூடியவைகளை பசளைகளாக மாற்றக் கூடிய விதத்தில் உற்பத்திகளாக மேற்கொள்ளப்படுகின்ற போதே நிலையானகுப்பை முகாமைத்துவத்தைக் காண முடியும்.

ஆனால் இத்திட்டத்தில் வேறு ஏதோ விடயம் உட்பொதிந்திருப்பது விளங்குகிறது. இந்தக் குப்பைகளைப் போட வேண்டாம் என்று மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள். ஆனால் அரசாங்கம் கண்டும் காணாமல் இருப்பது மிகுந்த மனவேதனையைத் தருகின்றது.

இலங்கை ஒரு சிறிய நாடு. இங்கு அதிகமான நீர் நிலைகள் காணப்படுகின்றன. இப்படியான நீர்வளத்திற்குப் பாதிப்பாக அமையாமல், எப்படி அந்தந்த பிரதேசங்களில் குப்பைகளை வேறு வேறாக்கப்பட்ட அமைப்பில் சேகரிக்கப்பட்டு ஏனைய மக்களுக்கு தொழில் வாய்ப்பை கொடுக்கக் கூடிய விதத்தில் எப்படி ஒருங்கிணைந்த திண்மக் கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளலாம் என்ற விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்திலேயே குப்பை தொடர்பில் ஒரு சிறந்த முகாமைத்துவத்தை அடையலாம்.

ஏற்கனவே மீதொட்டமுள்ளை பகுதியில் குப்பை கொட்டுவதை மக்கள் எதிர்த்தார்கள். அதை அவர்கள் கவனத்திற் கொள்ளவில்லை. விளைவாக 40 இற்கும் மேற்பட்ட உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. தற்போது குப்பை கொட்டத் தீர்மானித்திருக்கும் அருவைக்காட்டு பிரதேசமும் மக்கள் நடமாட்டம் கூடிய பிரதேசமாகும். சமூக, பொருளாதார, சூழலியல், வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தில் குப்பைகளை கொண்டு போய் கொட்டுவதன் மூலம் மீண்டுமொரு மீதொட்டமுள்ளையை உருவாக்குவதன்றி வேறொன்றும் நடைபெறப் போவதில்லை.

இலங்கை போன்ற நாடுகளுக்கு அடிக்கடி இயற்கை அனர்த்தங்களின் தாக்கங்கள் காணப்படுகின்றன. சில நேரம் இலங்கை போன்ற நாடுகளுக்கு புவி நடுக்கத்தினுடைய அச்சுறுத்தல் எதிர்காலத்தில் காணப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது. கரையோரப் பிரதேசங்களில் குப்பைகளைக் கொண்டுபோய் கொட்டுவதன் மூலம் இது பாரதூரமான விளைவுகளையே கொண்டு வரும்.

எனவே இது தொடர்பாக திட்டமிடப்பட்ட முறையில், மிகவும் சிறந்த கண்ணோட்டத்தைச் செலுத்தும் போது இப்படியான நடவடிக்கைகளிலிருந்து மீளக்கூடியதாக இருக்கும். அத்துடன் நிலைபேறான சூழல் முகாமைத்துவ நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்துவதனூடாகவே நாட்டில் 'நீலப்-பசுமை' யுகத்தைக் கட்டியெழுப்ப முடியும். இல்லாவிடின் அது வார்த்தையளவில் காணப்படும் ஒரு வாசகமாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி வேட்பாளராக கோத்தாபய ராஜபக்ஷ

• அபூ அர்ஸலான்

2020 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை நியமிப்பது தொடர்பில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறி லங்கா பொதுஜன பெரமுன கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடல்கள் தோல்வியுற்றுள்ள நிலையில், சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஏகமனதாகத் தெரிவாகியுள்ளார். பத்தரமுல்லையிலுள்ள ராஜபக்ஷவின் குடும்ப இல்லத்தில் அனைத்து ராஜபக்ஷாக்களும் ஒன்றுகூடி மிக நீண்ட நேரம் கலந்துரையாடிய பின்னர் இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக ஜனாதிபதி வேட்பாளராக கோத்தாபய களமிறக்கப்படுவது குறித்து பல்வேறு சர்ச்சைகளும் விவாதங்களும் நடைபெற்று வந்தன. ஷமல் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, மஹிந்தவின் மகனார் நாமல் ராஜபக்ஷ, ஷமல் ராஜபக்ஷவின் மருமகன் ஷசிந்திர ராஜபக்ஷ என ராஜபக்ஷாக்கள் கூடிய இரவுப் போஷனத்தின் போது கோத்தாபயவை வேட்பாளராக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அரசியலமைப்பு மாற்றத்தின்படி மஹிந்த ராஜபக்ஷவினால் மூன்றாவது முறை ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க முடியாது. 35 வயதுக்குக் குறைவான ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க முடியாது என்பதனால் நாமல் ராஜபக்ஷவும் வேட்பாளராய் நிற்பதற்கு வாய்ப்பில்லை. இருப்பவர்களுள் கோத்தா மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளருக்குத் தகுதியானவர்கள்.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கப் போவதில்லை என்ற முடிவை பசில் ராஜபக்ஷ தெளிவாக வெளியிட்டு விட்டார். தற்போதுள்ள சூழ்நிலையில் கோத்தாபய ராஜபக்ஷ மாத்திரமே மஹிந்த குடும்பத்தில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவதற்குத் தகுதியுள்ளவர். ஆயினும், இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டுள்ள கோத்தா அமெரிக்கப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

ஐ.தே.க.வின் அமைச்சர் நவீன் திஸாநாயக்க, இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் வெளிநாட்டுப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்யாவிட்டால் வேட்பாளராகக் களமிறங்க முடியாது. இது தொடர்பான சட்டமொன்றை தாம் கொண்டு வரப் போவதாகவும் தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு வெளி நாட்டுப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்தமையை இத்தகைய வேட்பாளர் நிரூபிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கோத்தா சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நியமிக்கப்படுவதற்கு முன்பாகவே இது குறித்த செய்திகள் கசிந்து விட்டன. அப்போது பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பிய ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலர், மஹிந்தவின் குடும்ப அங்கத்தவர்கள் அல்லாத வேறு எவரேனும் பொதுஜன பெரமுனவிற்கு இல்லையா எனக் கேள்வியெழுப்பினர்.

சமீபத்தில் பாராளுமன்ற விவாதங்களில் சர்ச்சைக்குரியவராகக் கருதப்படும் பிரபல சிங்கள நடிகர் ரஞ்சன் ராமநாயக்க, கோத்தாபயவின் வேட்பாளர் பதவி குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார். அதன்படி, கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற மாட்டார் எனவும், 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை அவரால் பெற்றுக் கொள்ள முடியாது எனவும் ரஞ்சன் கூறியுள்ளார்.

இதற்கான பிரதான காரணம், தமிழ் மக்களின் வாக்குகள் எதுவும் கோத்தாவுக்குக் கிடைக்காது. அதே போன்று சிறுபான்மை மக்கள் எவரது வாக்கும் கோத்தாவுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. சிறுபான்மையினரின் வாக்குகளின்றி கோத்தா வெற்றி பெறுவது சாத்தியமில்லை. இந்நிலையில், சிறி லங்கா பொதுஜன பெரமுன கோத்தாவை களமிறக்கியிருப்பது ஐ.தே.க.வுக்குச் சாதகமானது.

ஐ.தே.க.வில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அல்லது சஜித் பிரேமதாஸ ஆகியோரில் எவர் களமிறங்கினாலும் அவர் வெற்றி பெறுவது நிச்சயம் என்றும் சிறுபான்மை மக்களின் வாக்குகள் நிச்சயம் அவ்விருவருக்கும் கிடைக்கும் என்றும் ரஞ்சன் தெரிவித்துள்ளார். சிறுபான்மை மக்களின் வாக்குகள் தீர்க்கமானவை. தீர்மானிக்கும் சக்தியுள்ளவை என்பதை ரஞ்சன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்ரிபால சிறிசேனவை பதவியில் அமர்த்தியதில் தமிழ் முஸ்லிம்களின் வாக்குகளே நிர்ணயகரமான பங்கு வகித்தன. ஏனெனில், ராஜபக்ஷவிற்கும் சிறிசேனவுக்கும் இடையிலான வாக்கு வித்தியாசத்தை நோக்கும்போது நிச்சயம் அது சிறுபான்மையினரின் வாக்குகள் தான் என்பது உறுதியாகும்.

இவ்வுண்மையை சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தாவும் ஏற்றுக் கொண்டுள்ளார். சிறுபான்மை மக்களுக்கும் தனக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதில் அவர் தீவிர கவனம் செலுத்தி வருகின்றார்.

தமிழ், முஸ்லிம் குழுக்களோடு அடிமட்டத்திலான கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் நடாத்தி வருகின்றார். போரை வெற்றி கொண்டமைக்காக தன்னை தமிழ் தலைவர்கள் கொடூரமானவராக சித்தரித்து வருவதோடு, தமிழ் மக்களுக்கு எதிரானவராகவும் காட்டுகின்றனர். இதனாலேயே தன்னைப் பற்றிய ஒரு பயம் தமிழ் மக்களிடம் உருவாக்கப்பட்டுள்ளது என்று கோத்தாபய சமீகத்திய நேர்காணலொன்றில் தெரிவித்துள்ளார்.

தான் தமிழ் முஸ்லிம்களின் எதிரியோ இனவாதியோ அல்ல. தன்னைப் பற்றிய குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அடிப்படையற்றவை. பொதுபல சேனாவுடனோ ஞானசாரவுடனோ தனக்குத் தனிப்பட்ட எந்தத் தொடர்பும் இல்லை. முஸ்லிம் கள் தனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கோத்தா பகிரங்கமாகவே வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, கடந்த வாரம் தமிழ் மக்கள் ஆதரிப்பார்களா கோத்தாவை என்ற கட்டுரையொன்றில், இறுதிப் போரின் போது தமிழ் மக்களுக்கு நேர்ந்த அத்தனை துயரங்களுக்கும் இனப் படுகொலைகளுக்கும் கோத்தாவே காரணம் என்று தமிழ் மக்களில் கணிசமானோர் கருதுகின்றனர். அதேவேளை, தமிழ் டயஸ்போரா ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிராக சர்வதேச அளவிலான பிரச்சாரத்தினை முடுக்கி விட்டுள்ளது.

தமிழ்ர்களின் அரசியல் ரீதியான தீர்வுத் திட்டத்திற்கு ராஜபக்ஷ குடும்பம் எந்தவகையிலும் ஆதரவளிக்காது என்றே தமிழர்கள் நம்புகின்றனர். இந்நிலையில் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாவை ஆதரிப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

இதேவாதம் சக சிறுபான்மை இனமான முஸ்லிம்களுக்கும் பொருந்தும். ஆனால் இறுதிக் கட்டத்தில் வெல்லப் போகின்றவன் யார் என ஊகித்துக் கொண்டு வேலி பாயும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் எந்தப் பக்கம் நிற்கப் போகிறது என்பதை இப்போதைக்கு ஊகிக்க முடியாது. அதனால் கோத்தாவின் பக்கமும் முஸ்லிம் வாக்குகள் சாய்வதற்கும் வாய்ப்புள்ளது.

இத்தனைக்கும் மத்தியில் மீண்டும் ஒருமுறை ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்று ஆசைப்பட்ட மைத்திரியின் கனவின் மீது இடி விழுந்துள்ளது. ரணில் விக்ரமசிங்கவின் 70 ஆவது பிறந்த நாளை கேக் வெட்டிக் கொண்டாடிக் கொண்டிருக்கும் ஐ.தே.க. இதுவரை தமது வேட்பாளர் குறித்து அறிவிக்கவில்லை.

நெருங்கிய கட்சி வட்டாரங்களின்படி பெரும்பாலும் ரணில் விக்ரமசிங்கவே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கும் வாய்ப்புள்ளது. எவ்வாறாயினும், கோத்தாவிற்கும் ஐ.தே.க. வேட்பாளருக்கும் இடையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் முடிவு சிறுபான்மை மக்களின் அரசியல் எதிர்காலத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறவுள்ளது என்பதனால் சிறுபான்மைச் சமூகங்கள் மிக நிதானமாகவும் தூர தரிசனத்தோடும் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

அரசியலில் மாறாத விதி என்று எதுவும் இல்லை.

மின்வெட்டு: மீளவும் இருட்டுக்குள் இலங்கை

இலங்கையில் போர் உக்கிரமாக நடந்துகொண்டிருந்த 1990 களின் கடைசிக் கூறுகளில் 8 மணித்தியால மின்வெட்டு நடைமுறையில் இருந்தது. பகலில் 5 மணித்தியாலங்களும் இரவில் 3 மணித்தியாலங்களும் அப்போது மின்வெட்டு அமுலில் இருந்தது. ஜனாதிபதியாக இருந்தவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க. அவரது மின்சக்தி எரிபொருள் மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தயே மின்வெட்டை அமுல்படுத்தியவர்.

நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு குறைந்தமையே மின்வெட்டுக்கான காரணம் என அறிவிக்கப்பட்டது. கடுமையான வரட்சியே மின்வலு நெருக்கடிக்கான மூல காரணமாகும். தொடர்ந்து வந்த மஹிந்தவின் ஆட்சியிலும் சில மணித்தியால மின்வெட்டு நடைமுறையில் இருந்தது.

தற்போது நல்லாட்சி அரசாங்கத்தில் 4 மணித்தியால மின்வெட்டு 25 மார்ச் 2019 இலிருந்து அமுலுக்கு வருவதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்துள்ளார். மின்சார வெட்டு தொடர்பான கால அட்டவணை ஒன்றையும் மின்சார சபை வெளியிட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை 400 MW மின்சாரத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதை ஈடுசெய்யவே மின்வெட்டு அமுலாக்கப்படுவதாக மின்சார சபை தனது செயல்பாட்டை நியாயப்படுத்தியுள்ளது.

இதில் புத்தளத்திலுள்ள லக்விஜய மின் உற்பத்தி ஆலை செயலிழந்தமையினால் 300 MW மின்சாரமும் கரவலபிடிய மின் ஆலை செயலிழந்துள்ளதால் 100 MW மின்சாரம் இழக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை கூறுகின்றது. நாட்டில் தொடர்ச்சியாக நிலவி வரும் கடும் வரட்சியினால் நீர்த்தேக்கங்களின் மட்டம் 35 வீதத்தால் குறைந்துள்ளது.

நீர் மின் உற்பத்தியின் அளவு குறைந்துள்ளதனால் வெப்ப மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி ஆலைகளிலிருந்து அதிக மின்உற்பத்தியை பெற வேண்டியுள்ளது. ஆனால், நீர் மின்உற்பத்தியுடன் ஒப்பிடும்போது வெப்ப சக்தியின் மூலம் ஒரு அலகு மின் உற்பத்தியை மேற்கொள்ள 10 மடங்கு செலவாகின்றது என மின்சார சபையின் தலைவர் அபே விக்ரம தெரிவித்துள்ளார்.

லக்விஜய மற்றும் கரவலபிடிய கரையோர மின்உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் முடங்கியுள்ளதால் மின்சார நெருக்கடியொன்று ஏற்பட்டுள்ளது.

மின்சக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க, தொடக்கத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என்று அறிவித்தபோதும், ஜூலை நடுப்பகுதி வரை மின்வெட்டு அமுலில் இருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்தது. தற்போது ஏப்ரல் நடுப்பகுதி வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படும் எனவும், அதன் பின்னர் நிலைமைகள் சீரடைந்து விடும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். பொது மக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ள அமைச்சர் மின்சார நெருக்கடியினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்கு வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை பொதுவசதிகள் ஆணைக்குழுவில் முன் அனுமதி பெறாமல் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவது சட்டவிரோதமானது என பொதுவசதிகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜயந்த ஹேரத் ஊடகங்களிடம் தெரிவித்தார். இவ்வாணைக்குழுவுக்கு நுகர்வாளர்களிடமிருந்து ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபை பொதுவசதிகள் ஆணைக்குழுவின் முன்னனுமதியோடு முறையான கால அட்டவணையைத் தயாரித்து முற்கூட்டிய மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என ஜயந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள தற்போதைய மின்சார நெருக்கடி குறித்து கடந்த சில ஆண்டு களாக துறைசார் நிபுணர்கள் பல்வேறு எச்சரிக் கைகளை விடுத்திருந்தபோதும் மாறி மாறி வந்த எந்த அரசாங்கமும் அதனைக் கருத்திற் கொள்ளவில்லை. அரசாங்கங்களின் மெத்தனமும் தூர தரிசனம் இல்லாமையுமே தற்போது நாடு எதிர்கொண்டுள்ள மின்வெட்டுக்கான காரணமாகும். முன்னாள் மின்சக்தி அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்க எழுதிய பிரபலமான நூலொன்றிலும் இலங்கை மின்சார சபை மற்றும் மின் உற்பத்தித் துறைக்குப் பின்னாலுள்ள மாபியாக்கள் குறித்து வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபையில் நிலவும் ஊழல் மோசடிகளை முறையாகக் கையாள முடியாத நிலையிலேயே அவ்வப்போது நியமிக்கப்படும் மின்சக்தி அமைச்சர்கள் இருப்பதாக சம்பிக்க பல முறை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் மின்வலும் எரிபொருளும் இரு அடிப்படை சக்தி மூலங்களாகும். அரசாங்கங்களின் மூலோபயத் திட்டங்களில் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.

வளர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப மின்உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான திட்டங்களை தொழில்சார் நிபுணர்கள் அவ்வப்போது முன்வைத்து வந்துள்ளனர். அரசாங்கங்கள் அவற்றை செவியேற்கவில்லை. இதன் விளைவாகவே நாடு மின்வெட்டை எதிர்கொண்டுள்ளதாக இலத்திரனியல் மற்றும் மின்சாரப் பொறியியலாளர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இரவில் பரீட்சைகளுக்காக கற்கும் மாணவர்கள் உள்ளிட்டு நாட்டின் அனைத்து மக்களும் மின்வெட்டின் மோசமான விளைவுகளை அனுபவிக்கின்றனர். மக்களிடம் மன்னிப்புக் கோருவதால் மின் உற்பத்தியை அதிகரித்து இருட்டில் தடுமாறும் நாட்டை மீட்க முடியாது.

சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்தில் 8 மணித்தியாலங்கள் அமுலில் இருந்த மின்வெட்டு தற்போதைய நல்லாட்சியில் 4 மணித்தியாலங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தீர்க்க தரிசனமற்ற, ஊழல் நிறைந்த அரசாங்கங்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் எவ்வளவு தூரம் மெத்தனப் போக்கோடு செயல்படுகின்றது என்பதற்கு அமுலில் உள்ள மின் துண்டிப்பு சிறந்த உதாரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுவது நலம்

இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

நியூசிலாந்து துப்பாக்கிச் சூட்டு விவகாரம்: உலகிற்கு சொல்ல வந்த செய்தி என்ன?

நியூசிலாந்தின் பிரதமர் ஜெசின்டா ஆர்டன் இன்று முழு உலகினதும் அவதானத்தை வென்ற வீராங்கனையாக மாறியிருக்கின்றார். நியூசிலாந்தின் வரலாற்றில் மிகவும் கவலைக்கிடமான தினமாக கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது. இக்கவலையான தினத்தில் நியூசிலாந்து பிரதமரின் நடத்தை எல்லோரதும் அவதானத்தை வென்றுள்ளது. "நாம் எல்லோரும் ஒரே இன மக்கள். அவர்கள் (முஸ்லிம்கள்) எம்முடைய பிரிவினர். இக்கவலையான நிகழ்வு எம் செவிகளில் எதிரொலிக்கிறது" என்பதாக இச்சம்பவத்தைத் தொடர்ந்து பிரதமர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

பகைமை,' கோபாவேஷம் மற்றும் இனவாதத்திற்கு தூபமிடுகின்ற உலகின் ஒரு சில தலைவர்களுக்கு நியூசிலாந்து பிரதமரின் நடவடிக்கைகள் முன்மாதிரியாகத் திகழ்கின்றது. எமது நாட்டில் மதவாதம், இனவாதம், குலபேதங்கள் மற்றும் துவேஷக் கருத்துக்களுக்கு எண்ணெய் ஊற்றும் அரசியல்வாதிகளுக்கும் இப்படியான நடத்தைகளின் மூலம் பல்வேறு விடயங்களைக் கற்றுக்கொள்ள முடிகின்றது.

உலகம் பூராகவும் அரசியல், வியாபார நோக்கங்களுக்கு மத எதிர்ப்பைக் காட்டுவோருக்கும் வெள்ளையர் அல்லாத இனங்களுக்கு எதிராக பரப்பப்படும் கோபாவேசக் கருத்துக்கள் குறித்து கடுமையான முறையில் சிந்திக்க வேண்டிய காலம் எழுந்துள்ளது. இவ்வாறான துவேசக் கருத்துக்களை பரப்பும் தீவிர வலதுசாரி அமைப்புக்களின் சுற்றுநிருபங்கள் தொடர்பில் உலகம் தனது அவதானத்தைச் செலுத்த வேண்டும் என்ற செய்தியையே நாம் இந்நிகழ்வினூடாக நோக்க வேண்டியுள்ளது.

இத்தகைய சுற்றுநிருபத்திற்கு இரையாகிப் போயுள்ள தீவிர வலதுசாரி அரசியல்வாதிகளினதும், ஊடகங்களினதும் மிக மோசமான செயற்பாடுகள் இப்போதாவது நிறுத்தப்பட வேண்டும். இத்தகைய தீவிரவாத, மத எதிர்ப்புப் பிரச்சாரங்கள் மற்றும் எதிரிகளை உருவாக்கி பீதி, சந்தேகங்களை ஏற்படுத்தி சச்சரவுகளை உருவாக்கும் செயற்பாடுகளுக்கு முன்பாக அவற்றை கண்டிப்பதற்கும், அவ்வாறான செயற்பாடுகளை நிறுத்துவதற்கும் பொறுப்புவாய்ந்தவர்கள் கிளர்ந்தெழ வேண்டும்.

ஜெசின்டா அந்நாட்டு முஸ்லிம் தலைவர்களை பாராளுமன்றத்திற்கு அழைத்து சபாநாயகரின் தலைமையில் கூட்டமொன்றை நடாத்தியுள்ளார். இக்கூட்டம் ஆரம்பிக்கப்படும் வேளையில் துஆ ஓதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் நியுசிலாந்து பிரதமர் பாராளுமன்றில் ஆற்றிய உரையும் உலக மக்களை கண் திறந்து பார்க்க வைத்துள்ளது. "இப்படியான நிகழ்வுகள் மீண்டும் நியூசிலாந்தில் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஏன் இப்படி நடந்தது என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்வோம். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி, நியாயத்தை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

குற்றவாளிகளுக்கு நியூசிலாந்து சட்டத்திற்கு முகம்கொடுக்க நேரிடும். மத நிந்தனை மற்றும் கோபாவேசக் கருத்துக்களை நியூசிலாந்தில் தெரிவிப்பதற்கு இடம் கிடைத்தமை குறித்தும் நாம் அவதானத்தை செலுத்துவோம். பொறுப்புவாய்ந்தவர்கள் தங்களது பொறுப்புக்களை நிறைவேற்றியமை குறித்தும் தேடிப் பார்ப்போம். அன்று கிறைஸ்சேர்ஜ் பள்ளிவாசலின் நுழைவாயில் முன்பாக இருந்துகொண்டு அக்குற்றவாளிக்கு சலாம் கூறி உள்ளே வாருங்கள் என்று அங்கிருந்த பெரியார்கள் அழைப்பு விடுத்தமை பற்றி எனக்கு வியப்பாக உள்ளது.

கோபாவேசத்திற்கும், இனவாதத்திற்கும் எதிராக இனிமேல் நாம் எமது நுழைவாயிலை மூடிவிடுவோம். எமது நாட்டில் 200இற்கும் மேற்பட்ட இனக்குழுமங்கள் உள்ளன. அவர்கள் அனைவருக்கும் எமது வாயில்கள் எப்போதும் திறந்தே இருக்கும். ஆனால் இனவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக எமது வாயில்கள் மூடப்படும்" என்பதாக பிரதமர் பாராளுமன்றில் நீண்டதொரு உரையை ஆற்றியிருந்தார்.

உண்மையிலேயே ஜெசின்டா ஆர்டனின் கருத்துக்களின் மூலம் மனிதாபிமானமே வெளிப்பட்டது. அவர் தனது செயற்பாடுகளுக்கூடாக மனிதாபிமானத்தையே காண்பித்தார். முழு உலகிலும் ஒரு மனித இனமே உள்ளது. நாம் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்கின்றோம் என்கின்ற கருத்துக்களையே அவரது உரையினூடாக விளங்க முடிகிறது. இந்தச் சம்பவத்திற்கு பிறகு முழு உலகிற்கும் ஒரு வெளிச்சமே கிடைப்பதாக உள்ளது.

நியூசிலாந்தின் துரதிஷ்ட நிகழ்வை தொடர்ந்து லண்டனின் ரீஜன்ட் முஸ்லிம் பள்ளிவாசலுக்கு சென்ற கெண்டபரியைச் சேர்ந்த கிறிஸ்தவ ஆண்டகை தெரிவித்த கருத்துக்கள் மிக முக்கியமானவை. அவர் அங்கு ஆற்றிய உரையில், "இப்படுகொலையானது பிசாசின் செயலாகும். நியூசிலாந்தில் முஸ்லிம்களை முன்னிறுத்தி அந்நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தெரிவித்த கருத்துக்கள் எம்மை உற்சாகப்படுத்துவதாக உள்ளன. இஸ்லாத்திற்கு எதிரான யுத்தமொன்றை உருவாக்கவே இக்கொலையாளிக்கு அவசியப்பட்டிருந்தது.

ஆனால் அதற்கு முற்றிலும் மாற்றமான விடயமே அரங்கேறியது. இதற்கெதிராக உலகம் முழுவதிலும் மனிதாபிமானக் கூட்டுப்படையொன்று மேலெழுந்தது. இயேசு நாதர் தனது ஆதரவாளர்களுக்கு ஐக்கியத்தைக் கட்டியெழுப்புமாறே உபதேசம் செய்துள்ளார். அதற்கு செயற்பாடுகள் அவசியம். இறைவனுக்கு முன்னால் நாம் என்பது நீங்கள். நீங்கள் என்பது நாங்கள். நாம் ஒன்று பட்டு செயற்படுவோம். இறைவன் உங்களை பலப்படுத்துவான்" என்றார். இது தீவிரவாதத்திற்கு எதிராக அனைத்து இன மக்களையும் ஒன்றுபடுமாறு விடுக்கும் அறைகூவலாகும்.

கனடாவின் இளம் பிரதமர் தெரிவித்த கருத்துக்களை நோக்கும் போதும் உலக நாடுகளுக்கு இப்படிப்பட்டவர்களே தலைமை வகிக்க வேண்டும் என்ற யோசனை வருகின்றது. ஜெஸ்டின் புரூடோ பின்வருமாறு கூறினார். "இப்படுகொலை இஸ்லாத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இஸ்லாமோபோபியா மூலம் தூண்டப்பட்ட விடயமாகும். ஒரு பித்துப் பிடித்த தீவிரவாதி அம்மக்களை சுட்டிருக்கிறான். அம்மக்கள் படும் வேதனையை நாம் உணர்கின்றோம்." என்றார்.

இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை நோக்கி... - VII

மக்களின் பங்களிப்புடனான மக்கள் மைய யாப்பே நிலையானது

• விக்டர் ஐவன்

மக்களுக்குள்ள அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு தற்போதைய அரசியலமைப்பும் அதற்கு முந்திய அரசியலமைப்புக்களும் வழங்கியுள்ள ஒரே வழிமுறைதான் தேர்தலில் வாக்களிப்பதற்குள்ள உரிமை. இந்தக் குறுகிய காலாவதியான முறையில் தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமை மட்டுமே வழங்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக, மக்கள் மயப்பட்ட செயற்பாடுகளின் போது அரசியலமைப்பில் மக்களினதும் ஆக்கபூர்வமான பங்களிப்பைப் பெறும் வகையில் மக்கள் மைய யாப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இன்னொருவகையில், அரசியலமைப்பு என்பது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அதிகமான பங்களிப்பை மக்களுக்கு வழங்கக் கூடிய அரசியலமைப்புச் சபை ஒன்றின் மூலமாக புதிய அரசியலமைப்பு வரையப்பட வேண்டும்.

யாப்பு உருவாக்கமும் நடைமுறைப்படுத்தலும்

யாப்பு உருவாக்கத்திலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் இலங்கைக்கு ஆரோக்கியமான வரலாறு இல்லை. இதுவரை மூன்று யாப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் நான்காவது யாப்பொன்றை வரையாமல் முன்செல்ல முடியாது என்ற நிலைக்கு இலங்கை வந்திருக்கின்றது. முன்னைய யாப்பு உருவாக்கங்களின் போது யாப்பு உருவாகத்துக்குத் தேவையான கொள்கைகளும் பாரம்பரியங்களும் கருத்தில் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த யாப்புகளில் பொது உடன்பாடுகளை விட அப்போது ஆட்சியிலிருந்த கட்சியின் தேவைக்கேற்பவே யாப்புகள் வரையப்பட்டன. இவை எதுவுமே மக்கள் மயப்படுத்தப்பட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றவைகள் அல்ல.

யாப்பினை கேலிக்குட்படுத்துவது தொடர்பில் இலங்கைக்கு தனித்துவமான இடம் இருக்கின்றது. யாப்புத் திருத்தத்துக்கான வாய்ப்புக்கள் எல்லாம் யாப்பிலுள்ள குறைகளைத் திருத்துவதற்கன்றி குறுகிய இலாபங்களை அடைவதற்கோ யாப்பினை மீறுவதற்கோ தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நாட்டின் தலைமைகள் யாப்பினை மீறிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அத்தோடு யாப்பினை மீறுவது பாரிய குற்றம் என்ற உணர்வு கூட இந்த நாட்டிலே இல்லை. சில மேட்டுக் குடிகளினால் அல்லது அரசியலமைப்புப் பேரவையின் அங்கத்தவர்களினால் வரையப்படும் யாப்பு தான் இலங்கையில் இன்றுவரையான யாப்பு உருவாக்க முறையாக இருக்கின்றது. பிரதமர் ரணில் முன்னெடுக்கவுள்ள யாப்புருவாக்க முறையும் இதை விட வித்தியாசமானதொரு முறையாக இருக்கப் போவதில்லை.

பங்களிப்பு யாப்புருவாக்கம்

முன்னைய யாப்புருவாக்க நடைமுறைகளை யாப்புருவாக்க நிபுணர்கள் காலாவதியான முறையாகவே நோக்குகிறார்கள். முன்னைய யாப்புருவாக்கத்தில் மக்கள் பங்களிக்க முடியுமான நேரடிச் செயற்பாடுகள் எதுவும் இருக்கவில்லை. யாப்பு உள்ளடக்கியுள்ள விடயங்களிலேயே கவனம் செலுத்தப்பட்டதேயன்றி யாப்பு உருவாக்கப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படவில்லை. இது மிகவுமே இத்துப் போன ஒரு முறை என்றே நிபுணர்கள் கருதுகிறார்கள்.

தற்கால யாப்புருவாக்கச் செயற்பாடுகளில் மக்களின் பங்களிப்பு முக்கியமான நிபந்தனையாகக் கருதப்படுகிறது. அதேபோல யாப்பு உள்ளடக்கியுள்ள விடயங்களைப் போலவே யாப்பு உருவாக்கப்பட்ட விதமும் முக்கியத்துவம் பெறுகிறது. ஜனநாயக அரசியல் யாப்பு என்பது இனிமேலும் ஜனநாயக ஆட்சிமுறையைக் கட்டியெழுப்புதலாக மட்டும் கருதப்படுவதில்லை. ஜனநாயக செயன்முறைக்குள் ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றாகவே அரசியல் யாப்பு கணிக்கப்படுகிறது.

மக்களின் பங்களிப்புடனான அரசியல் யாப்பு உருவாக்கத்தில், அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இனம், குலம், மதம், பால், தொழில் வர்க்கம் என அனைத்துத் தரப்பினரும் உள்வாங்கப்படுவது முக்கியமான நிபந்தனையாக அமைய வேண்டும். எந்தக் காரணத்தினாலும் ஏதேனுமொரு தரப்பு விடுபடுமாக இருந்தால் அதனால் வருகின்ற பாதிப்பை ஈடுசெய்வது சிரமமானதாகும்.

பங்களிப்புடனான யாப்புருவாக்கக் கோட்பாடுகள் தொடர்பான முன்னணி நிபுணரான பேராசிரியர் விவியன் ஹார்ட், 1789 இன் அமெரிக்க யாப்புருவாக்கம் தொடர்பில் முக்கியமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அமெரிக்க யாப்புருவாக்கத்தின் போது ஆபிரிக்க அமெரிக்கர்கள், ஆதிவாசிகள் மட்டுமன்றி அமெரிக்கப் பெண்களுடைய கருத்துக்கள் கூட கவனத்தில் கொள்ளப்படவில்லை. பிற்காலங்களில் இவர்கள் தமக்கான அங்கீகாரத்தைக் கோரியபோது அமெரிக்க யாப்பில் அதற்கான உடனடித் தீர்வுகள் எதுவும் இருக்கவில்லை.

அமெரிக்காவின் யாப்புருவாக்கச் செயற்பாடுகள் கடினமானதும் நீண்ட காலத்தை எடுப்பதாகவும் இருந்ததனால், இந்தப் பிரச்சினைகள் இன்றுவரை முழுமையாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகளாகத் தொடர்கின்றன.

பங்களிப்பு யாப்புருவாக்கமே இன்றைய உலகில் நடைமுறைப்படுத்தப்படும் அதிக அங்கீகாரம் கொண்ட யாப்புருவாக்க முறையாக இருக்கின்றது. இது யாப்புருவாக்கச் செயற்பாடுகளின் முடிவுறாத பரீட்சார்த்த முயற்சிகளின் தொடராகவும் அமைகின்றது. நிகரகுவா, உகண்டா, பிரேஸில், தென் ஆபிரிக்கா, வட அயர்லாந்து, கென்யா, ருவாண்டா ஆகிய நாடுகளை மக்களின் பங்களிப்புடனான யாப்புருவாக்கத்துக்கான உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இந்த யாப்புருவாக்க முறை சர்வதேசத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னொருவகையில், நாட்டில் நடைபெறுகின்ற அரசியலமைப்பு உருவாக்கத்தில் ஆக்கபூர்வமான பங்களிப்புச் செய்வதற்கு மக்களுக்குள்ள உரிமை சர்வதேச சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இது மக்களுக்குக் கிடைத்துள்ள பறிக்க முடியாத உரிமையாகும்.

சர்வதேச சட்டம்

கனடாவின் மிக்மக் கோத்திரத்தினர் தாம் யாப்புருவாக்கச் செயற்பாடுகளில் உள்ளடக்கப்படவில்லை எனத் தொடுத்த வழக்கில் மிக்மக் கோத்திரத்தினருக்கு யாப்புருவாக்கச் செயற்பாடுகளில் பங்குகொள்ளும் உரிமை இருக்கிறது என வழங்கப்பட்ட தீர்ப்பு (மார்ஷல் எதிர் கனடா CCPR/C43/D/205/1986 - 1991 Dec 03) இது தொடர்பான முதல் சட்டமாகக் கொள்ளப்பட முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உரை அதிகார சபை (Text Authority) யின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தின் 25 ஆவது பிரிவு யாப்புருவாக்கத்தில் மக்களுக்குள்ள உரிமையை குறித்துரைக்கிறது. பிரஜைகள் தமது அரசியலமைப்பை மாற்ற வேண்டும் எனத் தீர்மானிக்கும் சந்தர்ப்பங்களில் பொது விவகாரங்களை முன்னெடுக்கும் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்குகொள்கின்றனர் என அது குறித்துரைக்கிறது.

இது ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் உரிமைகள் தொடர்பான கோட்பாட்டுக்குள்ளால் அற்புதமாக மறைந்திருக்கிறது என பேராசிரியர் விவியன் ஹார்ட் குறிப்பிடுகின்றார். இது முறையாகப் பயன்படுத்தப்படாததாகவும் இன்னும் வளர்ச்சியடைய வேண்டியதாகவும் இருக்கின்றது.

கனடாவின் கியூபெக் பிராந்தியத்துக்கு சுய அதிகாரம் வழங்குவது தொடர்பில் 1998 இல் கனேடிய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் மக்களின் பங்களிப்பு யாப்புருவாக்கம் தொடர்பில் முக்கியமான சட்டமாகும். ஜனநாயகம் கனேடிய அரசியல் யாப்பின் அடிப்படை எனவும் அது தான் பிரதானமான அடிப்படை எனவும் இந்தத் தீர்ப்பு குறித்துக் காட்டுவதோடு, பங்களிப்பு அரசியலமைப்பு உருவாக்கமானது சட்ட ரீதியான ஜனநாயக யாப்புருவாக்கச் செயற்பாட்டின் முக்கியமான அடிப்படை எனவும் அந்தச் சட்டம் எடுத்துக் காட்டுகிறது.

யாப்புருவாக்கத்தின் போது அந்த நாட்டின் பொதுமக்களுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவதற்குள்ள சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுவே முக்கியமான இந்தத் தீர்ப்புகளுக்கும் வரைவிலக்கணங்களுக்கும் ஊடாக உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆனாலும் இது இலகுவான முறையல்ல. விவியன் ஹார்ட் கூறுவது போல, அரசியலமைப்பொன்று துறைசார் தகுதியுடைய பிரமுகர்கள் சிலரால் வரையப்படுகின்ற சட்ட மற்றும் கலைச்சொற்கள் அடங்கிய ஆவணமாக அமையும் போது அது தயாரிப்பதற்கு இலகுவானதாக அமையும். இதற்கெனச் செலவிட வேண்டிய காலமும் குறைவாக இருக்கும். ஆனால் அரசியல் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருடனும் மேற்கொள்ளப்படுகின்ற கலந்துரையாடல்கள் மூலமாக யாப்புருவாக்குவது இலகுவான பணியல்ல. அது சிக்கலானது. நீண்ட காலம் எடுக்கக் கூடியது.

ஆனாலும் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமான அளவுக்கு அனைத்து கருத்து முரண்பாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவர முடியாவிட்டாலும், அனைவரும் அமைதியாக ஒன்றாக வாழ்வதற்கு முடியுமான அரசியல் யாப்பினை உருவாக்கிக் கொள்வதற்கான சிறந்த வழி, பங்களிப்பு யாப்புருவாக்க முறைதான் என்று சொல்ல முடியும்.

இலங்கை தெரிவு செய்ய வேண்டிய வழி

நாடும் சமூகமும் அரசும் அசாதாரணமான சிக்கலான குழப்பத்திலிருக்கிறது. சுதந்திரம் கிடைக்கும் போது நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய முக்கியமான நிபந்தனையை பூரணப்படுத்தாதனாலும், அதனால் விளைந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தவறியதனாலும் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து வளர்ச்சியடைந்து வந்து தற்பொழுது உச்ச கட்டத்தை அடைந்திருக்கும் நெருக்கடியாகவே இலங்கை முகம் கொடுத்திருக்கும் நெருக்கடியைக் கருத முடியும். 1948 இல் நாம் பெற்றுக் கொண்ட சுதந்திரம், அதனைப் பெற்றுக் கொள்வதற்காக சமூகம் மேற்கொண்ட பலமான, திட்டமிடப்பட்ட சமூகச் செயற்பாட்டின் விளைவாகக் கிடைத்ததொன்றல்ல. நயவஞ்சகமான முறையில் பெறப்பட்ட சுதந்திரம், நாட்டை ஒருமைப்படுத்தும் அளவுக்குப் பலமான சமூக செயற்பாடாக இருக்கவில்லை. பலமான ஜனநாயக அரசியல் சமூகமொன்றை உருவாக்குவதற்கோ முதிர்ச்சியடைந்த அரசியல் தலைமைகளை உருவாக்குவதற்கோ உரிய காரணியாக சுதந்திரம் அமையவில்லை. சமூகத்தில் நிலவிய இன, குல, மத, மொழி பேதங்களைக் களைந்து பொதுவான தேசிய நோக்குடன் தேசத்தை ஒன்று படுத்தவோ ஒற்றுமைப்படுத்தவோ சுதந்திரம் காரணமாக அமையவில்லை.

சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த எந்தத் தலைவரும் இன, மத, குல பேதங்களுக்கு உள்ள அங்கீகாரத்தை இல்லாதொழித்து தேசியத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கவில்லை. சுதந்திரம் கிடைத்ததில் இருந்தே இலங்கை நெருக்கடிக்கு மேல் நெருக்கடியையே சந்தித்தது. இதன் விளைவாக நீண்ட கால யுத்தமும் இரத்தம் சிந்தும் நிலைமைகளும் தொடர்ந்தன. இவை முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னரும் கூட கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொண்டு நாட்டை முன்னேறச் செய்வதற்கான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. இதன் விளைவாக நாடும் சமூகமும் இப்பொழுது வங்குரோத்து நிலையை அடைந்து தோல்வியுற்ற துயரமான நிலைக்கு ஆளாகியிருக்கிறது.

நாட்டின் அரசியல் யாப்பு தொடர்ந்தும் கையாடப்பட்டு வருவதனால் அது இனியும் பயன்படுத்தப்பட முடியாமல் நலிவுற்றிருக்கிறது. உயர்ந்த அந்தஸ்தில் வைத்து மதிக்கப்பட வேண்டிய அரசியல் யாப்புக்கு தாம் செய்த அநியாயங்களைப் பற்றி நாட்டின் எந்தத் தலைவரும் பச்சாதாபப்படுவதாக இல்லை. ஆனாலும் புதிய அரசியல் யாப்பொன்றுக்கான தேவையை அவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

அ. சர்வேஷ்வரன் அவர்கள் யாழ்ப்பாணம் காரை நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர், இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியில் கற்றுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் LLB பட்டத்தையும், கொஸ்டா ரிகாவில் உள்ள ஐக்கிய நாடுகளினுடைய பல்கலைக்கழகத்தில் (UPEACE – UN Affiliated University, Costa Rica) முரண்பாடுகளும் சமாதானமும் பற்றிய கற்கையில் முதுமானிப் பட்டத்தையும் (MA), கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிற்சட்டத் துறையில் தத்துவ இளமானிப் பட்டத்தையும் (M.Phil) பூர்த்திசெய்துள்ளார்.

கடந்த 22 ஆண்டுகளாக பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றி வரும் இவர் தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார். தொழிற்சட்டம், சுற்றாடல் சட்டம், அரசமைப்புச் சட்டம் போன்ற துறைகளில் ஆழ்ந்த புலமையும் அனுபவமுள்ள அ. சர்வேஷ்வரன் அவர்கள் மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

- நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

அல்குர்ஆனிய சிந்தனைகளை ஏனைய மக்களிடமும் கொண்டு போய் சேர்ப்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும்

அ. சர்வேஷ்வரன் - சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர்,
(பணிப்பாளர், சட்ட ஆய்வு நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்)

- **அல்குர்ஆனிய சிந்தனைகள் சம்பந்தமான உங்களுடைய கருத்துக்கள் என்ன? நீங்கள் அதனை வாசித்த போது விளங்கிக் கொண்ட விடயங்கள் என்ன?**

அல்குர்ஆனிய சிந்தனைகள் என்னும் நூலை வாசித்ததை வைத்துச் சொல்வதாக இருந்தால் உண்மையில் ஒரு சமயம் என்பதற்கு அப்பால் ஒரு மனித வாழ்க்கையின் அவசியமான விடயங்களைத் தாங்கிய நூலாக அது காணப்படுகிறது. அதை இன்னுமொரு முறையில் சொல்வதானால் சமூகப் பார்வை பற்றிய நூலாகவே நான் அதனைப் பார்க்கின்றேன். அந்த வகையில் அது எல்லோருக்கும் பொருத்தமான நூலாக உள்ளது. எந்த சமயத்தைப் பின்பற்றுபவராக இருந்தாலும் மனித வாழ்க்கையின் முக்கியமான அம்சங்களைச் சொல்லும் நூலாக அதனைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

அது மாத்திரமல்லாமல் சமூகக் கடமைகள் பற்றியும் அதில் சொல்லப்பட்டுள்ளன. பொதுவாக சமூகத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் அதில் பார்க்கக் கூடியதாக உள்ளது. இன்னும் சொல்லப் போனால் ஒரு தனிமனித வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதையும் அதற்கு அப்பால் தனி மனித வாழ்க்கை எப்படி சமூகத்திற்கு பயன்பெறத்தக்க வகையில் அமைய வேண்டும் என்பதையும் சொல்வதாக உள்ளது.

- **திருக்குறள் உலகப் பொது மறை எனக் கூறப்படுகிறது. அல்குர்ஆனும் உலகப் பொதுமறையாகும். இரண்டும் உலகத்திற்கு சொல்ல வரும் பொதுவான விடயங்கள் உள்ளதா?**

பொதுவாக இரண்டுமே நல்ல விடயங்களைச் சொல்லியுள்ளன. நாம் உலகில் நல்ல மனிதர்களாக வாழ வேண்டும். அப்படி வாழாவிட்டால் இம்மையிலும் மறுமையிலும் எமக்கு துன்பத்தையே கொண்டு வரும் என்கின்ற செய்தியையே நாம் பொதுவாகப் பார்க்க முடியும். அதாவது மனிதன் எப்படி வாழ வேண்டும்? எப்படி வாழக் கூடாது என்பதைச் சொல்வதாக உள்ளது. அடிப்படையில் எல்லாமே ஒன்றாகவே உள்ளது. சில வேறுபாடுகள் இருந்தாலும் பொதுவாக அடிப்படை விடயங்களில் எந்த வேறுபாடுகளும் இல்லை. இரண்டிலுமே 'நீ வாழும் போது நல்லவனாக வாழு!' என்கின்ற செய்தியே சொல்லப்பட்டுள்ளது. அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்கின்ற விடயங்களே இப்பொது மறைகளில் சொல்லப்பட்டுள்ளன.

- **சட்டத்துறையில் நீங்கள் தொழிற் சட்டம், சூழல் சட்டம் தொடர்பில் விஷேட கற்கைகளை மேற்கொண்டுள்ளீர்கள். தொழிற் சட்டம், சூழல் சட்டங்கள் தொடர்பான உங்களது அவதானங்களை சற்று குறிப்பிட முடியுமா?**

தொழிற் சட்டம் என்று குறிப்பிடும்போது இன்று இலங்கையில் அதிக தொழிற் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் பொதுவாக இன்று வேலையாட்களுக்கு சட்டங்களில் என்னென்ன உரிமைகள் காணப்படுகின்றன என்பது தெரியாமல் உள்ளது. இன்று இலங்கை கல்வித் தரத்தில் மிக உயர்ந்த நாடு என்று குறிப்பிட்டாலும் கூட அந்த வேலையாட்களில் பலருக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றன என்பது தெரியாது. இதனால் இன்று அவர்கள் பல்வேறு இடங்களில் பல்வேறு வகைகளில் சுரண்டப்படுகின்றார்கள்.

அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து இறுதியில் அவர்களுக்கு எஞ்சுவது ஒன்றுமில்லை. சட்டங்கள் போதிய அளவில் உள்ளன. ஆனால் அந்தச் சட்டங்களில் உள்ள உரிமைகள் பற்றிய போதிய அளவு விழிப்புணர்வு வேலையாட்களுக்கு இல்லை. சட்டங்கள் சமுதாயத்தில் பலவீனமானவர்களைப் பாதுகாப்பதாகவே இருக்க வேண்டும். ஆனால் உண்மையில் சமுதாயத்தில் உள்ள நன்கு படித்தவர்கள், வசதியுள்ளவர்கள் உயர் நிறுவனத்தில் வேலை செய்பவராக இருந்தால் அவருக்கு எல்லாம் கிடைக்கின்றன. ஆனால் சாதாரண தொழிலாளிக்கு எதுவும் கிடைப்பதில்லை. அவருக்கு அது பற்றிய விழிப்புணர்வு போதுமானதாக இல்லை என்பதே அதற்குரிய காரணமாகும்.

- **உங்களது வாசிப்பின் படி சர்வதேச தொழிலாளர் சட்டம் சூழல் சட்டங்களுடன் ஒப்பிடுகையில் அல்குர்ஆன் சொல்லும் சட்டவிதி முறைகள் எப்படியுள்ளது என நீங்கள் கருதுகிறீர்கள்?**

உண்மையில் நான் வாசித்த புத்தகத்தின் பகுதியில் குறிப்பாக சூழல் விடயங்களை பற்றி பெரிதாகப் பார்க்க முடியவில்லை. அது வேறு வேறு பக்கங்களில் உட்பொதிந்திருக்கும் என்று நினைக்கின்றேன். முக்கியமாக வேலையாட்களை பற்றி ஒரு செய்தியுள்ளது. அதாவது செல்வத்தை நல்ல வழியில் சேகரிக்க வேண்டும். அதேபோன்று அதை நல்ல வழியில் செலவு செய்ய வேண்டும். சமூகத்திற்கு பயனுள்ளவாறு செல்வம் செலவு செய்யப்பட வேண்டும்.

உண்மையில் செல்வத்தைத் தேடும் போது வேலையாட்களை சுரண்டிப் பிழிந்து, அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியதையெல்லாம் மறுத்து சேர்க்கும் செல்வம் இஸ்லாத்தின் படி பிழையான செல்வமாகவே பார்க்கக் கூடியதாக உள்ளது.

- **அல்குர்ஆனிய சிந்தனைகளை முஸ்லிம் அல்லாதவர்களுக்கு கொண்டு போய் சேர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

அல்குர்ஆனிய சிந்தனைகளை ஏனைய மக்களிடமும் கொண்டு போய் சேர்ப்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும். ஏனெனில், இன்று பொதுவாக இந்து, பௌத்த, கிறிஸ்தவ சமயங்களைப் பார்த்தால் ஒரு மதத்தை சேர்ந்தவருக்கு மற்ற இரு மதங்கள் பற்றிய விளக்கம் இருக்கும். ஆனால் இஸ்லாமியர் அல்லாதவர்களுக்கு அல்குர்ஆனிய சிந்தனைகள் பற்றிய போதிய விளக்கங்கள் இல்லை. இதன் காரணமாக இன்று பலர் வேறு வகையான தப்பான அபிப்பிராயங்களையும் கொண்டுள்ளனர்.

இதில் முக்கியமாக முஸ்லிம் மக்களுக்கு இருக்கக் கூடிய கடமை என்னவெனில், பன்மைத்துவக் கலாசாரம் கொண்ட இலங்கையில் மக்களுக்கிடையில் மத ரீதியான புரிந்துணர்வு முக்கியமானது. மத ரீதியான புரிந்துணர்வு மக்கள் மத்தியில் காணப்படாமையினாலேயே இனங்களுக்கிடையில் வீணான சந்தேகங்களும் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இன்று ஓரளவுக்கு சொல்லப் போனால் இந்து, கிறிஸ்தவ, பௌத்த சமயத்தவர்கள் மத்தியில் பொதுவான விளக்கங்கள் இருந்தாலும் இஸ்லாமியர் அல்லாவதர்களுக்கு இஸ்லாத்திலுள்ள நல்ல விடயங்களைப் பற்றி எதுவும் தெரியாமல் உள்ளது.

அல்குர்ஆனிலுள்ள சிறந்த விடயங்களைத் தொகுத்து மிகவும் இலகுவாக மற்றைய மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய விதத்தில் சிறு கைநூல்களாக ஆக்கி, அவற்றை சென்றடைய வைக்க வேண்டும். இது இஸ்லாத்தைச் சேர்ந்த படித்தவர்கள், எழுத்தாளர்கள், போதகர்களின் தலையாய கடமையாகும். அல்குர்ஆனிய சிந்தனைகள் என்னும் புத்தகத்தை நான் ஆய்வுசெய்த போது எனக்கு அந்தளவு தூரம் பெரிய அறிவு காணப்படவில்லை. புத்தகத்தை வாசித்ததன் பிறகே என் மனதில் ஒரு தூய்மை வருவதை பார்க்கக் கூடியதாக இருந்தது.

ஆரம்பத்தில் இந்தப் புத்தகத்தை கையில் எடுக்கும் போது ஒருவித அச்சத்துடனேயே எடுத்தேன். அதனை வாசித்த பிறகு அதனை ஆய்வுசெய்ய வேண்டும் என்பதற்கு அப்பால் அதிலுள்ள நல்ல விடயங்களை நான் அறிய வேண்டும் என்ற ஆர்வத்தோடு தொடர்ந்து வாசிக்கக் கூடியதாக இருந்தது.

அல்குர்ஆனிய சிந்தனைகள் என்னும் நூல் சிறந்த முறையில் எல்லா சமயத்தவர்களும் விளங்கும்படி இலகுவான மொழிநடையில் எழுதப்பட்டிருந்தது. நல்லதொரு யுக்தியை கையாண்டு அவர் (உஸ்தாத் மன்சூர்) அந்நூலை எழுதியுள்ளார். அல்குர்ஆனில் உள்ள நல்ல பல விடயங்களையெல்லாம் தொகுத்து சிறு புத்தகங்களாக மற்றைய மதத்தவர்களுக்கு விளங்கும்படி வெளியிட வேண்டும்.

எல்லா இனத்தவர்களிலும் ஒரு பொதுவான அடிப்படையைக் காணக்கூடிதாக உள்ளது. இது நாட்டிற்கு அவசியமானது. இலங்கை பன்மைத்துவ கலாசாரமுள்ள நாடு. எல்லோரும் ஒன்றாக வாழும் நாடு. எல்லோர் மத்தியிலும் புரிந்துணர்வு என்பது மிக அவசியம். அந்தவகையில் இஸ்லாமிய சகோதரர்களுக்கு ஒரு கடப்பாடு உள்ளது. அதாவது இஸ்லாத்திலுள்ள நல்ல விடயங்களை அடுத்த சமூகத்தவர்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டும்.

- **இலங்கையில் தமிழ் முஸ்லிம் உறவு குறித்து உங்களது அவதானிப்புக்களை சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

இலங்கையிலுள்ள தமிழர்களும் முஸ்லிம்களும் நீண்ட காலமாகவே மொழியால்

(பக்.14)

ஆரம்பித்ததன் நோக்கத்தை மறந்து செயற்படுகின்ற பல நிறுவனங்கள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் செயற்படுவது ஒன்றும் மறுப்பதற்கில்லை. பல நிறுவனங்களும் சமூகத்தின் விடிவுக்காகவெனத் தொடங்கப்பட்டு பின்னர் தமது நிறுவனத்தினதோ அமைப்பினதோ விடிவுக்காக உழைப்பதை கடமையாக்கிக் கொண்டிருப்பதை சமூகத்தில் பரவலாகக் காண முடிகிறது. எந்த நோக்கத்தில் தொடங்கினாலும் கடைசியில் அரபு நாடுகள் வழங்கும் இப்தார், குர்பான், கிணறு, அநாதைகள் என்று நிதி புரளக் கூடிய செயற்பாடுகளில் தம்மைச் சுருக்கிக் கொள்ளும் நிறுவனங்கள் நம்மில் அதிகம். முஸ்லிம் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமொன்று ஆண் பிள்ளைகளை கத்னா செய்யும் பணியையும் செய்து வருகின்றது என்பது நம்மில் பலரும் தாம் நிர்வகிக்கும் நிறுவனங்களின் நோக்கத்தை விட்டு விலகிச் செல்கிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு.

அல்லாஹ்வின் இல்லமாகிய பள்ளிவாசல்களை நிர்வகிப்பவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அல்லாஹ்வின் இல்லத்தை நிர்வகிக்கும் பணி என்பது எந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் பள்ளிவாசல்களை நிர்வகிப்பவர்களுக்கு எந்த அறிவும் கிடையாது போலவே தோன்றுகிறது. பள்ளிவாசல்களுடைய சமூகப் பணி பற்றிப் பேசப் போனால் அது மஸ்ஜித் - ஸுஜூத் செய்யும் இடம் அல்லது தொழும் இடம் என்று சொல்கிறார்கள். அல்லாஹ்வின் இல்லத்தைப் பொறுப்பெடுப்பவர்களைப் பார்த்து அல்லாஹ்தஆலா நீங்கள் தொழுங்கள் என்று சொல்லவில்லை. நீங்கள் தொழுகையை நிலைநிறுத்துங்கள் என்று தான் சொல்கின்றான். அப்படியானால் தமது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் தொழுகையை நிலைநாட்ட வேண்டியது பள்ளிவாசல்களின் பிரதானமான பணி. எத்தனை பள்ளிவாசல்கள் இதனைச் செய்கின்றன ?

முஸ்லிமுக்கும் காபிருக்கும் இடையில் உள்ள வித்தியாசம் தொழுகை என்றால் தங்களுடைய பள்ளிவாசலின் ஜமாஅத்தார்களில் எத்தனை பேர் தொழுகையாளிகளாக இருக்கின்றார்கள் என்ற கணக்கு விபரமாவது பள்ளிவாசல்களை நிர்வகிப்பவர்களுக்குத் தெரியுமா? தொழுகையை நிலைநாட்டுவது தான் பள்ளிவாசலுடைய பிரதான பணி என்றால் தொழுகைக்காக பள்ளிவாசல் பக்கமே வராத எத்தனை ஜமாஅத்தார்களை பள்ளிவாசல் நிர்வாகங்கள் தேடிச் சென்று தொழுகையை நிலைநாட்டி இருக்கின்றன ? நூற்றுக் கணக்கில் ஆயிரக் கணக்கில் தொழுவதற்கென்று பள்ளிவாசல்களைக் கட்டி அதில் ஒரே ஒரு ஸப்பில் மட்டும் முஅத்தினாருடன் கொஞ்சம் பேர் தொழுவதைப் பார்த்தாலாவது, தமது நிர்வாகத்தில் தொழுகை நிலைநாட்டப்பட்டிருப்பதன் நிலையை இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா ?

சமூக நிறுவனங்களுக்கு நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் போது அவர்கள் தமது கடமையை உணர்ந்தே பொறுப்புக்களை ஏற்கின்றார்கள். அவர்கள் தமது பொறுப்புக்களைச் செய்யாத போது அவர்களை அந்த இடத்திலிருந்து நீக்கி விட்டு புதியவர்கள் பொறுப்பெடுக்கிறார்கள். அரசாங்கப் பாடசாலையை எடுத்துக் கொண்டால் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தனது பணியைச் செய்யாத போது, பழைய மாணவர் சங்கம் தனது நோக்கத்திலிருந்து விலகிச் செல்லும் போது அவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்பட்டு பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. பாடசாலையின் நோக்கத்தை அடைவதில் பாடசாலை தவறுவிட்டால் பாடசாலையின் அடைவு மட்டம் அதனை எடுத்துக் காட்டுகிறது. அதன் மோசமான விளைவு சமூகத்தில் பிரதிபலிக்கிறது.

பள்ளிவாசல் நிர்வாகம் தனது நோக்கத்தை அடையா விட்டால் அது சமூகத்தில் மட்டுமல்ல மார்க்கத்தின் இருப்பையே ஆட்டம் காண வைக்கிறது. தொழுகையை நிலைநாட்டுவது என்ற பிரதான பணியைச் செய்தால் அது சமூகத்தின் ஏனைய பணிகளைச் செய்வதற்கு இலகுவாக்கிக் கொடுக்கிறது. பள்ளிவாசலுடன் மக்கள் தொடர்புபடுவார்கள். மக்களுக்கிடையிலான சந்திப்புக்கள் அதிகரிக்கும். உறவுகள் வளரும். ஒரு சமூக அசைவியக்கமே பள்ளிவாசலைச் சுற்றி மையம் கொண்டிருக்கிறது என்ற வகையில் இவற்றுக்கெல்லாம் பிரதானமாக தொழுகையை நிலைநாட்டுவது என்ற விடயத்தில் பள்ளிவாசல்கள் அக்கறை காட்டாவிட்டால் அந்த நிர்வாகத்தைத் தூக்கி எறிவதை விட்டு விட்டு, அவர்களை அல்லாஹ் மறுமையில் தூக்கி எறியும் வரை விட்டு வைப்பது சமூகத்தினதும் அசட்டையை வெளிப்படுத்துகிறது.

ஒவ்வொரு பள்ளிவாசல் நிர்வாகமும் தன்னுடைய பணியைச் சிறப்பாகச் செய்திருக்கின்றதா என்பதனை அந்தப் பள்ளிவாசலில் தொழுகைக்கு நிற்கும் ஸப்பை வைத்து அறிந்து கொள்ள முடியும். பள்ளிவாசலில் தொழுகையாளிகளின் ஸப்பின் அளவை பள்ளிவாசல் நிர்வாகத்தின் வெற்றிக்கான அளவுகோலாக எடுத்துக் கொண்டால் பள்ளிவாசல் நிர்வாகத்தின் அடைவுமட்டத்தினை இனி அனைவரும் இலகுவாக அறிந்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 லெபனானியர்கள் அமீரகத்தில் பயங்கரவாத குற்றச்சாட்டுக்கு முகம்கொடுத்துள்ளனர்

ஐக்கிய அறபு அமீரகத்தில் 8 லெபனானியர்கள் பயங்கரவாத குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளை எதிர் கொண்டுள்ளதாக அமீரக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இவர்கள் ஹிஸ்புல்லாஹ் இயக்கத்தோடு தொடர்பானவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமது தரப்பு வக்கீல்களை நிறுத்துவதற்கு இவர்கள் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது. இவர்கள் மீதான எந்தக் குற்றச்சாட்டும் இதுவரை பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை. ஆனால், பயங்கரவாதத்தோடு தொடர்பானவர்கள் என்று அரச தரப்பால் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

லெபனானிய பாராளுமன்றத்தில் 13 உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஹிஸ்புல்லாஹ், 3 அமைச்சுப் பதவிகளையும் கொண்டிருக்கின்றது. எவ்வாறாயினும், அவ்வியக்கம் ஐக்கிய அறபு அமீரகத்தின் பயங்கரவாதப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் 8 பேரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் முறையான குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் இவர்களது குடும்பத்தினர் மனித உரிமை கண்காணிப்பகத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

சட்டத்தின் ஆட்சியை மதிக்காத ஐக்கிய அறபு அமீரகம், நீதி விசாரணைகளின்றி தடுப்புக் காவலில் வைத்திருப்பது மீறல் என மனித உரிமை கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவரும் 15 ஆண்டுகளுக்கு மேலாக அமீரகத்தில் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேசப் பார்வை

இஸ்ரேல் காஸா மீது வான் தாக்குதல்

இஸ்ரேல் காஸா மீது வான் வழித் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதோடு, காஸா - இஸ்ரேல் எல்லையில் மேலதிகப் படையினரைக் குவித்துள்ளது. தலைநகர் டெல்அவிவுக்கு காஸாவிலிருந்து அனுப்பப்பட்ட ஏவுகணைகளுக்கு பலமாக பதிலளிக்கப்படும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

டெல் அவிவில் வீழ்ந்த ஏவுகணையினால் 7 இஸ்ரேலியர்கள் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல் மேற்கொண்ட பதில் தாக்குதல்களில் இரு பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளதாக காஸா சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த திங்கள் (25.03.2019) இஸ்ரேல் 10 இற்கும் மேற்பட்ட ரொக்கெட் தாக்குதலை காஸா மீது நடத்தியது. இதில் ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவரான இஸ்மாஈல் ஹனிய்யாவும் குறிவைக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், ஹனிய்யா தாக்குதலிலிருந்து தப்பியுள்ளார்.

கடந்த 4 மாதங்களில் இஸ்ரேல் மேற்கொண்ட மிகப் பெரிய தாக்குதல் இது என்று கருதப்படுகின்றது. இதேவேளை, ஐந்தாண்டுகளுக்கு முன்பாக ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களை இது ஒத்திருக்கின்றது எனவும் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஐந்தாண்டு கால இடைவெளியில் மிக நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணையை ஹமாஸ் இம்முறை பயன்படுத்தியுள்ளது. எதிர்வரும் சில நாட்களில் இஸ்ரேல் பொதுத் தேர்தலுக்குச் செல்லவுள்ள நிலையிலேயே காஸா மீது இஸ்ரேல் தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

பத்தாண்டுகள் பிரதமர் பதவியிலிருந்த நெடன்யாஹு தாக்குதலை ஆரம்பித்துள்ள நிலையில் அமெரிக்காவுக்கான தனது விஜயத்தையும் ரத்துச் செய்துள்ளார். ஏற்கனவே அவர் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ள நிலையில், காஸா மீதான அவரது யுத்தம் தேர்தல் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்தப்படக் கூடும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இம்முறை ஹமாஸ் 120 கி.மீ. தூரம் சென்று தாக்கக் கூடிய ஏவுகணையைப் பயன்படுத்தியுள்ளமை இஸ்ரேலின் போருக்கான நியாயமாக முன்வைக்கப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு காஸாவை முழுமையாக ஹமாஸ் கட்டுப்படுத்திய பின்னர், இஸ்ரேல் காஸா மீது தாக்குதல்களை ஆரம்பித்தது. கடந்த நவம்பரில் எகிப்தின் மத்தியஸ்தத்தோடு இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியமை குறிப்பிடத்தக்கது.

எகிப்தில் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை நாம் கடைப்பிடிப்போம்

ஹமாஸ் அறிவிப்பு

ஏற்கனவே எகிப்தின் மத்தியஸ்தத்தோடு கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்தும் நாம் கடைப்பிடிபோம் என ஹமாஸ் அறிவித்துள்ளது. காஸா மீது இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல்களை ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஹமாஸ் இவ்வறிவித்தலை விடுத்துள்ளது. பரபஸ்பரம் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுக்குப் பின்னர் நாம் போர் நிறுத்தத்தையே கடைபிடிப்பிக்கின்றோம் என ஹமாஸ் தெரிவித்த பின்னரும் காஸா பள்ளத்தாக்கில் குண்டு வெடிப்புச் சத்தங்கள் தொடர்ந்தும் கேட்டவண்ணமுள்ளன.

இஸ்ரேல் இது குறித்து எவ்விதக் கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை. கடந்த திங்கள் (25.03.19) இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவை நோக்கி காஸாவிலிருந்து அனுப்பப்பட்ட ஏவுகணைகள் வெடித்துச் சிதறியதில் 7 இஸ்ரேலியர்கள் காயமடைந்துள்ளனர்.

இதற்குப் பதிலளிக்கும் முறையில் இஸ்ரேல் கடும் வான்தாக்குகளைத் ஆரம்பித்துள்ளது. தற்போது ஹமாஸ் போர் நிறுத்தத்தைக் கடைப்பிப்பதாகவும் இஸ்ரேலிய தாக்குதல் தொடர்ந்தால் தாம் போர் நிறுவத்தத்தைக் கைவிட வேண்டி வரும் எனவும் ஹமாஸ் எச்சரித்துள்ளது.

கோலான் குன்றுகள் இஸ்ரேலுக்குரியவை

- ட்ரம்ப் அதிரடியாக அறிவிப்பு

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட சிரியாவுக்குச் சொந்தமான கோலான் குன்றுகள் இஸ்ரேலின் இறைமைக்கு உட்பட்ட பிராந்தியம் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இது அமெரிக்காவின் கொள்கையில் ஏற்பட்டுள்ள தலைகீழ் மாற்றம் எனக் கருதப்படுகின்றது.

இஸ்ரேலிய பிரதமர் நெடன் யாஹு வெள்ளை மாளிகைக்கு மேற்கொண்ட விஜயத்தினை அடுத்து டொனால்ட் ட்ரம்ப் கோலான் குன்றுப் பிராந்தியம் தொடர்பான ஆவணத்தில் ஒப்பமிட்டுள்ளார். 1967 இல் நடந்த 6 நாள் யுத்தத்தின்போதே இஸ்ரேல் சிரியாவுக்குச் சொந்தமான கோலான் குன்றுகளை ஆக்கிரமித்தது. எகிப்துக்குச் சொந்தமான சினாய், லெபனானுக்குச் சொந்தமான ஷிபா பண்ணை என்பவற்றோடு சிரியாவுக்குச் சொந்தமான கோலான் குன்றுப் பிரதேசத்தையும் இஸ்ரேல் கைப்பற்றியது. அதன் பின்னர் கோலான் குன்றுகளின் பெரும்பாலான பகுதியில் யூதர்கள் குடியேற்றப்பட்டனர். மிகக் குறைந்த நிலப்பரப்பில் சிரிய அறபிகளும் வாழ்கின்றனர்.

சர்ச்சைக்குரிய இப்பிராந்தியம் சர்வதேச கண்காணிப்பின் கீழ் இருந்து வந்தது. தற்போது ட்ரம்ப் அதனை இஸ்ரேலிய பிராந்தியம் என அறிவித்துள்ளமை பிராந்தியத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நியூசிலாந்தின் இயந்திரத் துப்பாக்கிகளுக்குத் தடை

கிறிஸ் சேர்ச் பள்ளிவாயல்களில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 50 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதை அடுத்து அந்நாட்டின் பிரதமர் ஜெசிந்தா ஆயுத விற்பனை தொடர்பான சட்டத் திருத்தங்களை அறிமுகப்படுத்தவுள்ளார். தாக்குதலுக்குப் பயன்படுத்தும் குழல் துப்பாக்கிகள், தன்னியக்க ஆயுதங்கள் என்பவற்றைத் தடைசெய்யும் சட்டம் அமுலுக்கு வரவுள்ளதாக நியூசிலாந்தின் பிரதமர் ஜெசிந்தா ஏடன் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அங்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது, ''நாம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப் போகின்ற செயற்பாடுகளின் ஆரம்பமே இதுவாகும் என உறுதியாக நம்புங்கள். இது நாட்டின் நலன்களையும் பாதுகாப்பையும் கருத்திற் கொண்ட நடவடிக்கையாகும். மீண்டும் ஒருபோதும் எமது நாட்டில் பயங்கரவாதத் தாக்குதல் ஒன்று நடைபெறாமல் தடுப்பதற்கு இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம். ஏப்ரலில் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதோடு, நாட்டில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களுக்கான தெளிவான பட்டியலொன்றும் வெளியிடப்படும். தாக்குதல் நடந்து ஆறு நாட்களில் இச்சட்டத்தை நாம் அறிமுகப்படுத்துகின்றோம் என நியூசிலாந்து பிரமதமர் தெரிவித்தார்.

வெனிசுவேலா பாரிய அரசியல் நெருக்கடியை எதிர்கொள்கிறது

வெனிசுவேலாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளின் நேரடியான விளைவுகளை மில்லியன் கணக்கான மக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று கவலை வெளியிடப்படுகின்றது. பிரதான விமான நிலையம் கிட்டிய எதிர்காலத்தில் மூடப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, வியாபார நிலையங்கள் பெருமளவு மூடப்பட்டுள்ளது. மக்கள் நடைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

வெனிசுவேலாவின் வரலாற்றில் மிக நெருக்கடியான தருணம் பிறந்துள்ளது எனவும் இந்நிலை நீடித்தால் நாட்டில் பாரிய மனிதாமான நெருக்கடிகள் தலைதூக்கும் எனவும் எச்சரிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கிற்கும் இஸ்லாத்திற்கும் இடையிலான மோதல்

• கலாநிதி றவூப் ஸெய்ன் (Ph.D)

நியூசிலாந்தின் பள்ளிவாசல் படுகொலை உலகக் கவனத்தை ஈர்த்துள்ள போதும், எல்லா மதங்களிலும் அடிப்படைவாதமும் தீவிரவாதமும் இயங்குகின்றது என்பதை அது எடுத்துக் காட்டியுள்ளது. மேலை நாடுகளில் முஸ்லிம்கள் மற்றும் இஸ்லாத்திற்கெதிரான இனவாதப் பாசிஸம் கடந்த சில ஆண்டுகளாக திட்டமிட்டு வளர்க்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் முஸ்லிம் விரோதப் பிரச்சாரத்தின் நேரடி விளைவே இந்தத் தாக்குதல் என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

மேலை நாடுகளில் இஸ்லாம் குறித்தும் முஸ்லிம்கள் குறித்தும் அறிவுபூர்வமற்ற ஒரு பீதி உருவாக்கப்பட்டுள்ளது. 2001 செப்டம்பர் 11 தாக்குதலை அடுத்து இந்தப் பயம் மேற்கத்தேய ஊடகங்களால் கவனமாகப் பரப்பப்பட்டது. வரலாற்று ரீதியில் இஸ்லாத்துடன் காழ்ப்புணர்வு கொண்ட கிறிஸ்தவ அடிப்படைவாத சக்திகளுக்கு தீவிர வலது சாரி இயக்கங்களால் முன்னெடுக்கப்படும் இஸ்லாம் விரோதப் பிரச்சாரம் சாதகமாக அமைந்து விட்டது.

இன்று பெரும்பான்மையான மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அதிகாரத்தைக் கையேற்று வரும் தீவிர வலதுசாரிக் கட்சிகளும் அதிகாரத்தைக் கையேற்கும் நோக்கில் புதிது புதிதாகக் களத்திற்கு வரும் கட்சிகளும் மதவாதத்தையும் மேலைய இனவாதத்தையும் தமது அரசியல் இருப்புக்கான முதலீடாகக் கருதுகின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் 52 வீதமானவை தீவிர வலது சாரிக் கட்சிகள் அதிகாரத்திலுள்ள நாடுகளாகும். 48 வீதமான நாடுகளிலேயே ஜனநாயக போக்கினைக் கொண்ட கட்சிகள் அதி காரத்திலுள்ளன. எடுத்துக் காட்டாக நெதர்லாந்தின் சுதந்திரக் கட்சி. ஒரு தீவிர வலதுசாரிக் கட்சியாகும். கிறிஸ்தவ அடிப்படை வாதத்தைப் பின்னணியாகக் கொண்ட இக்கட்சியே தற்போது அதிகாரத்திலுள்ளது.

இஸ்லாம் விரோத கேலிச் சித்திரங்களுக்குப் பெயர்போன டென்மார்க்கின் ஆளும் கட்சியாக உள்ள டென்மார்க் மக்கள் கட்சி கிறிஸ்தவ அடிப்படை வாதக் கட்சி என்று பெயர் பெற்றது. பின்லாந்தின் பின்லேன்ட் கட்சி, பிரான்சில் தலையெடுத்துள்ள தேசியக் கட்சி, ஐக்கிய இராச்சியத்தின் தேசியக் கட்சி என்பனவும் தீவிர வலதுசாரிக் கொள்கைகளையும் மத அடிப்படை வாதத்தையும் பின்னணியாகக் கொண்டவை.

ஜேர்மனியில் சான்சலராக இருக்கும் அன்ஜலா மார்கலின் கிறிஸ்தவக் கட்சி இத்தகைய பின்புலத்தைக் கொண்டது. ஒஸ்ரியாவின் பிரதமர் சமீபத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கை மேலைய நாடுகளில் இஸ்லாம் நடத்தப்படும் விதத்தைத் தெளிவாக்குகின்றது. ''எந்த வகை இஸ்லாம் ஒஸ்ரியாவில் பின்பற்றப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்கின்ற முழு அதிகாரமும் ஒஸ்ரிய அரசாங்கத்திற்கு உரியது'' என நீள்கிறது அந்த அறிக்கை.

இத்தகைய கட்சிகள் Islamophobia வை அரசியல் மூலதனமாகக் கொண்டுள்ளன. ஒரு காலத்தில் ஜனநாயகத்தின் முக்கிய பண்பாகக் கருதப்படும் கலாச்சாரப் பன்மைத்துவத்தை (Cultural Pluralism) இத்தகைய மேலைநாட்டு அரசாங்கங்களும் தீவிர வலது சாரிக் கட்சிகளும் இன்று வெளிப்படையாகவே மறுத்து வருகின்றன. ஐரோப்பாவில் ஐரோப்பிய கலாசாரம் மட்டுமே நீடிக்க முடியும். பிற கலாசாரங்களுக்கு இங்கே இடமில்லை என்பது போலவே அவை இஸ்லாமிய கலாசாரத்தை எதிர்க்கின்றன.

தேர்தல் பிரச்சார மேடைகளில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இஸ்லாமிய பயங்கரவாதம் குறித்து பேசியது போன்று ஐரோப்பாவிலும் வலதுசாரிக் கட்சிகள் வர்ணிக்கும் இஸ்லாமோ போபியா அரசியல் உள்நோக்கம் கொண்டது.

இக்கட்சிகள் உலகளாவிய இஸ்லாம் விரோத வலைப்பின்னலின் உள்ளூர் முகவர்களாகவே செயல்படுகின்றன. தேர்தல்களின்போது லண்டனிஸ்தான் என்ற சொல்லை பிரிட்டனின் வலது சாரிக் கட்சிகள் பயன்படுத்துகின்றன. லண்டனை பாகிஸ்தானியர்கள் ஆக்கிரமித்து விட்டார்கள் என்பதுதான் அதன் அர்த்தம். Eurobia (Euro + Arabia) என்பதும் பிரச்சார மேடையில் கையாளப்படும் இன்னொரு சொல்லாகும். ஐரோப்பா இன்று அறேபியர் வசமாகி விட்டது என்பதைக் குறிப்புணர்த்தும் ஒரு உத்தியே இது.

நேத்தான் லீன் என்பவர் எழுதிய Islamophobia Industry எனும் நூலுக்கு கருத்துரை எழுதிய ஒரு பிரிட்டிஷ் பேராசிரியர் ''இஸ்லாமியப் பீதி என்பது அறியாமையினாலும் அச்சத்தினாலும் இயல்பாக வளர்ந்த ஒன்றல்ல. மேற்கில் சிலர் இதனை திட்டமிட்டு வளர்க்கின்றனர். அதனை ஓர் அரசியல் தந்திரோபாயமாகக் கருதுகின்றனர்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று மேற்கத்தேய நாடொன்றில் இஸ்லாம் குறித்தும் முஸ்லிம்கள் குறித்தும் ஓர் அனாவசியமான பயம் சிவில் சமூகத்தின் மத்தியில் உருவாக்கப்படுகின்றது. அரசியல் கட்சிகள் அதனுடன் இனவாதத்தை இணைத்து மத தீவிர வாதத்தின் பின்னணியில் செயல்படத் தலைப்படுகின்றன. தமது பிரச்சார இயந்திரத்தை முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்புவதன் மூலம் வாக்கு வங்கிகள் இலக்கு வைக்கப்படுகின்றன என குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

சோவியத் யூனியனின் உடைவுக்குப் பின்னர் மேலைய நாடுகளுக்கு -குறிப்பாக அமெரிக்காவுக்குத் தேவையான ஓர் எதிரி கட்டமைக்கப்பட்டது. அது வளர்ந்து வரும் அரசியல் இஸ்லாம் என்று அடையாளப்படுத்தப்பட்டது. 1950 முதல் 1990 வரையான காலப்பகுதியில் அரசியல் இஸ்லாம் குறித்து 50,000 நூல்கள் வெளிவந்துள்ளன. அவை அனைத்தும் முஸ்லிம் அல்லாதவர்களால் எழுதப்பட்டவை.

1990 களில் அறிமுகமான புதிய உலக ஒழுங்கு இஸ்லாமிய எழுச்சியை எதிர்கொள்வதற்கான அமெரிக்க மூலோபாயமாகும். அதேபோன்று ரொனால்ட் ரேகனின் கடைசிக் காலத்தில் அறிமுகமாகி, வளைகுடா யுத்தத்தின் போது அமுலுக்கு வந்த புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம் (Project for New American Century) இஸ்லாம் மற்றும் முஸ்லிம் விரோத பெரும் பொருளாதாரப் படையெடுப்புக்களில் ஒன்றாகும்.

எண்ணெய் வளம் மிகுந்த அறபு இஸ்லாமிய நாடுகளை படைப்பலம் கொண்டு ஆக்கிரமிக்கின்ற திட்டமே புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டமாகும். இதற்கென அமெரிக்காவின் பாதீட்டில் 40 வீதமான செலவீனம் ஒதுக்கப்பட்டது. ஈராக், ஆப்கானிஸ்தான், இத்திட்டத்தின் கீழ் ஆக்கிரமிக்கப்பட்டன. குவைத், கட்டார், சவூதி அறேபியா, பஹ்ரைன், ஐக்கிய அறபு அமீரகம் போன்றவற்றில் அந்தந்த அரசுகளின் ஒப்புதலோடு அமெரிக்கப் படை நிறுத்தப்பட்டது.

இராணுவ ஆக்கிரமிப்புத் திட்டங்களை கருத்தியல் ரீதியாக நியாயப்படுத்துவதற்கு நாகரிகங்களின் மோதல் (Clash of Civilization) எனும் ஒரு செயற்கைக் கோட்பாட்டை ஹன்டிங்டன் கண்டு பிடித்தார். மேலைய நாகரிகங்களுக்கும் இஸ்லாத்திற்கும் இடையில் மோதல்கள் உருவாகப் போகின்றன என்று ஹன்டிங்டனின் தீர்க்க தரிசனம் வெளிப்படுத்தியது. இடம்பெறப் போகும் அமெரிக்காவின் படை நிறுத்தல் செயற்பாடுகளுக்கு பக்க பலமாக ஹன்டிங்டனின் கோட்பாடு முன்னிறுத்தப்பட்டது.

ஈராக் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் எண்ணெய் வளம் ஹெலிபேர்டன் எனப்படும் பிரமாண்டமான அமெரிக்கக் கம்பனியின் கீழ் வந்தது. இவ்வாறு படைப் பலத்தை நிலைநிறுத்தி பொருளாதார வளங்களைச் சூறையாடுவதில் தனக்குள்ள சிரமங்களை உணர்ந்த மேலை நாடுகள் காலப் போக்கில் புதியதொரு மூலோபாயத்தைக் கண்டுபிடித்தனர், அது நாகரிகத்திற்குள்ளேயான மோதல் (Clash within a Civilization) எனப்படுகின்றது.

இதன் மூலம் மூன்று முக்கிய மூலோபாய இலக்குகளை எட்டிவிடலாம் என்று மேற்கத்தேய நாடுகள் கருதுகின்றன. முதலாவது, நேரடியான படைப் பலத்தை நிறுத்தி வைப்பதன் மூலம் ஏற்படும் செலவீனங்களையும் இராணுவ இழப்பையும் குறைத்தல். இரண்டாவது, முஸ்லிம் உலகில் உள்ளார்ந்த ஆயுத மோதல்களை ஊக்குவித்தல்.

மூன்றாவது, இம்மோதல்களின் விளைவாக இஸ்லாம் குறித்த ஓர் உலகளாவிய பீதியை (Phobia) உருவாக்குதல்.

இம்மூன்றிலும் முதல் இரண்டு இலக்குகளையும் மேற்கத்தேய நாடுகள் எந்தளவு எட்டின என்பது ஆய்வுக்குரியது. ஆனால், இறுதி இலக்கை முழுமையாக அடைந்து கொள்வது அவற்றுக்குச் சாத்தியமானது. இந்தோனேசியா முதல் மோரோக்கோ வரை பல்வேறு பெயர்களில் அறபு, இஸ்லாமிய சிவில் சமூகங்களுக்கு மத்தியில் ஆயுதம் தரித்துப் போராடும் பயங்கரவாதங் இயக்கங்களும் வன்முறைக் கும்பல்களும் மேற்கத்திய நாடுகளின் தயாரிப்பே. அவை இஸ்லாமிய முலாமை வெளிப்படையாகப் பூசிக் கொண்டிருக்கின்ற போதும் Islamophobia ஐ உருவாக்குவதற்கென்றே களமிறக்கப்பட்டன.

மாலியின் அன்ஸாருத்தீன், சோமாலியாவின் அஷ்ஷபாப், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் தாலிபான், அறபு நாடுகளில் அல் காயிதா மற்றும் ஐசிஸ் போன்ற பயங்கரவாதக் குழுக்கள் Islamophobia ஐ பரப்பும் நோக்கில் மேலைய நாடுகளால் உருவாக்கப்பட்டவை.

Islamophobia எனப்படும் வெறுப்புக் கைத்தொழிலுக்குப் பின்னால் மேலைய அரசுகளுக்கு சில முக்கிய நோக்கங்கள் இருக்கின்றன. இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பயங்கரவாதத்துடன் இணைப்பது அதன் முதல் நோக்கமாகும். அதேவேளை, மேலைய நாடுகளின் அறபு இஸ்லாமிய உலகின் மீதான இராணுவப் பிரசன்னத்தை நியாயப் படுத்துவது அதன் அடுத்த நோக்கமாகும்.

ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கக் கண்டத்திலும் உலகின் பிற பகுதிகளிலும் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களை அந்நாடுகளின் அரசாங்கங்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வைப்பது, பாதுகாப்புக் கெடுபிடிகளை அவர்கள் மீது கட்டவிழ்க்க வைப்பது மூன்றாவது பிரதான நோக்கமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தாங்களே உருவாக்கி வைத்துள்ள இப்பயங்கரவாதக் குழுக்களை ஒரு பூச்சாண்டியாகக் காட்டி அறபு நாடுகளுக்கு பெருந்தொகை ஆயுதங்களை விற்பனை செய்வது அடுத்த இலக்காகும். இந்த Islamophobia அரசியலையே இன்று மேலைய நாடுகள் கையாண்டு வருகின்றன.

வரலாற்று ரீதியில் இஸ்லாம் கிறிஸ்தவத்தின் எதிரியாகவும் முஸ்லிம்கள் கிறிஸ்தவ உலகின் ஆக்கிரமிப்பாளர்களாகவுமே இருந்துள்ளனர் எனும் விம்பத்தை மேலைய கிறிஸ்தவ இளைஞர்களுக்கு ஊட்டுவதில் ஏற்கனவே நாம் குறிப்பிட்ட தீவிர வலதுசாரிக் கட்சிகள் (Ex-right) களமிறங்கியுள்ளன.

2004 இல் அமெரிக்காவின் Rand cooperation நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை நமது கவனத்திற்குரியது. அவ்வறிக்கை, முஸ்லிம்களை தீவிரவாத முஸ்லிம்கள், மிதவாத முஸ்லிம்கள் என்று வகைப்படுத்துகின்றது. மிதவாத முஸ்லிம்களுக்கு அமெரிக்க அரசாங்கம் ஆதரவளிக்கும் எனவும் தீவிர வாத முஸ்லிம்களை அடக்குவதற்கு வொஷிங்டன் நிதியாதரவளிக்கும் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மிதவாத இஸ்லாம் தீவிரவாத இஸ்லாம் என்ற வகைப்பாட்டிலிருந்தே இவ்விரு வகை முஸ்லிம்களும் தோன்றுவதாக அந்த அறிக்கை கூறுகின்றது. ரேன்ட் ரிபோர்ட் உலகப் பார்வைக்குக் கொண்டு வரும் செய்தி மிகவும் ஆபத்தானது.

கிறிஸ்தவ உலகில் ரோமன் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து உள்ளிட்டு பல்வேறு மதப் பிரிவுகள் இருப்பது போன்று இஸ்லாத்திலும் பல்வேறு மதப் பிரிவுகள் உள்ளதாக ஒரு கருத்தை இந்த அறிக்கை கட்டமைக்கின்றது.

அமெரிக்க அரசாங்கம் இவ்வறிக்கையின் பின்னணியில் சில மூலோபாயங்களையும் கையாண்டது. 2006 இல் வேஜினியா மாநிலத்தில் செனட் சபை தேர்தலுக்காக குடியரசுக் கட்சி சார்பில் கமால் நவாஸ் களமிறக்கப்பட்டார். அவர் பயங்கரவாதத்திற்கு எதிரான சுதந்திர முஸ்லிம்கள் எனும் ஓர் அமைப்பின் தலைவர் ஆவார். இவ்வமைப்பை நிறுவுவதற்கு நிதியாதரவளித்த அமெரிக்க அரசாங்கம் கமால் நவாஸ் போன்றவர்களை வைத்து ஒரு மக்கள் அபிப்பிரா யத்தை கட்டி வளர்க்க முயன்றது.

இஸ்லாத்தில் பயங்கர வாதம் உள்ளது. ஆனால், அதற்கு எதிரான முஸ்லிம்களும் இருக்கின்றனர் என்பதுதான் வொஷிங்டன் உருவாக்க நினைத்த அபிப்பிராயம். இதேபோன்று Centre for Islamic Pularalism, Prograsive Muslim Union of North America போன்றனவும் மேலைய அரசாங்கங்களின் உருவாக்கங்களாகும். இவற்றின் மூலம் இஸ்லாத்தை மாத்திரம் மத அடிப்படை வாதம் மற்றும் பயங்கரவாதத்துடன் தொடர்புறுத்தி ஓர் உலகளாவிய பயத்தை உருவாக்குவதற்கு வலது சாரி அரசியல் கட்சிகள் முயற்சிக்கின்றன.

ஜோர்ஜ் புஷ் தொடங்கிய பயங்கர வாதத்திற்கு எதிரான பூகோளப் போர் இவ்வகைப்பட்டது. இன்னொரு புறம் அரசியல் இயக்கங்கள் மேலைத்தேய கிறிஸ்தவ இளைஞர்கள் மத்தியில் மீளவும் இஸ்லாம் குறித்த வரலாற்றுக் காழ்ப்புணர்வை கிளறி விடுகின்றன.

இந்தியத் துணைக்கண்டம் மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் போல்கன் பிராந்தியம் என்பவற்றில் பிற சமூகங்களை இஸ்லாம் எவ்வாறு தன்மயமாக்கிக் கொண்டது என்பது குறித்த பக்கச் சார்பான ஒரு வாதம் வரலாற்றாசிரியர்கள் மத்தியில் நிலவுகின்றது. வற்புறுத்தலின் மூலமே கிழக்கு ஐரோப்பிய நாடுகளான சேர்பியா, மொன்டநீக்ரோ, ஸ்லோவேனியா, அல்பேனியா, ஜியோஜியா, உக்ரைன், ஆர்மேனியா போன்ற நாடுகளில் இஸ்லாம் தன்னை தகவமைத்துக் கொண்டது. விளைவாக, பல்லாயிரக் கணக்கான கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களால் கொலையுண்டனர் என வரலாற்றைப் பிழையாகக் கற்பிதம் செய்து வைத்துள்ளனர்.

இந்த முஸ்லிம் விரோத மனப்பாங்கு இன்றைய கிறிஸ்தவ இளைஞர்கள் மத்தியில் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றது. நியூசிலாந்நதின் பள்ளிவாயலுக்குள் ஊடுருவி 50 முஸ்லிம்களைச் சுட்டுத் தள்ளிய அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கிறிஸ்தவ இளைஞனின் துப்பாக்கியில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் இதனையே உணர்த்துகின்றன.

இஸ்லாம் குறித்தும் முஸ்லிம்கள் குறித்தும் கடந்த இரு தசாப்தங்களாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் இஸ்லாமிய தீவிரதவாதமும் ஒன்றாகும். இஸ்லாம் வன்முறை மூலமும் வாள்களின் மூலமும் பரவியது என்பதும் இஸ்லாம் ஆட்கொண்ட புதிய பிராந்தியங்களில் வாழ்ந்த சமூகங்களை அது பலவந்தமாக மதம் மாற்றியது என்றும் முஸ்லிம் விரோத வரலாற்று ஆசிரியர்கள் எழுதி வைத்துள்ளனர்.

இஸ்லாத்திற்கும் மேலைய உலகத்திற்கும் இடையிலான மோதலுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. அது சகிப்பிற்கும் சகிப்பின்மைக்கும் இடையிலான மோதலாகும். அந்த மோதலின் வரலாறு மீளவும் திரும்பியுள்ளது. அது நீடிக்காமல் பார்த்துக் கொள்வதே இன்றைய உலக சிவில் சமூகத்தின் பொறுப்பாகும். இதுவே நியூசிலாந்து சம்பவத்தின் மூலம் நாம் எல்லோரும் படிக்க வேண்டிய முதலாவது பாடமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அர்ஷாட் அலி
(Bsc + post graduate in environmental science)

1996 ஆம் ஆண்டு உலக வங்கியினால் வெளியிடப்பட்டு பின் மீண்டும் 2004 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட Criteria வில் எந்த இடத்தில் குப்பைகள் கொட்டப்பட வேண்டும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக வங்கி குறிப்பிட்டுள்ள 24 கட்டளை விதிகளில் 16 ஐ சம்பிக்க ரணவனக்கவின் அமைச்சு மீறியுள்ளது. சுண்ணாம்புக் கற்பாறை, நிலக்கீழ் நீர், வளி அதிகம் வீசும் இடங்களில் குப்பை போடக்கூடாது என்கின்ற விடயம் மேற்படி உலக வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை முற்றாக மீறும் வகையில் அவ்வமைச்சு தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

களுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள குப்பைகளைக் காண்பித்து இவற்றையும் நாங்கள் எடுக்கின்றோம் என்பதாக பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இந்நடவடிக்கை கடந்த மார்ச் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டாலும் இதுவரை புத்தளம் பகுதி குப்பைகள் அங்கு கொண்டு செல்லப்படவில்லை.

இது தவிர இந்தத் திட்டம் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினால் உலக வங்கியால் கருப்புப் பட்டியல் இடப்பட்டுள்ள சீன ஹாபர் நிறுவனத்திடமே கையளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் எல்லா திட்டங்களும் தோல்வியில் முடிவடைகிறது என்ற காரணத்தால் உலக வங்கி இந்நிறுவனத்திற்கு எவ்விதத் திட்டங்களையும் செய்வதற்கு நிதி வழங்குவதில்லை. இப்படிப்பட்ட நிறுவனத்தை இலங்கைக்கு கொண்டு வந்து அமைச்சர் எதனைச் சாதிக்கப் போகின்றார். உலக வங்கி தனது 115 மில்லியன் டொலர்களையும் இத்திட்டத்திலிருந்து வாபஸ் பெற்றிருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியின் நிதியைப் பெறுவதாயின் அதற்கு அதிக காலம் செல்லும். எம்மால் அவ்வளவு காலம் காத்துக்கொண்டிருக்க முடியாது. அதனால் சீன நிறுவனங்களுக்கு இந்தத் திட்டத்தை ஒப்படைப்பதாக மெகா பொலிஸ் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்தத் திட்டத்தில் உள்ள உப ஒப்பந்த நடவடிக்கைகள் மற்றும் இதர வழிமுறைகளால் அரசியல்வாதிகளுக்கு கமிஷன்கள் கிடைக்கும். இப்படியான நோக்கங்களுக்காகவே இந்தத் திட்டம் அவசர அவசரமாக அரங்கேற்றப்படுகின்றது.

குப்பைக் கூலங்களை முறையாக நிரப்பு வதற்கான உலக வங்கியின் வழிகாட்டல்கள் 1996 (2004 இல் மேம்படுத்தப்பட்டது)

முறையான நிரப்புதல்களுக்கு (Sanitary Landfill) உள்ளாகும் திண்மக் கழிவுகள் சூழலின் முன்னுரிமை அடிப்படையில் A தரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்தத் தரத்தின் அடிப்படையில் திட்டத்தை ஆரம்பிப்பதற்குப் பின்வரும் செயற்பாடுகள் அவசியமாகின்றன.

1.பின்வரும் விடயங்களில் திருப்தி காணக் கூடிய வகையில் அறிக்கை பெறப்பட்டிருத்தல்.

அ) போக்குவரத்துஇ சிக்கனம், முதலீடுகளைக் கருத்தில் கொண்டு 30 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும்

நியப்பட்ட, அருகி வரும் இனங்களின் பெருக்கத்துக்கான இடங்கள் எதுவும் அருகில் இருக்கக் கூடாது.

எ) காற்று வேகமாகப் பரவக் கூடிய வெட்ட வெளிகள் அதிகமாக உள்ள பகுதியாக இருக்கக் கூடாது.

ஏ) சுண்ணாம்புக் கற்களோ, காபனைட்டுகளோ அவை கழிவு நீரைத் தடை செய்து காற்று வெளியேற்றத்தையும் தடுப்பதாய் இருக்கக் கூடாது.

ஐ) 250 மீட்டர் சுற்று வட்டாரத்தில் எந்தக் குடியிருப்பு வளர்ச்சிகளும் மேற்கொள்ளப்படக் கூடாது.

ஒ) குப்பை நிரப்பும் இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் எந்தக் குடியிருப்புக்களும் தெரியக் கூடாது

ஓ) பொதுமக்களின் அங்கீகாரம் பெற்ற

மக்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்காமல் இருப்பது ஏன்?

இதுதவிர இத்திட்டத்தினால் ஏராளமான பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. அருவக்காடுவை அண்மித்த வகையில் உள்ள வில்பத்து வனாந்திரத்திற்கு குப்பையின் துர்நாற்றம் வீசுகின்ற போது அங்குள்ள யானைகள் மோப்பம் பிடித்து, மக்கள் குடியிருப்புக்களையும் நாசப்படுத்திக் கொண்டு குப்பை மேடுகளை கிளற வரும். அண்மையில் பொலன்னறுவை மற்றும் கல்முனை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் காட்டு யானைகள் குப்பை மேடுகளில் சஞ்சரித்து அவற்றை கிளறிக் கொண்டிருக்கும் காட்சிகளை ஊடகங்கள் வாயிலாகப் பார்க்க முடிந்தது. யானை மனிதப் பேராட்டத்திற்கு அப்பால் இதுவும் மிகப்பெரும் தலையிடியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

புத்தளம் பிரதேசம் உலர் வலயமாக காணப்படுகிறது. தற்போது 32 - 35 பாகை செல்சியஸ் அளவில் வெப்பநிலை காணப்படுகின்றது. குப்பை மேடுகளில் மீதேன் வாயு உருவாக்கத்தால் வெடிப்பு ஏற்படுவதை நாம் அறிவோம். அண்மையில் மீதொட்டமுள்ளையில் இந்நிகழ்வு அரங்கேறி 45 உயிர்களை காவுகொண்டது. அதனைத் தொடர்ந்து கண்டி குகாகொட என்னுமிடத்திலும் இவ்வெடிப்பு ஏற்பட்டது. ஓரிரு தினங்களுக்கு முன்பும் யன்தம்பலாவ என்ற இடத்தில் இவ்வெடிப்பு ஏற்பட்டிருக்கிறது. அருவக்காட்டிவில் குப்பை மேட்டை உருவாக்கும் பட்சத்தில் அங்கு மீதேன் வாயுவின் உருவாக்கமும் அதிகமாக இருப்பதோடு, வெடிப்பும் பலமாக இருக்கும். இப்பகுதியில் காற்றும் அதிகமாக வீசுவதால் மிகப் பாரிய காட்டுத் தீ பரவலுக்கு அடிப்படையாக அமைந்து விடும்.

மேலும் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் இதர பகுதிகளில் குவியும் குப்பைகளை கொண்டு வந்து இன்னுமொரு குடியிருப்புப் பகுதியில் போடுவதால் அது எல்லாவற்றுக்கும் தீர்வாக அமைந்துவிடாது. குப்பைகளை பிரித்தெடுத்து மீள்சுழற்சி செய்யும் பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன. அதற்கான கிரயமும் குறைவு. உலகில் இதற்கு உயர்வான இயந்திர உபகரணங்களும் காணப்படுகின்றன. இப்படி மீள்சுழற்சி செய்யும் போது அதனை வருமான வழிமுறையாகவும் பயன்படுத்த முடியும். நாடும் முன்னேற்றமடையும். ஆனால் தற்போதைய குப்பை கொட்டும் திட்டதில் எவ்வித வருமானமும் இல்லை. இதற்கு இன்னும் எமது நிதிகளை செலவு செய்துகொண்டிருக்க வேண்டியேற்படும். எவ்வித வருமான வழிகளும் இல்லாமல் சுமார் 10 வருட காலங்களுக்கு இந்தத் திட்டம் வரையப்பட்டிருக்கிறது. குப்பைகளை எரித்தாலும் கூட அதன் மூலம் சிறு அளவு மின்சாரத்தையேனும் பெற முடியும். ஆனால் முழுக்க முழுக்க பாதிப்புக்களை அதிகம் சுமந்த இந்தத் திட்டம் நாட்டை இன்னும் பின்னடைவுக்கு இட்டுச் செல்லும் எண்பது திண்ணம்.

புத்தளம் மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் குப்பைகளை கொண்டு போய் அருவக்காட்டில் கொட்டுமாறு நகர அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டிருந்தது. மூன்று மாத காலங்களுக்கு இந்தச் செயற்பாடு அவதானிக்கப்பட்டு பின்னர் 2020 இல் கொழும்பு குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டுவதாக தற்போது தெரிவித்து வருகின்றனர்.

தற்போது புத்தளம் உள்ளூராட்சி சபை

"உலக வங்கியால் நிராகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் சம்பிக்கவினால் இத்திட்டம் கையளிக்கப்பட்டிருக்கிறது"

ஆ) நிலக்கீழ் நீரைப் பாதுகாக்கும் வகையில் கூலம் நிரப்பும் குழியிலிருந்து நிலக்கீழ் நீர் மட்டம் குறைந்த பட்சம் 1.5 மீற்றராவது இருக்க வேண்டும்.

இ) தற்போது இருக்கின்ற நிலக்கீழ் நீர் பெறும் இடத்தின் எந்த எல்லையிலும் குப்பை நிரப்பும் பகுதி இருக்கக் கூடாது.

ஈ) எந்த பொதுக் குடிநீர் கிணறுகளோ, நீர்ப்பாசனத் திட்டங்களோ, கால்நடைகளுக்கான கிணறுகளோ குப்பைக் குழியின் 500 மீட்டர் நிலக்கீழ் தூரத்துக்கப்பால் இருக்க வேண்டும்.

உ) இம்முக்கியமான பல்லுயிர்த் தன்மையோ மீளுயிர்க்கும் தன்மையோ உள்ள சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களைச் சூழ அமையக் கூடாது.

ஊ) சூழலில் அரிதானதாகக் கண்ட

சமூக-அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த (நினைவிடங்கள், மதத்தலங்கள், பாடசாலைகள்) இடங்களையும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கான பாதைகளையும் விட்டு 01 கிலோ மீட்டர் தூரம் தள்ளியிருக்க வேண்டும்.

2. குப்பை நிரப்புவதால் வரும் தாக்கம், அதனைக் குறைப்பதற்கான தீர்வுகள் என்பவற்றைக் குறிப்பிட்டு தெரிவு செய்யப்பட்ட இடம் தொடர்பான சூழல் தாக்க அறிக்கை பெறப்பட்டிருக்க வேண்டும்.

3. பொதுமக்கள் அறிவூட்டப்பட்டு அவர்களது கருத்துக்கள் பெறப்பட்டிருக்க வேண்டும். இதற்கென பகிரங்க மன்றமொன்றில் மக்களுக்கு கருத்துச் சொல்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

4. பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈடு மற்றும் மீள்குடியேற்றம் என்பவற்றுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

5. சூழல் வடிவமைப்பு, இதன் நிதி வகையிலான தாக்கங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

சூழல் தாக்க மதிப்பீட்டில் ஏராளமான பிழைகள் காணப்படுகின்றன

சயீட் முஹம்மட் முபாரக்
- சூழலியலாளர்

அருவக்காட்டில் குப்பை கொட்டுவது தொடர்பான சூழல் தாக்க மதிப்பீட்ட றிக்கை முதன் முதலாக 2015 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. பின்னர் அது நிராகரிக்கப் பட்டு மீண்டும் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டது. இறுதியான சூழல் தாக்க மதிப்பீடு எனக் குறிப்பிடப் படாமல் சூழல் தாக்க மதிப்பீட்டு வரைபு என்பதாக அது குறிப்பிடப்பட்டது.

அதாவது சிற்சில விடயங்கள் பின்னர் மேற்கொள்ளப்படும் என்பதாகக் கூறப்பட்டு அவை வரைபுக்குள் உட்புகுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டதே ஒழிய அது சரியான இறுதி மதிப்பீடு எனக் குறிப்பிடப்படவில்லை. வி.எம்.ஏ கன்ஸ்ட்ரக்ஷன் என்னும் தனியார் நிறுவனமே இச்சூழல் தாக்க மதிப்பீட்டை செய்துள்ளது. இதனை எழுதுவதற்கு அரசாங்கத்தால் சுமார் 4 அல்லது 6 லட்சம் ரூபா பணமும் குறித்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடானது வேறு வேறு சூழல் தாக்க மதிப்பீடுகளிலிருந்து பிரதிபண்ணப்பட்டு எழுதப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.

சூழல் தாக்க மதிப்பீட்டு நுலை தயாரித்ததன் பிறகு அதனை 30 நாட்களுக்கு பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட வேண்டும். பிரதேச செயலாளர் அலுவலகம், மாவட்ட அலுவலகங்களில் இது வைக்கப்பட வேண்டும். இது அவசர அவசரமாக செய்யப்பட்ட மதிப்பீடு என்றபடியால் காலம் போதாமல் மத வழிபாட்டுத் தளங்களில் வைக்கப்பட்டது. அதற்கு மக்களது கருத்துக்களை பதிய சி.ஆர் புத்தகமும் வைக்கப்பட்டிருந்தது.

நாம் அதில் எவ்வளவோ கருத்துக்களை பதவிட்டோம். அது குறித்து எவ்வித பதில்களும் எமக்கு வழங்கப்படவில்லை. கிராம சேவகர் அலுவலகத்தில் [illegible] வைக்கப்பட்டு கருத்துப் பதிவுக்கான புத்தகமும் வைக்கப்பட்டது. அங்கும் எமது கருத்துக்களை பதிவுசெய்து கேள்விகளைத் தொடுத்திருந்தோம். அதற்கும் எவ்வித பதில்களும் கிடைக்கவில்லை.

சம்பிக்க ரணவக்க இதனை பலவந்தமாகச் செயற்படுத்தப் பார்க்கின்றார். ஏற்கனவே அனல் மின்சார நிலையம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவினது காலத்தில் தட்டப்பட்டதன் பிறகு மஹிந்த ராஜபக்ஷ தனது காலப்பகுதியில் அதனை அமுல்படுத்தினார். அதே அடிப்படையில் சம்பிக்கவும் இந்தத் திட்டத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட மறுப்புக்களை கவனத்திற்கொள்ளாமல் எந்தவொரு எதிர்ப்பு வந்தாலும் அதனை செய்தே தீருவேன் என்று தன்னை ஒரு வீரனாகக் காட்டிக் கொள்ளப் பார்க்கின்றார். தான் பெரியவன் எனக் காட்டிக்கொள்ளப் பார்க்கின்றார். அண்மையில் அவர் இராணுவத்தை அமர்த்தியேனும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறியிருக்கின்றார்.

சூழல் தாக்க மதிப்பீட்டை மேற்கொண்ட போது அதில் சரியான தகவல்கள் எழுதப்படவில்லை. சூழல் தாக்க மதிப்பீட்டு நூலை தயாரிக்கின்ற போது ஒரு திட்டம் எந்த இடத்தில் உருவாக்கப்படுகின்றதோ அங்குள்ள மக்களிடம் அது தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட வேண்டும். ஆனால் இந்தத் திட்டத்தில் கலந்துரையாடல் விடயம் என்பது பூசி மெழுகப்பட்டுள்ளது.

அருவக்காட்டை அண்டிய சேரக்குளி கிராமம் வண்ணாத்தவில்லு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசமாகும். சூழல் தாக்க மதிப்பீட்டை எழுதியவர்கள் முதலாவது இந்தப் பகுதி மக்களை சந்திக்க வேண்டும். அவர்களுடைய கருத்தறிய வேண்டும். ஊர்மக்களை சந்தித்திருப்பதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டாலும் 8 பேர்களை மாத்திரமே சந்தித்திருக்கிறார்கள். இவர்களுள் ஒருவர் [illegible] ஊர்வாசி தனக்கு இது தொடர்பில் போதிய அறிவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர சூழல் தாக்க மதிப்பீட்டை மேற்கொண்டவர்களுக்கு அப்பகுதியின் எல்லைகள் கூட சரியாக தெரியவில்லை. ஏனெனில் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் குப்பை கொட்டும் இடத்திற்கு மேற்கு எல்லையாக டச்பே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கற்பிட்டி குறிப் பிடப்பட்டுள்ளது. இதனால் இதனை எழுதியவர்களுக்கு அப்பகுதி தொடர்பாக ஆழ்ந்த அறிவு காணப்படவில்லை என்பது புலனாகிறது.

இன்னும் சொல்லப் போனால் வண்ணாத்துவில்லு பிரதேச செயலாளர் பிரிவுக்கான எல்லையாக கிழக்கு பக்கத்தில் புத்தளம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இது பிழையான பதிவு. அடுத்ததாக 1.3 கிலோ மீற்றர் தூரத்திற்கு இடையில் ஊர்மனைகள் கிடையாது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் பிழையான பதிவு. சேரக்குளி என்னும் கத்தோலிக்க மீன்பிடிக் கிராமம் அருவக்காட்டிற்கு 300 மீற்றர் தூரத்தில் அமைந்து காணப்படுகின்றது.

ஒரு நீர் நிலைக்கு 250 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் குப்பை இடும் தளம் காணப்பட வேண்டும் என்று உலக வங்கி தனது ஒழுங்கு விதியில் குறிப்பிட்டுள்ளது. அருவக்காடு குப்பை கொட்டப்படும் இடத்திற்கும் புத்தளம் களப்புக்கும் இடையில் 190 மீற்றர் தூரம் மாத்திரமே காணப்படுகின்றது. இன்னும் அவ்வறிக்கையில் குப்பை மேட்டிற்கு யானை வராமல் இருப்பதற்கு மின்சார வேலி அமைப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. யானைகள் வில்பத்து காட்டிலிருந்தே வர வேண்டும். வில்பத்து காட்டிற்கும் அருவக்காட்டிற்கும் இடையிலான தூரம் 5 கிலோமீற்றர்களாகும்.

புத்தளம் பகுதியில் கச்சான் காற்று [illegible]தாக ஒரு காலப்பகுதியில் காற்று 20 கிலோமீற்றர் வேகத்தில் பலமாக வீசும். இப்படியான காலத்தில் யானைகள் மோப்பம் பிடித்து வரும். ஐந்து விவசாய கிராமங்களை கடந்துகொண்டே யானைகள் குப்பை மேட்டை வந்தடையும். இவ்வாறு வரும் போது எவ்வளவு உயிரிழப்புக்கள், சொத்து சேதங்கள் ஏற்படும் என்பது மட்டிட முடியாமல் போகும். இது தொடர்பில் எவ்வித தகவல்களும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

தொம்பே பகுதியில் சிறந்த முறையில் குப்பை போடப்பட்டு சரிவு நிலம் நிரப்பப்படுவதாக சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தொம்பே பகுதி கடினமான நிலப்பிரதேசமாகும். இங்கு 2 ஏக்கர் நிலத்தில் குப்பை கொட்டப்படுகின்றது. ஆனால் அருவக்காட்டில் 64 ஏக்கர் நிலத்தில் பொலிதீன் கொட்டப்பட வேண்டும். உலக வங்கியின் ஒழுங்கு விதியில் முருகைக்கல் அகழும் பகுதியில் குப்பை போடக்கூடாது என்கின்ற விடயம் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்த விடயங்கள் பற்றி எவ்வித மாற்றுக் கருத்துக்களும் தெரிவிக்கப்படாமல் அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நிலத்தடி நீருக்கு கீழாலும் சுண்ணக்கல் படிவு காணப்படுகிறது. அது நொருங்கக் கூடிய பொருளாகும். சுண்ணக்கல் அகழப்பட்ட குழிக்கு கொங்கிரீட் இட்டு பொலிதீன் விரிப்பதாக கூறப்படுகிறது. ஒரு நாளைக்கு 1200 மெட்ரிக் டொன் கழிவு வீதம் ஒரு வருடத்திற்கு கொட்டக்கூடிய கூலத்தை தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி அதற்கு காணப்படுகின்றதா என சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கையில் சொல்லப்படவில்லை. அதாவது பாரத்தை தாங்கக் கூடிய சக்தி எந்தளவுக்கு காணப்படுகின்றது என்பது அவ்வறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

இன்சி சிமெண்ட் நிறுவனம் சுண்ணக்கற் பாறையை அகழ்ந்தெடுப்பதற்கு டைனமைட் வெடிபொருளை பயன்படுத்துகிறது. இந்த வெடிபொருளின் அதிர்வால் அருகிலுள்ள சேரக்குளி என்னும் கத்தோலிக்க மீன்பிடிக் கிராமத்திலும் கூட அதிர்வுகள் ஏற்படும்.

(பக். 12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத் தூது விட்டு பெரும்பான்மையினர் மனம் கவர்ந்த கண்கட்டு வித்தகர் ரியாத்

• அனஸ் அப்பாஸ்

அப்துல் ஜலீல் மகர்வான் - உதுமான் லெப்பை ஜுனைதீன் தம்பதிகளின் அன்புப் புதல்வர் J.M. ரியாத் அவர்கள் கிண்ணியா, குட்டிக்கராச்சியைச் சேர்ந்தவர். இரண்டு மூத்த சகோதரிகள், இரண்டு மூத்த சகோதரர்கள், ஒரு தம்பி ஆகிய உடன்பிறப்புக்களை கொண்ட இவர், கிண்ணியா மத்திய கல்லூரியினதும், அலெக்ஸா கல்லூரியினதும் பழைய மாணவர். Tourism Management கற்கையை தற்போது தொடர்ந்து வரும் இவர், இலங்கை சுயாதீன தொலைக்காட்சி சேவையின் (ITN) தேசிய மட்ட "Youth With Talent" பிரபல்யமான திறன்வெளிப்படுத்தல் Season - 3 (3rd Generation) போட்டியில் பங்குபற்றி மத்தியஸ்தர்களையும், பார்வையாளர்களையும் பிரம்மிக்க வைக்கும் கண்கட்டு வித்தைகளை வித்தியாசமான அணுகுமுறைகளில் வெளிப்படுத்தி, அனைவரது ஆதரவுடனும் அரை இறுதி (Semi-Final) வரை வெற்றிகரமாக முன்னேறி தற்போது இறுதிச் சுற்றுக்கு (Top 6 இல் ஒருவராக) தெரிவாகி இருக்கின்றார்.

தனது அதீத முயற்சியால் பார்வையாளர்களையும், மத்தியஸ்தர்களையும் கவர்ந்து Golden Buzzer பெற்ற சந்தோஷத்தில் இருக்கும் இவர், இந்நிகழ்ச்சியில் Emerging Talent of the Day - Winner அங்கீகார சான்றும் வென்றுள்ளார்.

கண் கட்டு வித்தை என்றால்..??

நாம் சிறு வயதில் சர்க்கஸ், பொருட்காட்சி, விழாக்கள் போன்றவற்றில் மாயா ஜாலக் காட்சிகளைப் பார்த்திருக்கிறோம். தொலைக்காட்சி வந்த பிறகு அதிலும் பல 'மெஜிக்' தந்திரக் காட்சிகள் வந்தன. வடமொழியில் இந்திர ஜாலம் என இது அழைக்கப்படுகின்றது. தமிழில் இதற்கு கண்கட்டு வித்தை என்று பெயர். ஆனால் அதிலும் வித்தை என்பது சமஸ்கிருதம்! மாயாஜால தந்திரக் காட்சிகள் என்றால் எல்லோருக்கும் இலகுவில் புரிந்துவிடும். எல்லோருக்கும் அதிகம் பிடிக்கும்.

திறன் வெளிப்பாடு

இந்தத் திறனுடன்தான் ரியாத் "Youth with Talent" நிகழ்ச்சியில் ஒவ்வொரு முறையும் பல்வேறு விலங்குகளை தனது மாய வித்தைகளில் பயன்படுத்தி பலரையும் பிரம்மிக்க வைத்திருந்தார். மத்தியஸ்தர்களில் ஒருவராக வருகைதந்திருந்த இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கருத்து தெரிவிக்கையில், இவர் ஒரு மிருகக் காட்சிசாலை என்றார் சிரித்தவாறே. 'விலங்குகளை அடைத்து வைக்க வேண் டாம், அவற்றை சுதந்திரமாக விடுங்கள்' "Cage Free Life SaveThem" ஆகிய கோஷங்களை இவரது வித்தையின் போது காட்சிப்படுத்தினார்.

தேசியக் கொடியைக் காட்டி, பின்னர் அதற்குள்ளிருந்து சமாதானத்தின் சின்னமான புறாவை எடுத்து அதை அன்புடன் பறக்க விட்ட இவரது வித்தை அங்கு குழுமியிருந்த பெரும்பான்மை மக்களை பெரிதும் கவர்ந்தது. மத்தியஸ்தர் ஒருவர், தமிழ் பேசும் ஒரு முஸ்லிமான ரியாத் இந்த வித்தை மூலம் வெளிக்காட்டிய செய்தி தற்போதைய சூழலில் மிகவும் பெறுமதிமிக்கது, பாராட்டுக்குரியது என வாழ்த்தினார். இவர் கட்டாயம் இறுதிச் சுற்றுக்குத் தகுதியானவர் என்றும் கூறினார்.

ஆரம்பத்தில் இலங்கையில் உள்ள கண் கட்டு வித்தகர்கள் தொடர்பில் ரியாத் அதிகம் தேடி இருக்கின்றார். அவர்கள் அனைவருமே பாரம்பரிய வித்தைகளை மாத்திரம் மேற்கொள்வதையே இவர் அவதானித்ததால், வெளிநாடுகளில் உள்ள புதிய வித்தைகளைக் கற்று அவற்றை தனக்கே உரிய பாணியில் நண்பர்களின் ஆலோசனைகளையும் உள்வாங்கி முயற்சித்ததன் விளைவே "Youth with Talent" Season-3 இல் மத்தியஸ்தர்களையும், பார்வையாளர்களையும் அதிகம் கவர்ந்ததற்காக Golden Buzzer ஐ வென்றிருக்கின்றார். இவர் Golden Buzzer வென்ற காணொளி சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டிருந்தது. குறிப்பாக, சிங்கள மொழி மூலமான இந்த நிகழ்ச்சியில் இவர் சரளமாக தாய் மொழி தமிழிலேயே பேசியமையும், அதனை மொழிபெயர்ப்பாளர் அழகாக மொழி பெயர்த்தமையும் வரவேற்கத்தக்கது.

கடந்த முறை "Youth with Talent" Season-2 வில் பங்குபற்றி அரை இறுதிச் சுற்றில் இவர் வெளியேற்றப்பட்டார். அதில் இவர் தனது காட்சிப்படுத்தும் முறையில் விட்ட குறைபாடுகளை நிவர்த்தித்ததன் பயனையே இப்பொழுது இறுதிச் சுற்றுக்கு தெரிவாகியதன் மூலம் காண்பதாகக் குறிப்பிடுகின்றார்.

க.பொ.த சாதாரண தரம் கற்கும் காலப்பகுதியிலேயே ஏனையவர்களை கவர்வதற்காக வித்தைகளை இவர் கற்க ஆரம்பித்துள்ளார். உலக அளவில் Famous Street Magician ஆக கலக்கி வரும் டைனமோவை இவர் தன்னை ஊக்கப்படுத்தும் முன்மாதிரி சக்தியாகக் குறிப்பிடுகின்றார். கண்கட்டு வித்தை (Magic) என்பது உண்மையா? பொய்யா? அது சைத்தானை அல்லது ஜின் வர்க்கத்தினரை வசப்படுத்தி மேற்கொள்ளும் ஒன்றா? என்று பலர் தன்னைப் பார்த்தவுடனே கேட்பதாகவும், ''மெஜிக் என்பது பொய்'' என்பதே தனது நிலைப்பாடு என்றும் குறிப்பிடுகின்றார்.

''பொய் எனும்போது அது ஒரு ஏமாற்று வித்தை. அந்த வித்தை தெரிந்தால் யாரும் அதனை முயற்சிக்கலாம். சாதாரண ஒருவரின் அறிவு எப்படி யோசிக்கும் என்பதைத் தாண்டி ஒரு படி மேலே சென்று சிந்தித்தால் வித்தைகளை மேற்கொள்வது இலகு'' என்று தனது வெற்றியின் இரகசியத்தையும் குறிப்பிடுகின்றார்.

அல்ஹம்துலில்லாஹ், தற்போது தனது 26 ஆவது வயதில் பயணிக்கும் ரியாத், இறைவனுக்கு முதற்கண் நன்றி தெரிவிப்பதுடன், அடுத்து பெற்றோருக்கும், நண்பன் பயாஸ், அன்சர் மாமா, சகோதர, சகோதரிகள், நண்பர்கள், கிண்ணியா மக்கள், நலன்விரும்பிகள், சமூக வலைதளங்கள் ஊடாக ஆதரவு தருவோர், வாக்குகளை தொடர்ந்து வழங்கும் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றார்.

கண்கட்டு வித்தையைத் தவிர சித்திரக்கலையில் இவர் சிறந்து விளங்குகின்றார். குறிப்பாக, Micro Art மிகச் சிறிய பொருட்களில் வரைதலில் இவர் கெட்டிக்காரர் என்கின்றார். வீட்டுத் தோட்டம் செய்வதிலும் அதீத ஆர்வம் கொண்டவர்.

LUCK - KICK

''ஒவ்வொரு மனிதனுக்கும் Luck (அதிஷ்டம்) என்பது ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் வந்தமையும். அந்த Luck ஆனது சரியான நேரத்தில் வந்தமையுமானால் அது நமக்குக் கிடைத்த ஒரு Kick'' என ரியாத் கூறிய உற்சாக வார்த்தை அவருக்கு சரியாகப் பொருந்துகின்றது.

சிறந்த உடற்கட்டும், கம்பீரமான குரலும், கண் கவர் காட்சிப்படுத்துகை திறனும் (Presentation Skill) இவர் இறுதிச் சுற்றில் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கையை எமக்குத் தருகின்றது. என்றாலும் தன்னிடமுள்ள இறுதிப் போட்டிக்கான உத்தேச வித்தையை மேற்கொள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றார். தனக்கு ஒரு அனுசரணையாளர் கிடைத்தால் அனைவரும் மூக்கின் மேல் விரல் வைக்குமளவு பிரம்மிக்க வைக்கும் மாய வித்தை ஒன்றை மேற்கொள்ள ஆலோசித்து இருப்பதாகவும் கூறுகின்றார்.

0753333117 என்ற இலக்கத்தில் அவரை தொடர்பு கொள்ளலாம். இறுதிச் சுற்றின் முடிவுகள் பொதுமக்கள் வழங்கும் SMS ஆதரவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால், ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி நடைபெறும் நேரடி இறுதிச் சுற்றை தொலைக்காட்சி வழியே பார்க்க இப்பொழுதே ஆயத்தமாக இருங்கள். இவரது கண்கட்டு வித்தைகளை Youtube தளத்தில் இப்பொழுது நீங்கள் பார்க்கலாம். இவர் தன் வித்தைகளால் உங்களையும் கட்டிப் போட்டால் உடனே உங்கள் மொபைலில் ''ITN YWT 08'' என டைப் செய்து 9922 என்ற இலக்கத்துக்கு SMS செய்து வித்தகர் ரியாதை வெற்றி பெறச் செய்ய உதவலாம்.

திகன முஸ்லிம்கள்... (01 ஆம் பக்கத் தொடர்)

குறித்த தாக்குதல்கள் குகூஊ மற்றும் பொலி ஸாரின் உதவியுடனேயே நடத்தப்பட்டதாக தாக்குதலுக்குள்ளான பலரும் நேரடிச் சாட்சிய மளித்துள்ளனர். அரசாங்கத் தரப்பில் முறைப்பாடு செய்தும் பலன் கிடைக்காததால் அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறையிட்ட போதும் இதுவரை அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

2018 மே மாதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 03 நாள் கள விஜயமொன்றை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களிடம் தகவல் திரட்டியது. இந்தத் தகவலை வைத்து கடந்த ஜூலை மாதம் அறிக்கை வெளியிடப்படும் என மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. ஆனாலும் 10 மாதங்கள் கடந்த பின்னும் இந்த அறிக்கை வெளியிடப்படாமல் இருப்பது குறித்து பிரதேசவாசிகள் அச்சத்தையும் அவநம்பிக்கையையும் வெளியிட்டு வருகின்றனர். இது தொடர்பில் மீள்பார்வை மனித உரிமைகள் ஆணைக் குழுவைத் தொடர்பு கொண்டு கேட்ட போது மாவனல்லை அறிக்கையையும் சேர்த்து விரைவில் வெளியிடுவதாகத் தெரிவித்தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்துத் தரப்பினராலும் முஸ்லிம்களுக்கான நீதி மறுக்கப்பட்டு வருவதையிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி (TNPF) யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜெனீவாவில் நடைபெற்ற 40 ஆவது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் குறிப்பிட்டிருந்தார். இவருக்கு முன்னதாக இலங்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் ஸ்தானிகர் மிஷல் பாச்லே, சிங்கள பௌத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் முஸ்லிம்களின் உடைமைகள் மீதும் வணக்கஸ்தலங்கள் மீதும் தாக்குதல் நடத்தினர் என்று குறிப்பிட்டிருந்தார்.

தாக்குதல் நடந்து சில தினங்களில் கண்டிப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த வன்முறைகளுக்குப் பின்னால் உள்ளவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்திருந்தார்.

இலங்கை... (01 ஆம் பக்கத் தொடர்)

மித்ரசக்தி இராணுவப் பயிற்சிகள் ஒவ்வொரு வருடமும் இந்தியாவிலும் இலங்கையிலுமாக மாறி மாறி நடைபெற்று வருகின்றன. கடந்த வருடம் பூனேயில் நடைபெற்ற மித்ரசக்தி V இராணுவப் பயிற்சிகளில் இலங்கையில் இருந்து 120 இராணுவ வீரர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இராணுவங்களுக்கிடையில் பிராந்தியத்தில் நடைபெறுகின்ற மிகப்பெரிய இரு தரப்பு இராணுவப் பயிற்சி இதுவாகும். கடந்த கால அனுபவங்களை வைத்து இந்தப் பயிற்சித் திட்டம் முன்னரை விட மேம்படுத்தப்பட்டு நடத்தப்பட்டு வருவதாக இலங்கைக்கான இந்திய த் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தப் பயிற்சிகளின் ஊடாக பன்னாட்டுப் பயங்கரவாதங்களையும் எதிர்கொள்வதற்கான தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புதல், கூட்டு தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொள்தல் போன்றவற்றில் இரு தரப்பும் தமது அனுபவங்களையும் திறமைகளையும் பரிமாறிக் கொள்ளவும் பயிற்சி எடுக்கவும் உள்ளனர் எனவும் இந்தியத் தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

பிறை ஆலோசனைக்... (01 ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.எம். ஹலீமினால் நியமிக்கப்பட்டது. இதில் அமைச்சின் சார்பில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ். மலிக், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி, பிரதித் தலைவர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத், பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம். முபாரக், கொழும்பு பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் சட்டத்தரணி நத்வி பஹாஉதீன், பிறைக் குழுத் தலைவர் அஷ்ஷெய்க் அப்துல் ஹமீத் பஹ்ஜி, வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். யாஸீன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் தீர்மானமெடுப்பதையும் நடைமுறைப்படுத்துவதையும் இலகுபடுத்துவதற்குமாக முன்னர் பிரேரிக்கப்பட்ட 15 பேர் கொண்ட குழுவுக்கான அங்கத்தவர்களும் தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவில் இருந்து 05 பேரும், கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இருந்து ஐந்து பேரும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலிருந்து 05 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர இந்த ஆலோசனைக் குழு தனது இரண்டாவது கூட்டத்தை நடத்துவதற்கு திகதி குறிக்கப்பட்ட போதும் அங்கத்தவர்கள் நேரம் ஒதுக்குவதில் ஏற்பட்ட தடங்கலினால் கூட்டம் நடத்தப்படவில்லை எனத் தெரிகிறது.

முஸ்லிம்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ரமழான் மாதத்தின் தலைப் பிறையை தீர்மானிப்பதற்கான காலம் நெருங்கி வரும் நிலையில் பிறை ஆலோசனைக் குழுவின் செயற்பாடுகள் இன்னும் மந்த கதியிலேயே நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

பொத்துவில்... (01 ஆம் பக்கத் தொடர்)

பொத்துவில் பிரதேசத்தினை அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருந்து பிரித்தும், உஹன பிரதேசத்தை அம்பாறை கல்வி வலயத்தில் இருந்து பிரித்தும் இரண்டு புதிய கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உஹன கல்வி வலயம் மே 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்துடன் கிழக்கு மாகாணத்தின் கல்வி வலயங்கள் 19 ஆக அதிகரிக்கின்றது.

பொத்துவில் பிரதேச மாணவர்களின் கல்வி சம்பந்தமாக அப்பிரதேச அதிபர்களும் ஆசிரியர்களும் 55 கிலோமீற்றர் அப்பாலுள்ள அக்கரைப்பற்று வலயத்துக்கு அடிக்கடி செல்ல வேண்டியுள்ளது. பொத்துவிலில் வலயக் கல்வி அலுவலகம் அமைந்தால் லாகுகல, பாணம, பொத்துவில் பிரதேசங்களின் 30 க்கும் மேற்பட்ட பாடசாலைகளின் செயற்பாடுகளை நெறிப்படுத்த முடியும்.

2014 இல் பொத்துவில் பிரதேசத்துக்கான உப வலயக் கல்வி அலுவலகத்தை வலயக் கல்வி அலுவலகமாக மாற்றுவதற்கான முன்னெடுப்புக்கள் நடந்திருக்கவில்லை என ஆளுனரிடம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

மக்களின்... (01 ஆம் பக்கத் தொடர்)

பெயரில் மக்கள் மைய யாப்பினை உருவாக்குவதற்கான அமைப்பொன்றைத் தோற்றுவித்துள்ளனர்.

மக்கள் மைய யாப்பின் முக்கியத்துவத்தை விளங்க வைக்கும் நோக்கில் நாடு தழுவிய பிரச்சாரங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த இயக்கம் தீர்மானித்திருக்கிறது. அரசியல் யாப்புருவாக்கத்தில் மக்களின் [illegible] பெறுவதே இந்த இயக்கத்தின் பணியாகும்.

இந்த இயக்கத்துடன் இணைந்து மக்கள் மைய யாப்பினை உருவாக்குவதில் பங்களிக்க விரும்புகின்ற சிவில் அமைப்புக்கள் 0727408329 (ரஸா முஹம்மத்), 0718067967 (Dr. சுகத் அமரஜீவ) ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

ஹஜ் சட்டம்.. (01 ஆம் பக்கத் தொடர்)

பொதுமக்கள் தமது கருத்துக்களை வழங்குவதற்கு மேலும் இரண்டு வார காலம் அவகாசம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உத்தேச ஹஜ் உம்ரா சட்டமூலம் தொடர்பில் பொது மக்கள் அபிப்பிராயம் வேண்டப்பட்டிருந்த நிலையில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலும் வரைபுகளைச் சமர்ப்பித்திருந்தன.

சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் மேலும் கால அவகாசம் வேண்டிக் கொண்டதற்கிணங்கவே ஏப்ரல் 09 ஆம் திகதி வரை கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை - சாய்ந்தமருது பிரிவு பிரச்சினையா? தீர்வா?

• தொகுப்பு:
பி.எம். முஜீபுர் ரஹ்மான்

கிழக்கு மாகாண அரசியலில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் அரசியல் எப்போதும் எரிந்து கொண்டே இருக்கிறது. ஆரம்ப காலங்களில் முஸ்லிம் காங்கிரஸின் ஆதிக்கம் தலைவிரித்தாடியது. தனிக்காட்டு ராஜாவாக வீரநடை போட்டுக் கொண்டிருந்தது. அது பல கிளைகளாக பிரிந்து சென்றது. அதில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அங்கு கால் பதித்துச் செல்கிறது. இந்நிலையில் இவை இரண்டுக்கும் அப்பால், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தனது நிலையை உறுதிப் படுத்திக் கொண்டு செல்கிறது.

இந்நிலையில் கல்முனை மாநகர சபை எல்லையில் மீண்டும் அரசியல் புயல் உக்கிரமாக வீசத் தொடங்கியுள்ளது. இதனால், செல்வாக்கோடு இருந்த முஸ்லிம் காங்கிரஸ் சில சவால்களை எதிர்கொள்கிறது. அதாவது, கல்முனை மாநகர சபையிலிருந்து பிரித்து சாய்ந்த மருதுக்கு தனியான பிரதேச சபை வழங்கப்பட வேண்டும் என்று சாய்ந்த மருது மக்கள் போராட்டம் நடாத்துகிறார்கள்.

மறுபுறத்தில் கல்முனை பிரதேச செயலகத்திலிருந்து பிரித்து தனியான அதிகாரமுடைய பிரதேச செயலகமொன்று தரப்பட வேண்டுமென்று தமிழர்களும் கிளர்ந்தெழுந்து கொண்டிருக்கின்றார்கள். இவைகளுக்கு அப்பால் இவ்வாறு பிரிக்கப்படும்போது கல்முனை முஸ்லிம்களின் செல்வாக்கில் பாரிய பின்னடைவுகள் ஏற்படும் என்று இன்னுமொரு சாராரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவைகள் யாவும் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது தனிப் பிரதேச சபை

சாய்ந்தமருது, அம்பாறை மாவட்டத்தில் கல்முனை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள பிரதேசமாகும். 6.5 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட இப்பிரதேசம், பதினேழு கிராம சேவையாளர் பிரிவைக் கொண்டுள்ளது. இங்கு சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொகை வாழ்ந்து வருகிறார்கள். மேலும், 20 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

இப்பிரதேசத்தில் ஒரு மாவட்ட வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், 3 வங்கிகள், 9 பாடசாலைகள், ஒரு கோட்டக் கல்வி அலுவலகம், தனியான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஒரு தபால் நிலையம், 3 உபதபால் நிலையங்கள், சந்தைத் தொகுதி, வர்த்தக நிலையங்கள், பொது நூலகம், தொழில் பயிற்சி நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் மீன்பிடித் துறைமுகங்கள் என்பன காணப்படுகின்றன.

சாய்ந்தமருது மக்கள் நீண்டகாலமாக தங்களுக்கு தனியான பிரதேச சபை கோரிக்கை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது, ஆங்கிலேயர் காலத்தில் 'கரவாகுப்பற்றுக்கு கிராமசேவகர் பிரிவுகளுக்கு இலக்கமிடப்பட்டபோது சாய்ந்தமருதுக்கு கே.பி. 47 தொடக்கம் கே.பி - 53 வரையான ஏழு குறிச்சிகளையும், 1928 இல் உள்ளடக்கி 'கரைவாகு தெற்கு கிராம சபை' உருவாக்கப்பட்டு 10 வட்டாரங்களாகவும் பிரிக்கப்பட்டு இருந்தன.

ஏற்படுத்தித் தர வேண்டும்' என்று கோரினார்.

அதேநேரம், சாய்ந்தமருதை விட குறைந்த சனத்தொகை, வாக்குகளைக் கொண்ட லகுகலைக்கு பிரதேச சபை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், காரைதீவு, நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களுக்குக் கூட பிரதேச சபை வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், சாய்ந்தமருதுக்கு பிரதேச சபை வழங்குவதில் என்ன பிரச்சினை இருக்கிறது?

யாருக்கும் அநீதி இழைப்பதற்காகவோ எவருடையதும் உரிமைகளையும் தட்டிப்பறிக்கும் நோக்கிலோ சாய்ந்த மருது மக்கள் உள்ளூராட்சி சபையைக் கோரவில்லை என்று சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவர் தெரிவித்தார்.

அதேபோன்று இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் உள்ளூராட்சி

பிரிவு சமூகத்திற்கு பாதிப்பே

சாய்ந்தமருதை தனியாகப் பிரித்துக் கொடுப்பதில் கல்முனை பிரதேசத்திற்கு பாரிய பிரச்சினைகள் இருக்கின்றது. அதாவது, முன்னைய உள்ளூராட்சி சபையில் கரைவாகு வடக்கு, கரைவாகு மேற்கு என்றிருந்த போது தாழவெட்டுவான் சந்தியிலிருந்து தான் அந்தப் பிரிப்பு இருந்ததென்பது மருதமுனை, கல்முனை மக்களுக்கு நன்கு தெரியும்.

ஆனால், இவ்வாறான பிரிப்பு சம்பந்தமான பகிரங்கமான பிரேரணைகள் கோரப்படுகின்ற போது, கடற்கரை பள்ளிவாசல் வீதியை அடிப்படையாக வைத்து பிரிக்கப்பட வேண்டும் என கல்முனை பிரதேச தமிழ் மக்கள் சில காலமாக சொல்லி வருகின்றனர். இதன் மூலம் கல்முனை நகரம் துண்டாடப்பட்டு விடும். முஸ்லிம்களுடைய ஆதிக்கம் பாதிக்கப்படும் என்ற ஒரு

அழைக்கப்பட்டன. ஆனால் அப்பிரதேசத்தினுள் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளை அழைக்காதது வேதனைக்குரியது.

கல்முனை மாநகர சபை விவகாரம் தனியே முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டது

மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் குஞ்சித்தம்பி ஏகாம்பரம் தெரிவித்தார்.

மைத்திரியை ஜனாதிபதியாகவும் ரணிலை பிரதமராகவும் கொண்டு வந்தவர்கள் தமிழர்களே. தற்போதைய

அரசாங்கத்தை தாங்கிப் பிடிப்பவர்களும் தமிழ் தரப்பினரே. எனவே இந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலேயே கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்திக் கொள்ள சிறந்த சந்தர்ப்பமாகும். சம்பந்தர் ஐயா இதை நிச்சயம் தரமுயர்த்தித் தருவார் என கல்முனை தமிழ் மக்களுக்கு கடந்த தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லை.

ஐ.தே.மு. அரசாங்கத்துக்கு த.தே. கூட்டமைப்பு தொடர்ந்தும் முட்டுக் கொடுத்து வரும் நிலையில் அதிகாரம் மிக்கதாக கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை இப்போதும் வென்று தர முடியும். கல்முனை தமிழ் பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டு 30 வருடங்கள் கடந்துள்ளன.

நிதி, நிர்வாகம், காணி ஆகியன சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே இதற்கு இல்லை. இவையும் கிடைத்தால் இது பூரணத்துவம் அடைந்து விடும். கல்முனை தமிழப்பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படாமல் இருப்பது தமிழருக்கு மாத்திரமன்றி முஸ்லிம்களுக்கும் பாதிப்பாகவே உள்ளது. அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

இது ஒரு ஆபத்தான விடயம். எனவே, இதை மிகவும் பொறுப்புணர்ச்சியோடு கையாள வேண்டிய கடப்பாடும், தார்மீகப் பொறுப்பும் அரசியல் தலைமைகளுக்கு இருக்கின்றது. இதை மனதில் நிறுத்தியவர்களாகத்தான் இப்பிரச்சினைகளை அணுக வேண்டும். இது ஊர் சார்ந்த பிரச்சினையாக மாத்திரம் பார்க்கப்படுகின்ற போது, உணர்ச்சி பூர்வமான விடயமாக மாறி விடுகிறது. மாறாக, இப்பிரச்சினையை பிரதேசம், சமூகம், எதிர்கால சந்ததியினர் என்றே சிந்திக்க வேண்டும். இதனை சுமுகமாக தீர்த்து வைப்பதற்கு முஸ்லிம் அரசியல் கட்சிகள் பிரதேச பிரமுகர்களோடு திறந்த கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்வினை நோக்கி நகர்வதே சிறந்த வழிமுறையாகும்.

> சாய்ந்தமருதுக்கு பிரதேச சபை வழங்கு வதில் என்ன பிரச்சினை இருக்கிறது? யாருக்கும் அநீதி இழைப்பதற்காகவோ எவருடையதும் உரிமைகளையும் தட்டிப்பறிக்கும் நோக்கிலோ சாய்ந்த மருது மக்கள் உள்ளூராட்சி சபையைக் கோரவில்லை

மட்டுமல்ல. இதில் தமிழர்களுக்கும் சம்பந்தமிருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது. ஒருவேளை கல்முனை மாநகர சபையிலிருந்து சாய்ந்தமருது தனியான நகரசபையாக பிரித்து உருவாக்கப்படுமானால் ஏனைய பிரதேசங்கள் அனைத்தும் இணைந்து ஒரு தனியான மாநகர சபையாக இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இதனை 03, 04 ஆக கூறுபோட அனுமதிக்க முடியாது.

சாய்ந்தமருதுக்கு நகரசபை பிரித்துக் கொடுப்பதில் தமிழர்களாகிய எமக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. சாய்ந்தமருதில் தனி முஸ்லிம்களே வாழ்கிறார்கள். ஒரு காலத்தில் தமிழர்களும் அப்பிரதேசத்தில் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்ந்த தடயங்கள் யாவும் அழிக்கப்பட்டு மறைக்கப்பட்டுள்ளன. எனினும் கல்முனையில் இன்னமும் தமிழ் மக்கள் அவற்றையெல்லாம் மறந்து சகோதர முஸ்லிம் மக்களுடன் ஐக்கியத்துடன் தான் வாழ்ந்து வருகிறார்கள். கல்முனை

சபை இல்லாத பிரதேச செயலகத்தைக் கொண்ட பிரதேச செயலகம் என்றால், அது சாய்ந்தமருது பிரதேச செயலகம் தான் என்றும் சிறிய சிறிய ஊர்களுக்கும் பிரதேச சபைகள் இருக்கின்றபோதிலும்

பிரச்சினை உருவானால், பிரிப்பு என்பது சாத்தியமாகாது.

கல்முனை நகரத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகிறார்கள். இங்கு 70 ஆயிரம் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். ஆனால், சாய்ந்தமருதை தனியாகப் பிரித்துச் சென்றால், முஸ்லிம்களின் சனத்தொகை சுமார் 40 ஆயிரமாக குறைந்துவிடும். ஆகவே, சாய்ந்தமருதை தனியாகப் பிரித்துக் கொள்வதினால் கல்முனை மாநகர சபையின் அரசியல் அதிகாரம் முஸ்லிம்களிடம் இருந்து பறிபோய்விடும்.

மேலும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை அமைத்தல் தொடர்பான சட்டத்தில், பிரிப்பதில் பல சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றன. அதாவது, மாநகர சபையில் இருந்து பிரியும்போது அதன் ஒழுங்கில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதனால் இப்பிரதேசம் மற்றும் அயல் பிரதேசங்கள் மேலும் பிரிந்து காணிகள், நிலங்கள் துண்டாடப்படும் நிலை ஏற்படும்.

தமிழர்களின் நிலைப்பாடு

கடந்த 26 ஆம் திகதி கல்முனை மாநகர சபை மற்றும் சாய்ந்தமருது விவகாரம் தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன [illegible] [illegible] மற்றும் [illegible] மட்டுமே

இது 1987 இல் கொண்டு வரப்பட்ட பிரதேச சபைகள் சட்டத்தின் பின்பே கல்முனையோடு இணைக்கப்பட்டு கல்முனை பிரதேச சபையின் எல்லைக்குள் கொண்டுவரப்பட்டது. ஆனால், 1999 ஆம் ஆண்டு 'பிரதேச சபைகள் திருத்த சட்டமூல விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் 'சாய்ந்த மருதுக்குத் தனியான பிரதேச சபையை

இந்த பெரிய ஊருக்கு உள்ளூராட்சி சபை இல்லாதது கவலையானதும் அநீதியானதுமான விடயமாகும் என்றும் தெரிவித்தார்.

சாய்ந்தமருது மக்களின் உள்ளக் குமுறல்களை அரசாங்கமும் அரசியல்வாதிகளும் உதாசீனம் செய்துள்ளதாகவும், அவர்களது கோரிக்கைக்கு விரைந்து நிவாரணமளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சூழல் தாக்க... (10 ஆம் பக்கத் தொடர்)

அவ்வளவு தூரம் அதிர்வு ஏற்படும் போது பக்கத்திலுள்ள அகழிகளை நிரப்பக் கட்டப்பட்டிருக்கும் கொங்கிரீட் தட்டுக்களும் அதிர்வால் வெடிக்க ஆரம்பிக்கும். இது வெடிக்கும் போது கசிவு நீர் கடலில் கலக்கும் ஆபத் துள்ளது. இதனால் மீன்வளம் பாதிப் படைகிறது. அத்துடன் புத்தளம் முதல் மன்னார் வரையில் நிழத்தடி நீர் (டியுப் வெல்) காணப்படுகின்றது. இதனால் புத்தளம் முதல் மன்னார் வரையான நிலத்தடி நீர் பாதிப்படையும் சாத்தியமும் உள்ளது. இவை குறித்து சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை எவ்வித கருத்துக் களையும் தெரிவிக்கவில்லை.

எனவே இது பரிபூரணமானதொரு சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை அல்ல. சரியான முறையில் இது மேற்கொள்ளப் படவில்லை. சூழல் தாக்க மதிப்பீட்டில் அதிகமான பிழைகள் காணப்படுகின்றன. மக்களை முறையாக சந்திக்காமல் தயாரிக் கப்பட்டுள்ளது. முறையான எல்லைகள் குறிப்பிடப்படவில்லை. என்றவாறு அதிலுள்ள பிழைகளை அடுக்கிக் கொண்டே செல்ல முடியும்.

அருவக்காடு குப்பை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்க கொண்டு செல்ல அவரை சந்திப்பதற்கு 2016ஆம் ஆண்டிலிருந்து முயற்சித்து வருகின்றோம். எவ்வித பதில்களும் இல்லை. ஒரு ஆர்ப்பாட்டத்தை நடாத்தியாவது அவரை சந்திக்கலாம் என்றெண்ணி புத்தளத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு அவரை சந்திக்க சென்ற போது பொலிஸார் எம்மை தாக்கினார்கள். உள்ளூர் அரசியல்வாதிகள் குழப்பத்தை உண்டாக்க வேண்டும் என்று செயற்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வயதெல்லை நிர்ணயம் இஸ்லாமிய ஷரீஆவுக்கு முரண்பட்டதா?

• ஹனான் அஷ்ராவி

முஸ்லிம்கள் திருமண வயதெல்லை ஒன்றை நிர்ணயிப்பது இஸ்லாமிய ஷரீஆவுக்கு முரணானது என்று ஒரு சாராரும், அவ்வாறு நிர்ணயித்துக் கொள்வது ஷரீஆவின் நலன்களுக்கு அமைவானது என்று இன்னொரு சாராரும் விவாதிக்கின்றனர்.

முஸ்லிம் விவாக-விவாகரத்து சட்ட திருத்தம் குறித்த ஓய்வுபெற்ற நீதியரசர் சலீம் மர்சூபின் அறிக்கையில், பெண்ணின் திருமண வயது 18 ஆக வரையறுக்கப்பட வேண்டும் எனவும், அதை விடக் குறைந்த வயதில் அதாவது 17, 16 ஆகிய வயதுகளில் ஒரு பெண் திருமணம் செய்வதாயின், காழியின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருத்தக் குழுவின் சில உறுப்பினர்கள் நிர்ணயம் 16 வயதாக இருக்க வேண்டும் எனவும் அதை விடக் குறைந்த வயதில் திருமணம் செய்வதாயின் காழியின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் மாற்று அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளனர். 16 வயதுக்குக் குறைவான வயது எதுவரை செல்லும் என்பதை மாற்று அபிப்பிராயம் கொண்டோர் மட்டுப்படுத்தவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக-விவாகரத்துச் சட்டத்தின் பிரிவு 23 இல் பருவ வயதை அடைதல் திருமணத்திற்கான தகுதியாகக் கொள்ளப்படுவதோடு, காழி ஒருவரின் அனுமதியின்றி 12 வயதுக்குக் குறைவான சிறுமியை மணம் முடித்தால் அதனைப் பதிவு செய்ய முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான சுமார் 9 ஆண்டு கால இடைவெளியில் திருத்தக் குழுவிலுள்ள 18 உறுப்பினர்களும் பல்வேறு அமர்வுகளில் கலந்துரையாடிய பின்னரே சலீம் மர்சூபின் பிரதான அறிக்கையில் பெண்ணின் வயதெல்லை 18 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் 12 வயதிலிருந்து வயது நிர்ணயத்திற்குச் செல்ல முடியாது என கருதிய இஸ்லாமிய துறைசார்ந்தோரும் நீண்ட கலந்துரையாடல்களுக்குப் பின்னர் 16 வயதை நிர்ணயிக்கலாம் என்ற இணக்கப்பாட்டிற்கு வந்தனர். எவ்வாறாயினும், நீதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் வயது நிர்ணயம் குறித்த உடன்பாடு இதுவரை எட்டப்படவில்லை. குழுவில் உள்ள ஒரு சாரார் 18 என வரையறுத்துள்ள நிலையில், 16 இற்கு மேல் செல்ல முடியாது என்று மாற்று அபிப்பிராயம் கொண்டோர் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் திருமண வயதெல்லையை நிர்ணயம் செய்வது குறித்த ஷரீஆவின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி ஒரு மங்களான பார்வையே கருத்துக் களத்தில் நீடிக்கின்றது. இது குறித்து சில உண்மைகளை முன்வைப்பதற்கு இக்கட்டுரை முயல்கின்றது.

திருமணத்திற்கான வயதெல்லையை நிர்ணயம் செய்வது குறித்து இஸ்லாமிய அறிஞர்களுக்கிடையில் இரண்டு வகை அபிப்பிராயங்கள் உள்ளன. சிலரின் கருத்தில் திருமணத்திற்கு வயதெல்லை அவசியமற்றதாகும். அதாவது சட்ட ரீதியான வயதெல்லை ஒன்றை நிர்ணயம் செய்வது அவசியமற்றது என்ற கருத்தை இவர்கள் கொண்டுள்ளனர்.

இதற்குப் பிரதானமான ஆதாரமாக, ''நீங்கள் அநாதைப் பெண்கள் விடயத்தில் நீதியாக நடந்து கொள்வோமா எனப் பயந்தால் உங்களுக்குப் பிடித்த பெண்களைத் திருமணம் செய்துகொள்ளுங்கள்'' (நிஸா: 3) எனும் வசனத்தை மேற்கோள் காட்டுகின்றனர்.

இவ்வசனத்திற்கு இமாமுல் அஃழம் இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள், பருவ வயதை அடைய முன்பே அநாதைகளைத் திருமணம் செய்வதை இவ்வசனம் ஆகுமாக்குகின்றது எனக் கூறியுள்ளதாக இப்னுல் அறபி குறிப்பிட்டுள்ளார். தேவை ஏற்படுமாயின் அவ்வாறு பருவமடையாத அநாதைப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வது ஆகுமானது என்பதே மாலிக் மத்ஹபினதும் கருத்தாகும் என்று இப்னுல் அறபி தனது அஹ்காமுல் குர்ஆனில் தெரிவித்துள்ளார்.

திருமண வயதெல்லை அவசியமற்றது எனக் கூறுவோர் ஸூறதுல் பகராவின் 232 ஆவது வசனத்தை மற்றொரு ஆதாரமாகக் காட்டுகின்றனர். ''நீங்கள் பெண்களை விவகாரத்துச் செய்து அவர்களது இத்தா காலம் நிறைவுற்றால் அவர்கள் தங்களுக்குரிய துணைவர்களை நேர்மையான முறையில் தேடி திருமணம் செய்துகொள்ள விரும்பினால் அவர்களை நீங்கள் தடுக்காதீர்கள்.''

ஒரு கன்னிப் பெண் வலியின் அனுமதியின்றி திருமணம் செய்து கொள்ள முடியாது என்பதற்கு இவ்வசனம் பலத்த ஆதாரம் எனக் கூறும் இத்தரப்பினர், கன்னிப் பெண்ணாக இருப்பது ஒரு வலிதாரர் திருமணம் முடித்து வைப்பதற்கான தீர்மானத்தை எடுக்கப் போதுமானது. இங்கு நியமமான வயதெல்லை ஒன்று கிடையாது என இத்தரப்பினர் வாதாடுகின்றனர்.

இதேபோன்று ஆயிஷா (ரழி) அவர்கள் மிக இளம் வயதில் திருமணம் செய்துகொண்டார்கள் எனும் சம்பவத்தை ஹதீஸ்கள் மூலம் இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். இந்த வகையில் ஸஹீஹுல் முஸ்லிமில் 1422 ஆவது ஹதீஸ் புகாரியில் 5132 ஆவது ஹதீஸ், நஸாஈயில் 3255 ஆவது ஹதீஸ், இப்னு ஹிப்பானில் 7118 ஆவது ஹதீஸ் என்பன ஆயிஷா (ரழி) அவர்களை 6 வயதில் திருமணம் செய்தார்கள் எனக் குறிப்பிடுகின்றன. இப்னு மாஜாவின் 1534 ஆவது ஹதீஸ் 7 வயதில் திருமணம் செய்தார்கள் என்றும் மற்றொரு அறிவிப்பில் 9 வயதில் திருமணம் செய்தார்கள் எனவும் வந்துள்ளது. இவை பெண்ணின் திருமண வயதெல்லை நிர்ணயம் அவசிய மற்று என்பதைக் காட்டுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

அலி (ரழி) தனது மகள் உம்மு குல்தூமை அவள் சிறுமியாக இருந்த போது உமர் இப்னு கத்தாப் (ரழி) அவர்களுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார். (இப்னு குதாமா, அல் முக்னி 6/487)

இச்சம்பவங்களைக் குறிப்பிடும் இமாம் இப்னு ஹஜ்ர் அல் அஸ்கலானி, தனது பத்ஹுல் பாரியில் வளர்ந்த கன்னிப் பெண்களை கட்டாயத் திருமணம் செய்து வைத்தல் கூடுமா, கூடாதா என்ற கருத்து வேறுபாடு அறிஞர்கள் மத்தியில் காணப்பட்டாலும், சிறுமிகள் அவர்களின் பெற்றோரால் கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்பட்டமை அது ஆகுமானது என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது என்பதையே எடுத்துக் காட்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய ஆதாரங்களை முன்வைப்போர் பெண்ணின் திருமண வயதெல்லையை நிர்ணயம் செய்வது அவசியமில்லை எனவும் அதற்கொரு வயதெல்லை கிடையாது எனவும் கருதுகின்றனர்.

திருமண வயதெல்லை நிர்ணயம் அவசியமானது எனக் கருதும் இஸ்லாமிய சட்டவியலாளர்களில் ஷெய்க் அப்துல் யூஸுப் அல் கர்ளாவி, அஷ்ஷெய்க் இப்னு உஸைமின், முஹம்மத் அல் தகீமி, நாஜி அல் அறபி, அப்துல் முஹ்ஸின் அபீ கான் போன்றோர் முக்கியமானவர்கள். அவர்கள் தமது வாதத்திற்குப் பின்வரும் ஆதாரங்களை முன்வைக்கின்றனர்.

1. அநாதைகளை அவர்கள் திருமணப் பருவத்தை அடையும் வரை சோதித்து வாருங்கள். (நிஸா: 06)

இவ்வசனத்திலுள்ள திருமணப் பருவத்தை அடைதல் என்ற சொற்பிரயோகம் திருமணத்திற்கான வயதெல்லையை நிர்ணயிக்க முடியும் என்பதைக் காட்டுவதாக மேற்குறித்த அறிஞர்கள் விளக்குகின்றனர். பெரும்பாலான குர்ஆன் விளக்கவுரையாளர்கள் பருவ வயதை அடையும் காலமே திருமண வயதை அடைதல் மூலம் நாடப்படுகின்றது என விளக்கமளித்துள்ளனர். மாஆலிமுத் தன்ஸீல் எனப்படும் குர்ஆன் விளக்க வுரையில் இமாம் பகவி இக்கருத்தை விளக்கியுள்ளார்.

பருவ வயதை அடைவதையே இது குறிக்கின்றது எனவும், இவ்வாறு பருவ வயதை அடைகின்றவர்களது புத்திசுயாதீனம், மார்க்கப் பற்று போன்ற விவகாரங்கள் பரீட்சிக்கப்பட்ட பின்பே சொத்துக்கள் கையளிக்கப்பட வேண்டும் எனவும் இமாம் பகவீ கூறுகின்றார். மேலும் 15 வயது பூர்த்தியாயின் பருவ வயதை அடைந்தவர்களாகக் கணிக்கப்படலாம் என்ற இப்னு உமர் (ரழி) அவர்களது சம்பவமொன்றை இமாம் பகவி மேற்கோள் காட்டுகின்றார்.

(தொடரும்)

முஃமின்களின் தாய்

அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் - 06

நபி (ஸல்) அவர்கள், அவ்வாறாயின் அவளிடம் விடயத்தைக் கூறுவீராக!'

எனவே, ஹவ்லா (றழி) அபூ பக்ர் (றழி)யின் வீட்டிற்குச் சென்று, அவருக்கு விடயத்தைக் கூறினார். ஜாஹிலிய்யாக் காலத்தில் மனிதர்கள் நட்பால் சகோதரர்களாகியோரின் பெண் பிள்ளைகளைத் திருமணம் முடிக்காத வழக்கமிருந்தது. நட்பு திருமண உறவைக் கூட தடுத்து விடும் என நினைத்துக் கொண்டிருந்தனர்.

அபூபக்ர் (றழி), ''அவள் அவருக்கு பொருத்தமானவளா? ஏனெனில், அவள் அவரின் சகோதரரின் (நண்பனின்) மகள்.'

எனவே, ஹவ்லா (றழி) ரஸூல் (ஸல்) அவர்களிடம் சென்று, விடயத்தைக் கூறினார்.

நபி (ஸல்) அவர்கள், 'திரும்பிச் சென்று அவரிடம் பின்வருமாறு கூறுவீராக, அவர் மார்க்க ரீதியாகவே எனது சகோதரர். எனவே அவரின் மகள் எனக்கு ஹலால் ஆகும்.

அபூபக்ர் (றழி) இவ்விடயத்தை அறிந்ததும் திருமணப் பேச்சு வார்த்தையை ஏற்றுக் கொண்டார்.

ஆயிஷா (றழி) ஜுபைர் பின் முத்இம் இப்னு அதி என்பவருக்கு திருமணம் பேசப்பட்டவராக இருந்தார். இது அபூபக்ர் (றழி)க்கு சங்கடத்தை உண்டுபண்ணியது. எனவே, அவர் ஜுபைரின் தந்தையைச் சந்தித்துப் பேசினார். அவரோ தனது மனைவியிடம் 'நீர் என்ன கூறுகிறீர்' என வினவினார். அவ்வேளையில் ஜுபைரின் குடும்பத்தினர் இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை. -அதற்கு அவள் அபூபக்ர் (றழி)யைப் பார்த்து, அபூ குஹாபாவின் மகனே! எனது மகன் உமது மகளை மணமுடித்தால் உமது மதத்தில் நுழைந்து விட வேண்டுமோ!' என ஆச்சரியத் தொனியில் பேசினாள்.

ஆயிஷா (றழி) சிறுமியாக இருந்த வேளையில், அவரது தாய் விரும்பாத சில செயற்பாடுகள் அவரிடமிருந்து வெளிப்படும். அவரது தாய் அவரைக் தண்டித்து விடுவார். இதனைக் கண்ட நபி (ஸல்) அவர்களுக்கு கவலையேற்பட்டது. எனவே, அவரது தாயிடம் பின்வருமாறு கூறினார்.

'உம்மு ரூமானே! ஆயிஷாவுக்கு நல்ல முறையில் உபதேசித்து, எனது கண்ணியத்தைப் பேணிக் கொள்ளுங்கள்.'

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் (றழி)யின் வீட்டுக்குள் நுழைந்தபோது, ஆயிஷா (றழி) கதவடியில் மறைந்து, அழுது கொண்டிருந்தார். அதற்கான காரணத்தை வினவியபோது, அவரின் தாய் பாலை கொடுப்பதாகக் கூறினார். இக்காட்சியைக் கண்ணுற்ற நபி (ஸல்) அவர்களின் இரு கண்களும் கண்ணீர் வடித்தன. நபி (ஸல்) உம்மு ரூமானைச் சந்தித்து, 'உம்மு ரூமானே! ஆயிஷா விடயத்தில் எனது கண்ணியத்தைப் பேணி நடந்து கொள்ளுமாறு உமக்கு உபதேசித்தேன் தானே!' எனக் கூறினார்.

அதற்கு உம்மு ரூமான், 'அல்லாஹ்வின் தூதரே! ஆயிஷா அபூ பக்ரிடம் உம்மைப் பற்றிக் கூறி, அவருக்கு கோபத்தை உண்டாக்கி னாள்.' நபி (ஸல்) அவர்கள், 'ஆயிஷா அப்படிச் செய்தாளா? (ஹாகிம் இல.6716) எனக் கேட்டார்கள்.

ஆதாரபூர்வமான ஹதீஸ்களில் பின்வருமாறு வந்துள்ளது.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மலக்கு வந்து ஒரு பொருளை வெண்ணிறப் பட்டில் வைத்து பரிசளிப்பதைக் கனவு கண்டார்கள். ரஸூல் (ஸல்) அவர்கள் அப்பரிசு யாது என வினவியபோது, அது ஆயிஷா என பதிலளிக்கப்பட்டது.

ஆயிஷா (றழி) அறிவித்ததாக ஸஹீஹுல் புஹாரியில் பின்வரும் அறிவிப்பு வருகிறது.

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள், '(ஆயிஷாவே!) உம்மைத் திருமணம் முடிக்க முன்னர் உன்னை இரண்டு தடவைகள் எடுத்துக் காண்பிக்கப்பட்டது. மலக்கு உன்னை ஒரு வெண்ணிறப்பட்டில் சுமந்து வந்தார். நான் அவரிடம் திறந்து காட்டுமாறு கூறினேன். அவர் அதனைத் திறந்து காட்டினார். அதிலே நீ இருந்தாய். அதற்கு நான், 'இது அல்லாஹ்விடமிருந்து வந்திருந்தால் நடப்பது போல நடக்கட்டும்' என்றேன். பின்னர் (ஆயிஷாவே!) உன்னை மலக்கு வெண்ணிறமான பட்டாடையில் வைத்து சுமந்து வருவதைக் கண்டேன். நான் அவரிடம் திறந்து காட்டுமாறு கூறினேன். அவர் திறந்து காட்டியபோது, அங்கு நீ இருந்தாய். அதற்கு நான், 'இது அல்லாஹ்விடமிருந்து வந்திருந்தால் நடப்பது போல நடக்கட்டும்' என்று கூறினேன்.

நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (றழி) 6 வயதாக இருந்தபோது திருமணம் முடித் தார்கள்.

அபூபக்ர் (றழி)யுடன் இருந்த தனது உறவைப் பலப்படுத்துவதே நேர காலத்தோடு நடந்த இத்திருமணத்தின் நோக்கமாகும். அறேபியர் வாழ்ந்து கொண்டிருந்த சூடான அறேபிய சூழல் வழமைக்கு மாற்றமான வளர்ச்சிக்கு வழிவகுத்தது. எனவே, அது ஒரு பக்கத்தில் பெண்கள் வேகமாக வளர்வதற்கு உதவியாய் அமைந்தது. இன்னொரு பக்கத்தில் அவர்களிடம் உயர் [illegible] ஆளுமைகளும், சிந்தனா சக்திகளை வளர்ப்பதற்கான வழமைக்கு மாற்றமான தயார் நிலைகளும், திறமைகளும் காணப்பட்டன. அதுபோன்றே, உடம்பால் வளர்வதற்கும் அவசரமாக முதிர்ச்சியடைவதற்குமான பூரண தயார் நிலையும் அவர்களிடம் காணப்படுகிறது.

நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (றழி)யை இச்சிறிய வயதில் திருமணம் முடிக்க உடன்பட்டதற்கான காரணம், ஆயிஷா (றழி)யின் ஒளிவிடும் நுணுக்கமும், பேச்சுத் திறமையும், உயரிய சிந்தனையும், உணர்வுள்ள அறிவும், விடயங்களை உய்த்தறிவதிலுள்ள நுணுக்கமுமே ஆகும்.

இதோ ஆயிஷா (றழி)யே ரஸூல் (ஸல்) அவர்களைத் திருமணம் முடித்த சம்பவத்தைக் கூறுகிறார். ''எனக்கு 6 வயதாக இருக்கும் போது நபி (ஸல்) அவர்கள் என்னைத் திருமணம் முடித்தார்கள். நாம் மதீனாவுக்கு வந்து பனுல் ஹாரிஸ் இப்னு கஸ்ரஜிடம் தங்கினோம். அங்கு நான் விழுந்ததால் எனது முடி துண்டிக்கப்பட்டது. எனக்கு தலை வலியாய் இருந்த வேளையில் எனது தாய் உம்மு ரூமான் என்னிடம் வந்தார். என்னோடு எனது தோழியர் இருந்தனர். எனது தாய் என்னை சத்தமிட்டு அழைத்தார். அவள் என்னிடம் என்ன நாடுகிறாள் என்பதை அறியாத நான், அவளிடம் சென்றேன். எனது கையைப் பிடித்துக் கொண்டு வீட்டின் கதவடியில் என்னை நிற்க வைத்தாள். எனது உள்ளம் அமைதியடையும் வரை நான் நடந்தேன். பின்னர், அவள் தண்ணீரை எடுத்து எனது முகத்தையும், தலையையும் தடவி விட்டு, என்னை வீட்டுக்குள் நுழையச் செய்தாள். அன்ஸாரிய பெண்கள் அவ்வீட்டினுள் இருந்தனர். அவர்கள் நலவும், பரகத்தும் கிடைக்கட்டும் எனக் கூறினர். எனது தாய் அவர்களிடம் என்னை ஒப்படைத்து விட்டாள். அவர்கள் என்னை சீர்படுத்தி, அலங்கரித்து விட்டனர். ரஸூல் (ஸல்) அவர்கள் முற்பகல் நேரத்தில் வந்தார்கள். அப்பெண்கள் என்னை அவரிடம் ஒப்படைத்து விட்டனர். அப்போது எனக்கு 9 வயதாகும்.

இவ்வாறுதான் முஃமின்களின் தாயின் திருமண வைபவம் எளிமையோடும் ஆடம்பரமின்றியும் நடைபெற்றது. இது ஏனைய பெண்களுக்கு ஒரு அழகிய முன்மாதிரி என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. நவீன காலத்தில் திருமணத்தை சிக்கல் நிறைந்ததாக மாற்றி வைத்திருப்போருக்கு இது சிறந்ததொரு படிப்பினையாகும். திருமணங்கள் வீண்விரயத்தினதும், மனோ இச்சையைப் பின்பற்றிய செலவழிப்பினதும் சின்னங்களாக மாறியுள்ளன. மட்டுமன்றி, அவை இஸ்லாமிய அடிப்படைகளுக்கு முரணான பழக்க வழக்கங்களினதும், சடங்குகளினதும் அடை யாளங்களாக மாறிப் போயுள்ளன.

மனிதர்கள் தமது திருமண வைபவங்களில் ஏற்படுத்தி வைத்தி ருக்கின்ற பல நூதனங்களை ரஸூல் (ஸல்) அவர்களின் திருமணம் நடைமுறை ரீதியாக பொய்ப்படுத்துவதாக அமையவில்லையா? முஃமின்களின் தாயான ஆயிஷா (றழி) கூறுவதைக் கேளுங்கள்.

''எனது தாய் என்னை வேளியேற விடாது வீட்டில் தடுத்து வைக்கும் வரை ரஸூல் (ஸல்) அவர்கள் என்னை திருமணம் முடிக்கப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. எனது தாய் எனக்கு திருமண விடயத்தை அறிவிக்கும் வரை நான் வினவாது இருந்தேன்.''

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப்பொருள்... (03 ஆம் பக்கத் தொடர்)

கின்ற தற்போதைய நிலை தொடருமானால் வெகு விரைவில் இலங்கையும் இந்த நிலைக்கு மாறுவது என்பது ஆச்சரியமானதல்ல.

ஐக்கிய ராஜ்ஜியத்தில் நடக்கும் நிலைமைகளை அவதானித்தால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை விளங்கிக் கொள்வது இலகுவாக அமையும். அங்குள்ள இறக்குமதியாளர்களுக்கு அப்பால், உள்ளூர் சில்லறை விநியோகத்தர்களின் சங்கிலித் தொடரை பின்வருமாறு வரிசைப்படுத்த முடியும்.

1. மொத்த விற்பனையாளர் - ஒரு பிரதேசத்தில் மொத்தமாக வாங்குவதும் விற்பனை செய்வதும்
2. வாங்குபவர் - ஒரு பிரதேசத்தில் மொத்தமாக வாங்குபவர்
3. விற்பனையாளர் - ஒரு பிரதேசத்தில் மொத்தமாக விற்பனை செய்பவர்
4. இடமாற்றி (Transporter) - ஐக்கிய ராஜ்ஜியத்தினுள்ளே உள்ளூர் போக்குவரத்தினை வசதிப்படுத்துவோர்
5. களஞ்சியப்படுத்துவோர் - வாங்குவதற்கும் விற்பதற்கும் இடையில் பொருளை வைத்திருப்போர்
6. சில்லறை விற்பனையாளர் - பாவிப்பவர்களுக்கு போதைப் பொருட்களை , வழங்குபவர்
7. கைமாற்றுவோர் (Runner) - சில்லறை விற்பனையாளருக்கு போதைப் பொருட்களை கைமாற்றுவோர்

படிமுறைக் கட்டமைப்பிலிருந்து தொழில் முறை வரை

ஆய்வொன்றின் மூலமாக போதைப் பொருள் வியாபாரத்தின் மற்றுமொரு வெளிப்பாடு கண்டறியப்பட்டுள்ளது. ஹெரோயின் கடத்தலைப் பொருத்தளவில், சில குழுக்களுக்கிடையிலான வரலாற்று ரீதியான தொடர்புகள் படிமுறைக் கட்டமைப்புக்களாக மாறியுள்ளதாக சில ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. பாரம்பரியப் பிரதிநிதிகளுடன் எந்தத் தொடர்புமில்லாத சில தனிநபர்களின் வலையமைப்பு மிகவும் வெளிப்படையாகச் செயற்பட்டு வருகின்றது. (Zhang and Chin 2003:485)

போதைப் பொருள் சந்தைக்கான தெளிவான வரைவிலக்கணம் இல்லாவிட்டாலும், ஆய்வுகள் இரண்டு வகையான விநியோகங்களை குறித்துக் காட்டுகின்றன. ஒன்று பிரமிட் முறை, அடுத்தது துண்டம் துண்டமான எந்தப் படிமுறையும் தொழில்முறையும் இல்லாத சுதந்திரச் சந்தை முறை. இவற்றில் எந்த முறை எந்த நாட்டில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகிறது என்பது கண்டறிவதற்குக் கஷ்டமானது.

அரசாங்கத்தின் ஆதரவு

போதைப் பொருள் வர்த்தகம் என்பது, போதைப் பொருள் முதலைகளினால் மேலிருந்து இயக்கப்படுகின்ற அதிநவீன வர்த்தக ஒழுங்காகும். எனவே ஏனைய நாடுகளிலிருந்தும் ஆய்வுகளிலிருந்தும் இது தொடர்பில் எமது நாடு நிறையக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த வகையில் கடினமான பணியைச் சுமந்திருக்கின்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இவை தொடர்பில் தேவையான வெளிநாட்டு அனுபவங்களையும் நெட்வேர்க் பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் வழி செய்து கொடுக்க வேண்டும். போதைப் பொருள் வர்த்தகம், கண்டு பிடிப்பதைக் கஷ்டமாக்கும் வகையில் அடிக்கடி மாற்றத்துக்கு உட்படுத்தப்படுகிறது. அடிக்கடி மாறும் இந்தச் சத்திர சிகிச்சையை சட்டத்தை அமுல்படுத்துபவர்கள் அறிந்து கொள்ள முடியாவிட்டால் அவர்கள் செல்லாக் காசுகளாகிவிடுவார்கள்.

போதைப் பொருள் பரிமாற்றத்தின் வளர்ச்சியையும் விநியோக வலையமைப்புக்களையும் ஊக்கப்படுத்துகின்ற விடயங்களை சர்வதேச ஆய்வுகள் கண்டுபிடித்திருக்கின்றன. சந்தைப்படுத்தலுக்கான தடைகள் குறைவாக இருப்பது, சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களின் தடுப்பு குறைவாக இருப்பது, உழைக்க முடியுமான வருமானத்தின் அளவு தெளிவாக இருப்பது போன்றனவே அவை. அதனால், வறுமையினால் பாதிக்கப்பட்ட அப்பாவி ஆணோ பெண்ணோ இந்த ஆட்டத்தின் எஜமானர்களின் வலையில் ஆரம்பத்திலேயே விழுந்து விடுவார்கள். இந்த அப்பாவிகள் பின்னர் தமது சொந்த உரிமை கொண்ட எஜமானர்களாக பின்னாளில் மாறிவிடுகிறார்கள்.

போதைப் பொருளுக்கு எதிராகப் போராடுவதற்கான பட்ஜட் எவ்வளவு?

இலங்கையின் போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பிலான ஆய்வுகளை மேம்படுத்துவதற்கு இலங்கை என்ன ஊக்குவிப்புக்களை வழங்கியிருக்கிறது? இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக எத்தனை தொழில்வாண்மையாளர்கள், அறிவியலாளர்கள், புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள்? தேடுதல் நடவடிக்கை முதல் தண்டனை வழங்கப்படும் வரை அரசாங்கம் செலவழிக்கின்ற நேரம், மனித மணித்தியாலங்கள், வளங்கள் தொடர்பில் ஏதேனும் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளனவா?

மொத்த பறிமுதல்கள், தேடுதலுக்காக செலவழிக்கப்பட்ட ஆட்களினதும் வளங்களினதும் எண்ணிக்கை, புலனாய்வுக்கான ஒன்று கூடல்களுக்கான நாட்கள் மற்றும் வாரங்கள், தேடுதல், பறிமுதல், கைதுகளுக்காக செலவழிக்கப்பட்ட நேரம் அனைத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைத்தல், நீதிமன்றமும் அதன் அனைத்துச் சட்ட இயந்திரங்களும் ஒதுக்கிய நேரம், சட்டமா அதிபர் திணைக்களத்தின் வளங்களின் பாவனை, பொலிஸ், புனர்வாழ்வு, மருத்துவ திணைக்களங்களின் சேவை என நீளும் பட்டியலை கணக்கிட்டால்...? இவை எல்லாவற்றுக்குமே அவற்றுடன் இணைந்த செலவுகள் இருக்கின்றன.

எனவே அரசாங்கம் கைது செய்யப்பட்டவர்களின் உரிமை, சுதந்திரம் என்பவற்றில் சமரசம் பேசிக் கொண்டிருக்காமல், கைதுசெய்யப்பட்டதில் இருந்து தீர்ப்பு வழங்குவது வரையான சட்ட நடைமுறைகளை துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் நடவடிக்கைகளைப் பற்றி ஆய்வாளர்கள் வெளிப்படுத்தும் தகவல்கள் வருந்தத்தக்கன. போதைப் பொருள் வியூகத்துக்கென 1.5 பில்லியன் பவுண்களை ஒதுக்கியுள்ள ஐக்கிய ராஜ்ஜியத்தில், ஆய்வாளர்கள் பின்வரும் முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

மே அன்ட் ஹோ (2004:558) அறிக்கையின்படி, "போதைப் பொருள் விநியோகம், அதற்கான கேள்வி, அவற்றின் பிரயோகம் என்பவற்றுக்கிடையிலான உறவு குறைந்தளவில் கருத்தாக்கம் செய்யப்பட்டதாகவும், ஆய்வுகளுக்கு உட்படாததாகவும், குறைவாகவே விளங்கிக் கொள்ளப்பட்டதாகவுமே இந்த நாட்டில் இருக்கிறது."

இது போதைப் பொருள் விவகாரத்தைக் கையாள்வதற்காக 350 பில்லியன் ரூபாக்களை ஒதுக்கிய பின்னர் அவர்கள் வெளியிடும் தகவல். ஐக்கிய ராஜ்ஜியத்தின் முயற்சிகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் நிலை என்ன? தற்போது இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை என்றாலும் முக்கியமானதொரு கேள்வி தொக்கு நிற்கின்றது. நாங்கள் உண்மையிலேயே போதுமான நடவடிக்கை எடுத்தோமா? அல்லது இன்னும் அதிகமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோமா?

ஐ.நா. மனித... (01 ஆம் பக்கத் தொடர்)

எடுத்துரைத்துள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமை உயர் ஸ்தானிகர் மிஷல் பெஷிலெட் கவலை தெரிவித்தார்.

இலங்கையின் டேலி மிரர் ஆங்கில நாளேட்டில் திங்கட்கிழமை வெளியான ஒரு கட்டுரையில், மேற்படி இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவின் ஒரு அங்கத்தவராக ஜெனீவாவில் பங்கேற்ற வட மாகாண ஆளுனரான கலாநிதி சுரேன் ராகவன் கருத்துத் தெரிவிக்கையில் 'இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஐ.நா. மனித உரிமை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கையில் உள்ள சில விடயங்களை எவ்வகையிலும் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது' என ஐ.நா. மனித உரிமை உயர் ஸ்தானிகர் கூறியதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இதன் பிறகு 'அதிக பொறுப்புணர்ச்சி மற்றும் எச்சரிக்கையுடன்' செயல்படுமாறு ஐ.நா. மனித உரிமை உயர் ஸ்தானிகர் அவருடைய இரு முக்கிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியதாகவும் ஆளுனர் ராகவன் கூறியதாக டேலி மிரர் பத்திரிகையின் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் வட மாகாண ஆளுனரின் மேற்படி கூற்றுக்களை முற்றாக மறுக்கும் ஐநா மனித உரிமை உயர் ஸ்தானிகர் பேஷிலெட், 'இந்த இரு கருத்துக்களில் எதுவும் உண்மையானதல்ல' என வலியுறுத்தியுள்ளார். 'ஒன்றில், ஆளுனர் கூறியதை (டெய்லி மிரர்) பத்திரிகை தவறாக புரிந்திருக்க வேண்டும். அல்லது நான் கூறியதை ஆளுனர் தவறாக விளங்கியிருக்க வேண்டும் -அல்லது தவறாக என்னை மேற்கோள் காட்டியிருக்க-வேண்டும்' என உயர் ஸ்தானிகர் விளக்கம் அளித்துள்ளாடர். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த உயர் ஸ்தானிகர் திருமதி பேஷிலேட், மனித உரிமை பேரவைக்கு தான் சமர்பித்த எழுத்து மற்றும் வாய்மூல கூற்றுக்கள் விடயத்தில் தான் ஸ்திரமாக இருப்பதாகவும், அக்கூற்றுக்கள் இலங்கையின் தற்போதைய நிலைமையை மிகச் சரியாக பிரதிபலிப்பதாக தான் நம்புவதாகவும் கூறினார்.

'இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவினருடன் மேற்கொண்ட சம்பாஷனையில் நான் கூறிய கருத்துக்கள் திரிக்கப்பட்டுள்ளமை என்னை மிகவும் கவலை கொள்ளச் செய்துள்ளது' எனக் கூறிய உயர் ஸ்தானிகர், ஜெனீவாவில் நடைபெறும் ஐநா மனித உரிமைப் பேரவையில் கூறப்படும் விடயங்களை பாரிய விதத்தில் தவறாக எடுத்துரை செய்யும் போக்கை இலங்கை பத்திரிகைகள் தொடர்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

சாதாரண வழமையின் பிரகாரம் ஐநா மனித உரிமை உயர் ஸ்தானிகராலயத்தின் அறிக்கையின் பிரதிகளை, அது பிரசுரிக்கப்படுவதற்கு முன் பேரவையின் 47 அங்கத்தவ நாடுகளினதும் வேண்டுகோளினடிப்படையில் இலங்கை அரசிற்கும் பகிரப்பட்டுள்ளது. அறிக்கையை இறுதி மாற்றங்களுடன் பிரசுரிக்கப்படுவதற்கு முன் இலங்கை அரசின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன், கடந்த பெப்ரவரி மாதம் ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முக்கிய உயர் அதிகாரிகளைக் கொண்ட பிரிதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது அவர்கள், இலங்கை அரசின் பல உயர் அதிகாரிகளை சந்தித்து அறிக்கையின் விடயங்கள் தொடர்பாக மிக விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த உயர் ஸ்தானிகர் பேஷிலெட், ஐ.நா. மனித உரிமை பேரவையின் 30/1 (2015) மற்றும் 34/1 (2017) தீர்மானங்களை செயற்படுத்த இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் மக்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க தானும் தனது அதிகாரிகளும் முற்றாக அர்ப்பணமாகியிருப்பதாக உறுதியளித்தார். அத்துடன் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு தீர்மாணத்தின் (40/1) போது, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை அரசு வாக்களித்த சில விடயங்களை பூர்த்தியாக செயற்படுத்த மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டதையும் திருமதி பெஷிலேட் சுட்டிக்காட்டினார்.

அல்குர்ஆனிய... (07 ஆம் பக்கத் தொடர்)

ஒன்றுபட்டவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். எம்முடைய சிறந்த நண்பர்களாக, சிறந்த அயலவர்களாக, சிறந்த மாணவர்களாக முஸ்லிம் மக்களே அதிகம் உள்ளனர். எனக்கும் முஸ்லிம் மக்களுடன் நெருங்கிப் பழகக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்தது.

தமிழ் முஸ்லிம் மக்கள் இன்று இலங்கையில் சிறுபான்மையினராக உள்ளனர். இரு சமூகத்திற்கும் பொதுவான பல பிரச்சினைகளும் காணப்படுகின்றன. ஒரு சிறுபான்மையினம் பாதிக்கப்படுகின்ற போது மற்றைய சிறுபான்மை இனத்தை அது மறைமுகமாகப் பாதிக்கும். தமிழ் முஸ்லிம் உறவு இன்று சிறந்த முறையில் வளர்ந்துகொண்டுள்ளது. அது இன்னும் வளர்ச்சியடைய வேண்டும். அதற்கு இஸ்லாத்தை பற்றிய நூல்கள் இன்னும் பிரசுரிக்கப்பட வேண்டும். அது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும். அல்குர்ஆனிய சிந்தனைகள் என்னும் நூல் எனக்கு வழங்கப்பட்ட போது அதற்கான விமர்சனத்தை என்னால் செய்ய முடியுமா என்று பயப்பட்டேன். ஆனால் அந்த விமர்சனத்தை செய்த பிற்பாடு சமூகத்தில் நல்ல வரவேற்புக்களைப் பெற்றேன்.

முகநூலிலும் சிலர் என்னைப் பாராட்டி எழுதியிருந்தார்கள். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என்னை பாராட்டினார்கள். ஒருவர் என்னிடம் ஒரு இந்துவாக இருந்துகொண்டு இவ்வாறு எப்படிச் செய்தீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் மதத்துக்கு அப்பால் என்னால் நல்ல விடயங்களைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அதனால் எனக்கு அதை செய்யக்கூடியதாக இருந்தது என்றேன்.

இலங்கையில் இது போன்ற சந்தர்ப்பங்கள் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. இதுபோன்ற சம்பவங்கள் இன்னும் இடம்பெற வேண்டும். எதிர்காலத்தில் இந்து நூலை ஆய்வுசெய்து விமர்சனம் செய்யும் முஸ்லிம் அறிவுஜீவிகளும் முன்வர வேண்டும். இது தமிழ் முஸ்லிம் இன நல்லுறவுக்கு மாத்திரமல்லாமல் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் முன்மாதிரியாக அமையும்.

மக்களின்... (06 ஆம் பக்கத் தொடர்)

இருந்த போதிலும் இவர்கள் எவருமே தமது நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சமாக இதனை எடுத்துக் கொள்ளவில்லை. எதிர் நோக்கவுள்ள தேர்தலிலேயே அவர்கள் குறியாக இருக்கிறார்கள்.

கப்பல் தொலை கடலில் இருக்கிறது. கடலும் கொந்தளிப்பாக இருக்கிறது. கப்பலின் திசைகாட்டி மீண்டும் சீர்செய்ய முடியாத அளவுக்கு செயலிழந்திருக்கிறது என்பது மாலுமிக்குத் தெரிந்திருக்கிறது. இருந்த போதிலும் திசைகாட்டி இல்லாவிட்டாலும் பயணத்தைத் தொடர்ந்து சென்று பயணம் முடிந்தபின் திசைகாட்டியைப் பற்றி யோசிப்போம் என்ற கருத்திலேயே அனைவரும் இருக்கின்றனர்.

திசைகாட்டியின் வழிகாட்டலின்றிச் செல்லும் பயணத்தின் இடர்களைக் கருத்திற் கொண்டு திசைகாட்டியொன்றைப் பெற்றுக் கொள்ளும் வரை கப்பலின் பயணத்தை நிறுத்தி வைப்பது தான் சாலப் பொருத்தமானது என்பது இந்த மாலுமிகளுக்குப் புரிவதில்லை.

மக்களின் பொறுப்பு

புதிய யாப்பொன்றை உருவாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பை, மக்களுக்குத் தேவையென்றால் நாடு வீழ்ந்து கிடக்கும் அவல நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கான பொன்னான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். யாப்புருவாக்கச் செயற்பாடுகள் முன்னர் போல அரசியலமைப்புச் சபைக்கே மட்டுப்படுத்தப்படும் நிலைக்கு இடம் கொடாமல், மக்கள் மைய யாப்புருவாக்கச் செயற்பாடாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இது நாட்டையும் சமூகத்தையும் அரசாங்கத்தையும் முழுமையான மாற்றத்துக்குள்ளாக்குவதற்கு மக்களால் செய்யப்படுகின்ற அமைதியான, ஜனநாயக ரீதியான, ஆக்கபூர்வமான புரட்சியாக அமைய முடியும்.

நாட்டின் பொது அமைப்புக்கள் ஒன்றாக இணைந்து அரசியல் கட்சிகளுக்கு இருக்கும் சக்தியைத் தாண்டிய மக்கள் சக்தியைக் கொண்ட பொது அமைப்புக்களின் கூட்டமைப்பை உருவாக்கிக் கொள்ள முடியுமாக இருந்தால், அரசியலமைப்புச் சபையையும் இதனுடைய பங்குதாரராக மாற்றி அதனை மக்கள் யாப்புருவாக்கச் சபையில் மக்கள் தரப்புக்கு வழிகாட்டும் முக்கிய பொறிமுறையாகவும் மாற்ற முடியுமாக இருந்தால் அது இலங்கையின் மொத்த வடிவத்திலும் புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வரும் யாப்புருவாக்கமாக அமைய முடியும்.

தற்பொழுது நாட்டின் அனைத்து அரசியல் தலைவர்களும் மக்களின் நம்பிக்கையை முழுவதுமாக இழந்து, புத்தி பேதலித்துப் போயிருக்கிறார்கள். வெளியில் சொல்லாவிட்டாலும் நாடு இன்று அடைந்துள்ள இழிநிலைக்கு தாங்களும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் என்பதனை அவர்களும் அறிந்தே இருக்கிறார்கள். கறைபடிந்த அரசாங்கத்துக்கு தாங்களே காரணமானவர்கள் என்பதையும் அவர்கள் அறிவார்கள். நாட்டு நிலைமைகள் கட்டுமீறிச் சென்றிருப்பதையும் அவர்கள் அறிந்து தான் வைத்திருக்கிறார்கள்.

அரசியலமைப்புப் பேரவையையும் ஒதுக்கி விடாமல், அதிகமான அதிகாரத்தை மக்களுக்கு வழங்கும் யாப்புருவாக்கத்துக்கு விருப்பமின்றியேனும் இணங்கிச் செல்வதைத் தவிர அரசியலமைப்புப் பேரவைக்கோ அரசியல் கட்சிகளுக்கோ வேறு வழிகள் இல்லை. உண்மையான அரச அதிகாரம் தமக்கன்றி மக்களுக்கே இருக்கிறது என்பதனை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். யாப்பு என்பது ஆளும் தரப்பும் ஆளப்படும் தரப்பும் செய்து கொள்கின்ற ஓர் உடன்படிக்கை. இலங்கையின் அரசியல் சூழலில் நிறைவேற்றதிகாரத்தின் தலைவரும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கத்தவர்களும் ஆளும் தரப்பினராகக் கருதப்படுகின்றனர். அதனால் மக்களை ஆக்கபூர்வமாகச் சம்பந்தப்படுத்தும் யாப்புருவாக்கச் செயற்பாட்டினை எதிர்க்கும் வல்லமை அவர்களுக்கு இருக்க முடியாது.

பொது அமைப்புக்கள் மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் ஒன்றிணைந்து பொது அமைப்புக்களின் கூட்டமைப்பொன்றை உருவாக்கி, மக்களுக்குக் கிடைத்திருக்கின்ற இந்த வரலாற்றுத் தருணத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தால், இதனால் யாப்புருவாக்கச் செயற்பாட்டில் பாரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதனால் தேசியத்தைக் கட்டியெழுப்ப முடியும். அனைவரும் மதிக்கக் கூடிய நவீன அரசொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

மோசடிக்கும் பாரபட்சத்துக்கும் திறமையின்மைக்கும் இடமில்லாமல், மக்களின் அதிகாரத்தினைப் பிரயோகிப்பதற்குள்ள உரிமையை, தேர்தலின் போது வாக்களிக்கின்ற குறுகிய சட்டகத்துக்குள் மட்டுப்படுத்தாமல் அரச நிர்வாகத்தில் மக்களும் பங்கு கொள்வதற்கு இடமளிக்கின்ற அரசியலமைப்பொன்றை உருவாக்குகின்ற நவீன முறை யாப்பொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

நாட்டின் புத்திஜீவிகளும் பொது அமைப்புக்களும் இது தொடர்பில் ஆழமாகச் சிந்திக்கின்ற நிலைக்கு வர வேண்டும்.

மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00	இந்தியா		மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00	ஐக்கிய இராச்சியம் - 5500.00
12 இதழ்கள் - ரூபா 600.00	தனிப் பிரதி	- ரூபா 100.00	மலேசியா - 4000.00	அமெரிக்கா - 6500.00
24 இதழ்கள் - ரூபா 1200.00	ஒரு வருடம்	- ரூபா 3500.00	ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00	அவுஸ்திரேலியா - 4700.00
				சீனா - 4600.00

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்கள் [illegible] அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 381 661 People's Bank A/C: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கி அட்டைகளை நகலெடுத்துத் திருடுதல்

(ATM Skimming)

• இஸ்பஹான் சாப்தீன்

ATM Skimming என்பது முழுக்க முழுக்க போலி அட்டைகளைத் தயாரித்து மேற்கொள்ளப்படும் ஒரு திருட்டாகும். இது இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

01) ATM Card Copying. ATM அட்டையின் தரவுகளை நகலெடுத்தல். அதாவது போலி ATM Card Reader ஐப் பயன்படுத்தி குறித்த ATM Card சம்பந்தமான தகவல்களை பெறுவதே இம்முறையாகும்.

02) ATM PIN Stealing. அதாவது, Camera மற்றும் Key logger ஐ பயன்படுத்தி ATM Card இற்குரிய குறித்த வாடிக்கையாளர் பதியும் PIN இலக்கத்தைத் திருடுதல். அதாவது, திருடர்கள், பல்வேறு கருவிகளை ATM இல் பொருத்தி, வரும் வாடிக்கையாளர்களின் பணப் பரிமாற்றங்களை முழுவதுமாக பதிவு செய்து கொள்வர். பின்னர் குறித்த ATM Card போன்றே போலி Card ஐ உருவாக்கி, திருடிய PIN Number ஐப் பயன்படுத்தி குறித்த தனிநபர்களின் வங்கிக் கணக்குகளில் இருந்து பணத்தை திருடுவர். இந்த முறை மூலமே அதிகமான திருட்டுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற ATM திருட்டுக்கள் கூட இந்த வழிமுறைகள் மூலமே மேற்கொள்ளப்பட்டன.

ATM பாவனையாளர்கள் என்ற வகையில் இப்படியான திருட்டுகளில் இருந்து நாம் எப்படியும் பாதுகாப்பு பெறலாம்.

1. பாதுகாப்பான ATM இயந்திரங்களைப் பயன்படுத்துதல்.

2. பணம் பெற ATM இல் பதிவு செய்யும் தங்கள் PIN இலக்கத்தை யாருக்கும் தெரியாத வகையில் உடம்பால் மறைத்துக் கொள்ளல்.

3. அட்டையை நுழைவிக்கும் பகுதியோ அல்லது PIN இலக்கம் பதிவு செய்யும் விசைப்பலகையோ (Keyboard) வழமைக்கு மாற்றமாக தடிப்பாக இருப்பது போல் சந்தேகம் ஏற்பட்டால் குறித்த மெஷினை பயன்படுத்தாதிருத்தல்.

4. ATM Machine பல உள்ள இடத்தில், குறித்த ஒரே ஒரு இயந்திரத்தை (Machine) மாத்திரம் சுட்டிக்காட்டி இதனை மாத்திரம் பயன்படுத்துங்கள் என்று சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் போலி ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு இருந்தால் ஒன்றுக்கு இரண்டு முறை பரிசீலித்துக் கொள்ளுங்கள்.

5. நீங்கள் ATM ஐ பயன்படுத்தும் போது யாரும் சந்தேகமாக நடமாடினால் அவர்களிடம் உதவி கேட்காதீர்கள்.

6. உங்கள் அட்டை விசயத்தில் எப்போதும் கவனமாக இருங்கள். யாருக்கும் அவசியம் இன்றி வழங்காதீர்கள்.

7. மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் சந்தேகமான வகையில் தற்காலிக ATM கள் பொருத்தப்பட்டிருந்தால், அவற்றைப் பயன்படுத்தாதீர்கள்.

8. ATM அட்டை விவரங்களை யாரிடமும் பகிராதீர்கள். குறிப்பாக PIN Number ஐ யாரிடமும் சொல்லாதீர்கள். PIN Number என்றால் Personal Identification Number என்று பொருள். எனவே அது உங்களுக்கு மாத்திரம் உரியது. முடிந்தவரை உங்களது Number ஐ பாடம் செய்து கொள்ளுங்கள். துண்டுகளில் எழுதி, அட்டையுடன் இணைத்தே வைத்துக் கொள்ளாதீர்கள்.

9. அதேபோல், Machine இல் இருந்து Card ஐப் பெற்றுக்கொண்ட பின்னர், பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள். வெளியேறும்போது Cancel Button ஐ ஒரு முறை அழுத்திவிட்டு வெளியேறுங்கள்.

10. நீங்கள் வங்கி அல்லது ATM boothகளுக்குள் நுழையும்போது பெறுமதியான ஆபரணங்கள் அணிந்து செல்வதும் பணத்தைப் பெற்ற பின் கையில் எடுத்துக் கொண்டு வெளியில் வருவதும் குற்றவாளிகளுக்கு உங்களை குறிவைக்கக் காரணமாக அமைந்துவிடும்.

11. ATM Slip களை ATM ஐச் சூழவுள்ள பகுதிகளில் எறிந்து விடாதீர்கள். சில வங்கிகள் Slip இல் கணக்கு மீதியோடு உங்கள் வங்கிக் கணக்கு இலக்கத்தையும் பதிந்திருக்கும்.

12. ATM PIN Number ஐ எமக்கு ஏற்றாற் போல் மாற்றிக் கொள்ள முடியும். எனவே, ஒரே Number ஐ தொடர்ந்து பயன்படுத்தாமல் தேவைக்கு ஏற்பமாற்றிக் கொள்ளுங்கள். ATM இயந்திரத்திலேயே அதற்கான வசதி காணப்படுகின்றது.

13. பணம் போட்டாலோ எடுத்தாலோ உடன் உங்கள் கையடக்க தொலைபேசிக்கு குறுஞ்செய்தி வரும்படியான சேவையைச் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

14. EPOS - Electronic Point of sale, அதாவது கடைகளில் ATM Swipe Machine ஐ பயன்படுத்துவார்களாயின் நன்கு அவதானத்துடன் Card இல் பணம் செலுத்துங்கள். எப்போதும் பொருள் கொள்வனவுக்கென்று குறைந்த தொகையை வைத்திருக்கும் அட்டைகளைப் பயன்படுத்துங்கள்.

15. நீங்கள் ஒரு கட்டளையை வழங்க அதற்கேற்ப இயந்திரம் இயங்காவிட்டால், அப்படியான நிலையில் தொடர்ந்தும் அந்த இயந்திரத்தைப் பயன்படுத்தாதீர்கள்.

16. சில வங்கிகள் தற்போது 3rd secure pin என்ற சேவையை வழங்குகின்றன. உங்கள் Card ஐ செலுத்தியபின் வங்கி உங்களை அடையாளம் கண்டுகொள்ள உங்களுக்கு வழங்கி இருக்கும் மற்ற PIN Number ஐ இது குறிக்கும். வழமையான இலக்கத்துக்கு மேலதிகமாக அதனையும் வழங்கினாலேயே பணப் பரிமாற்றத்திற்கு அனுமதியைத் தரும்.

17. சில வங்கிகள் Chip உள்ளடங்கிய ATM Card களை வழங்குகின்றன. இவை சாதாரண Card ஐ விட பாதுகாப்பானவை. இது EMV Chip Card என்று அழைக்கப்படுகிறது. தற்போது, மத்திய வங்கியும் இதனையே பரிந்துரை செய்துள்ளது.

18. உங்கள் ATM Card தொலைந்து விட்டால் உடன் வங்கிக்கு அறிவித்து விடுங்கள். PIN Number இல்லாமலேயே உங்கள் Card மூலம் யாருக்கும் பொருள் கொள்வனவு செய்ய முடியும்.

19. 3 ஆம் தரப்பு கணினி வழியாக அல்லது Cafe வழியாக Online இல் bill payment செய்யும் விசயத்தில் அவதானமாக இருங்கள்.

20. அதிக பணம் வைத்துள்ளவராயின் Biometric Verification முறை அதாவது விரல் ரேகை, கண் போன்றவற்றை காட்டினாலேயே பணம் பெறலாம் இந்த முறையும் இன்று பயன்படுத்தப்படுகிறது. இதுவும் பாதுகாப்பானது.

21. ஏதும் அவசியமோ சந்தேகமோ ஏற்படின் உங்களது வங்கியுடன் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

22. இப்படியான குற்றங்களில் ஈடுபடுவோர் பற்றிய விவரங்கள் தெரிந்தோர் உடனடியாக 011-2422176 அல்லது 011-2326670 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.

எனவே, மேற்சொன்ன விசயங்களை கருத்திற் கொண்டு செயல்படுவது எமது வங்கி அட்டை சார்ந்த திருட்டுக்களில் இருந்து எமது பணத்தைப் பாதுகாத்துக் கொள்ள உதவும்.

சுடச் சுடத்தான்....

பள்ளிவாசல்கள் இரண்டில்
பயங்கர(வாத)த் தாக்குதல்
நியுஸ் வந்தது
நியுஸிலாந்திலிருந்து.

அப்பாவிச் சிறுவனோடு
பெண்களும் வயதாளிகளுமாக
நாற்பத்தொன்பது பேரை
ருசி பார்த்துவிட்டான்
நாசி பயங்கரவாதி.

தொழுகையின் போது
அழுகையைப் பரிசளித்தானே,
அடப்பாவி !
வெள்ளையனுக்கும்
கறுப்புத்தானா இதயம் ?

பரம்பரை பகை தான்
புகைந்தது அங்கே
திட்டம் முன்னரே
தீட்டப்பட்டது தான்.
துப்பாக்கிதான் அவனால்
நீட்டப்பட்டது.

ரவைகள் மட்டுமல்ல
வெறுப்பு வாசகங்களும்
அந்தத் துப்பாக்கியில்.
சிலுவைப் போரின்
நிலுவை தானோ ?

அயோத்தி, மியன்மார்
காத்தான்குடி என்றுதான்
இதுவரை பேசப்பட்டது.
கிறிஸ்ட்சேர்ச் எனவும்
இனிப் பேசப்படும்.

அபாயாவோடு வந்து
ஆறுதல் சொன்னாரே
பிரதமர் அம்மையார்.
அபாயாவால் நியுஸிலாந்து
நிரம்பப் போவதை
கட்டியம் கூறுவதற்கா ?

சுடட்டும் !
தொடர்ந்தும் சுடட்டும்.
சுடச் சுடத்தான்
சூடு சொரணை
பிறக்கும் நெஞ்சங்களில்.

-கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்-



யாவரும் கேளிர்

நாட்டு மன்னர்கள் நாங்கள்

எங்களிடம்
அரியணை இருக்கின்றது
அரண்மனை இருக்கின்றது
ஆராய்ச்சி மணியும் இருக்கின்றது

அதிகாரம் யாவற்றையும் வைத்திருக்கும்
எங்களிடமே
ஆயுதங்களும் இருக்கின்றது

எங்கள் நெருப்புக்கு நாங்கள்
அடிக்கடி எரிக்கும் (சு)தந்திரக் கலையை
அந்தரங்கமாய்
கற்றுக் கொடுத்தோம்

ஜனநாயகவாதிகள் நாங்கள்
சனங்களே எங்கள் சாம்ராச்சியம்
இனங்களே எங்கள் ராஜதந்திரம்
எங்கள் தீர்ப்புகளே நாங்கள்
இயற்றிய நாட்டுச் சட்டம்

யார் சொன்னார்கள்
[illegible]

ஜிந்தோட்டையில் மௌலவியைத் தாக்குங்கள்
பேருவலையில் வியாபாரிகளைப் பலியிடுங்கள்
திகனயில் வீடுகளுக்கும் கடைகளுக்கும் தீ வையுங்கள்
அம்பாறையில் அளுத்கமையில் இறையில்லங்களை கொளுத்துங்கள்
தெல்தெனியவிலும் தர்காநகரிலும் வேதநூல்களைச் சாம்பலாக்குங்கள்

எதிர்த்தவனை அழியுங்கள்
எடுத்தவனை ஒழியுங்கள்

கொத்துரொட்டியில் கருத்தடை மாத்திரை
கலப்படமில்லை என்றாலும்
கலவரக்காரர்களை காப்பாற்றுங்கள்

பள்ளிகளில் மட்டும் பிள்ளைகளெல்லாம்
பாடிக்கொண்டிருக்கட்டும்
தேசிய கீதத்தை
'அப்ப ஸ்ரீ லங்கா நமோ நமோ மாதா' – என்று

இந்த நாடு பௌத்த நாடு
நாங்களெல்லோரும்
இந்நாட்டு மன்னர்கள்

- இனியவன் இசார்தீன் -
01.03.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி இலக்கம் - 04

2016 இல் உச்ச நிலையை அடைந்திருந்த உலக கொக்கைன் உற்பத்தியின் அளவு என்ன?

- கடந்த இதழில் கேட்கப்பட்ட கேள்விக்கான சரியான

விடை: 30/1

வெற்றியாளர்கள்

500 ரூபா பணப் பரிசினை பெறும் வெற்றியாளர்:

- M.S.M. Munshif - Hemmathagama

ஆறுதல் பரிசினை பெறும் வெற்றியாளர்கள்:

1. M.A. Hairath - Hemmathagama
2. M.I.F. Zainab - Weligama
3. A.W.M. Kiyas - Kinniya

விடைகளை 0777798096 என்ற இலக்கத்துக்கு, உங்களது பெயரையும் ஊரையும் பத்திரிகை வெளியிடப்பட்டு ஒரு வாரத்துக்குள் அனுப்பி வையுங்கள்.

ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்

முஸ்லிம் பெண்களுக்கான உயர் இஸ்லாமிய கலாபீடம் குறிகொடுவ பஹமுன.

புதிய மாணவியர் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை - 2019

எமது கலைத் திட்டத்தில்

- ஆழமான இஸ்லாமியக் கலைகளோடு பல்கலைக்கழக நுழைவுக்கான வழிகாட்டல்கள்.
- தகவல் தொழிநுட்பத்தில் Diploma (NVQ III).
- அறபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ் மொழிகளில் தேர்ச்சி.
- தையல், மனையியல், வீட்டுத் தோட்ட முகாமை மற்றும் இஸ்லாமிய முன்பள்ளி, நவீன அணுகு முறைகளுடன் குர்ஆன் மத்ரஸா நடாத்தும் பயிற்சிகள்.
- குடும்ப வாழ்க்கை, குழந்தை வளர்ப்பு பற்றிய வழிகாட்டல்கள், விஷேட பயிற்சிகள்.
- பயிற்சியின் ஆரம்பம் முதல் இறுதி வரை முழுமையான இஸ்லாமிய ஆளுமை விருத்திக்கான ஆன்மீகப் பண்பாட்டுப் பயிற்சிகள்.
- க.பொ.த.(உ/த) இல் உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல் (Bio Technology) பிரிவில் கற்க விரும்பும் தகுதியுள்ள மாணவிகளுக்கு அதற்கான சந்தர்ப்பம்.

தகைமைகள்

- 17 வயதிற்கு மேற்படாதிருத்தல்.
- 2018 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல்.
- அல் குர்ஆனை சரளமாக ஓதும் ஆற்றலைப் பெற்றிருத்தல்.
- தேகாரோக்கியமுடையவராக இருத்தல்.

ISO 9001 2015 CERTIFIED

எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சை

காலம் : வடக்கு, கிழக்கு, மத்திய, வட மத்திய, மேல் மாகணங்கள்
07.04.2019 (ஞாயிற்றுக்கிழமை)

: வடமேல், தென், ஊவா, சப்ரகமுவ மாகணங்கள்
08.04.2019 (திங்கட் கிழமை)

நேரம் : மு.ப. 9.00 மணி முதல்
இடம்: ஹாதியா வளாகம்

- விண்ணப்பங்கள் அன்றைய தினம் வளாகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பரீட்சிக்கப்படும் ஆவணங்கள்

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
2. உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சா/த) பெறுபேற்றுச் சான்றிதழ்
3. தேசிய அடையாள அட்டை
4. ஏனைய சான்றிதழ்கள்

- மேலதிக தகவல்களுக்கு : 0372247995, 0702256313, 0715561317, 0724189712

Route map

1. கொழும்பு (05) → நாரம்மல → கிளிம்பொள → குரீகொட்டுவ
2. குருநாகல் → நாரம்மல → கிளிம்பொள → குரீகொட்டுவ
3. வாரியபொல → கிளிம்பொள → குரீகொட்டுவ

அதிபர், ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்.

O/L Result வந்துவிட்டது! A/L - Arts செய்வதுதான் உங்கள் திட்டமா?

2018ல் O/L செய்து A/Lல் Arts செய்யத் தீர்மானித்திருக்கும் நீங்கள்...

ஒரு வருடத்துக்கு முன்னரே A/L செய்து
ஒரு வருடத்துக்கு முன்னரே பல்கலைக்கழக வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளுங்கள்!

2018ல் O/L செய்த தமிழ் மொழிமூல மாணவிகளுக்கான

A/L 2020
கலை செயற்திட்டம்

இத்திட்டத்தில் இணைந்து கொள்ளும் மாணவிகள் அடிப்படை மார்க்க விடயங்கள் (தர்பியா, அஹ்லாக், தீனிய்யாத்), தஜ்வீத் பயிற்சிகள், வாழ்க்கைத் திறன் பயிற்சிகள், உளவள ஆலோசனைகள், ஆங்கில மற்றும் கணனி பயிற்சிகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

ஆரம்பம் - ஏப்ரல்

100% பரீட்சையை மையப்படுத்திய இத்திட்டத்தில் குறிப்பிட்ட தொகையான மாணவிகளே சேர்த்துக் கொள்ளப்படுவர்

- அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர் குழாம்
- மேலதிக வகுப்புகள் அவசியமற்ற, பரீட்சையை மையப்படுத்திய கற்றல் ஏற்பாடுகள்
- பாதுகாப்பான/ஒழுக்கமான வதிவிட வசதி

Emerald Ladies College
36/3B, Sirimalwatte Road | Madawala | 081 20 50 600

0777 71 71 29

ராபித்ததுன் நளீமிய்யீன் ஏற்பாடு செய்த 07 ஆவது நளீம் ஹாஜியார் நினைவுப் பேருரை கொழும்பில் நடைபெற்றது. இலங்கை முஸ்லிம்களின் பொருளாதாரம் நேற்று-இன்று-நாளை எனும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். கணேசமூர்த்தி நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

உஸ்தாத் எம்.ஏ. எம். மன்ஸூர் எழுதிய ஜுஸ்உ அம்மவின் மற்றும் சில ஸூறாக்களின் தமிழ் விளக்கவுரையான குர்ஆனிய சிந்தனை - 2 எனும் நூல் வெளியீட்டு விழா கொழும்பில் நடைபெற்றது. பேருவலை ஜாமியா நளீமியா கலாபீடத்தின் 2000 ஆம் ஆண்டின் பட்டதாரிகள் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட முன்னாள் தலைவரும், இலங்கை அரசியலமைப்புச் சபையின் அங்கத்தவருமான பேராசிரியர் என். செல்வகுமாரும், கௌரவ அதிதிகளாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, பேருவலை ஜாமியா நளீமியாவின் பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி உள்ளிட்ட பல பிரமுகர்களும், கல்விமான்களும் கலந்துகொண்டிருந்தனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் அஷ்ஷெய்க். என்.எம். எம். மிப்லி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நூலின் அறிமுகத்தை அஷ். அரபாத் கரீமும், நூலாய்வினை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட ஆய்வுப் பிரிவின் பணிப்பாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ. சர்வேஸ்வரனும் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.